மாணவர்கள் நலனுக்காக

# TIME VOICE

## பத்தாம் வகுப்பு

## சமூக அறிவியல் - தொகுதி 1

100
100

www.Padasalai.Net

தயாரிப்புப் பணி

A. அறிவழகன் M.A., M.Phil., M.Ed.,
வரலாறு முதுகலை ஆசிரியர்.



**A . அறிவழகன் M.A., M.Phil., M.Ed.,**
**வரலாறு முதுகலை ஆசிரியர்,**
**கத்தியவாடி, வேலூர் மாவட்டம்,**
**தொடர்பு எண் - 9944 573722.**

**தயாரிப்பின் நோக்கம் :**

இந்த கையேடு தயாரிப்பின் முதன்மை நோக்கம் மாணவர்கள் இதிலுள்ள விடைக் குறிப்புகளைப் படித்து சமூக அறிவியல் பாடத்தில் அதிக மதிப்பெண் பெற்று சிறந்த மாணவர்களாக உருவாக வேண்டும் என்பதே ஆகும். சமூக அறிவியல் படிக்கும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் நலனுக்காக வேண்டி முழுவீச்சில் தயாரிக்கப்பட்டு உள்ளது. மாணவர்களுக்கு இருக்கக்கூடிய குறுகிய காலத்தில் விரைவாக தேர்விற்கு தயாராகும் வண்ணம் இது மிக எளிமையானதாக இருக்கும் என நம்புகிறேன்.

சமூக அறிவியல் பாடத்தில் அனைத்து மாணவர்களும் நூறு சதவீதம் தேர்ச்சி பெறவேண்டும் என்பதை இலக்காகக் கொண்டுள்ள நமது ஆசிரியர்களின் பணிச் சுமையைக் குறைத்து, நேரத்தை மிச்சப்படுத்தும் வகையில் இந்த கையேட்டினை தயாரித்து வழங்குவதில் வரலாறு ஆசிரியராக நான் பெருமிதம் கொள்கிறோம்.

நன்றி...

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# வரலாறு

## 1. முதல் உலகப்போரின் வெடிப்பும் அதன் பின் விளைவுகளும்

### V. சுருக்கமான விடையளிக்கவும் :

**1. சீன - ஜப்பானியப் போரின் முக்கியத்துவத்தை நீ எவ்வாறு மதிப்பீடு செய்வாய்?**

**சீன - ஜப்பானியப் போரின் முக்கியத்துவம் :**

✶ பெரிய நாடான சீனாவைச் சிறிய நாடான ஜப்பான் தோற்கடித்தது.

✶ கிழக்கு ஆசியாவில் ஜப்பான் வலிமை மிகுந்த அரசு என நிரூபித்தது.

✶ லியோடங் தீபகற்பம் மற்றும் ஆர்தர் துறைமுகத்தை ஜப்பான் கைப்பற்றியது.

**2. மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.**

**மூவர் கூட்டு நாடுகளின் பெயர்கள் :**

✶ இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா ஆகிய மூன்றும் மூவர் கூட்டு நாடுகள்.

✶ இவைகள் நட்புறவு நாடுகள் அல்லது நேச நாடுகள் எனப்படுகின்றது.

**3. ஐரோப்பிய போர்க்குணம் வாய்ந்த தேசியவாதத்தின் மூன்று வடிவங்கள் எவை?**

**ஐரோப்பிய போர்க்குணம் வாய்ந்த தேசியவாதத்தின் மூன்று வடிவங்கள் :**

✶ இங்கிலாந்தின் ஆரவாரமான நாட்டுப்பற்று - Jingoism

✶ பிரான்சின் வெறிகொண்ட நாட்டுப்பற்று - Chauvinism

✶ ஜெர்மனியின் பேரினவாத நாட்டுப்பற்று - Kultur

**4. பதுங்குக் குழிப் போர்முறை குறித்து நீங்கள் அறிந்ததென்ன?**

**பதுங்குக் குழிப் போர்முறை :**

✶ பதுங்குக் குழிகள் உயிர் பிழைக்க போர் வீரர்களால் தோண்டப்படுவது.

✶ எதிரிகளின் சுடுதலில் இருந்து பாதுகாத்துக் கொண்டு நிற்க உதவின.

✶ முதல் உலகப் போரின் போது பதுங்குக் குழிகள் அதிகம் பயன்பட்டன.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com
www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

5. முஸ்தபா கமால் பாட்சா வகித்தப் பாத்திரமென்ன?

முஸ்தபா கமால் பாட்சா வகித்தப் பாத்திரம் :

- ✶ துருக்கி மீண்டும் ஒரு நாடாக மறுபிறவி எடுக்க முக்கிய பங்காற்றினார்.
- ✶ துருக்கி நவீன மயமானது. கிலாபத் பதவிக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

6. ரஷ்யப் புரட்சியின் உலகளாவியத் தாக்கத்தினைக் கோடிட்டுக் காட்டுக?

ரஷ்யப் புரட்சியின் உலகளாவியத் தாக்கம் :

- ✶ பல நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகள் உருவாக்கப்பட்டன.
- ✶ காலனி நாடுகளை விடுதலைக்காக போராட ஊக்குவித்தது.

7. பன்னாட்டுச் சங்கத்தின் தோல்விக்கான இரண்டு காரணங்களைப் பட்டியலிடுக.

பன்னாட்டுச் சங்கத்தின் தோல்விக்கான இரண்டு காரணங்கள் :

- ✶ இத்தாலி, ஜெர்மனி, ஜப்பான் - சங்கத்திற்கு கட்டுப்பட மறுத்தது.
- ✶ அமெரிக்கா பன்னாட்டு சங்கத்தில் உறுப்பினராக சேரவில்லை.

## VI. தலைப்பின் கீழ் வினாக்கள் :

1. ஏகாதிபத்தியம் :

அ) முன்னுரிமை முதலாளித்துவம் குறித்து நீங்கள் அறிந்ததென்ன?

- ✶ சந்தைகளின் மீதும், தங்கள் அரசுகளின் மீதும் ஆதிக்கம் செலுத்துவது.

ஆ) ஜப்பான் எவ்வாறு ஒரு ஏகாதிபத்திய சக்தியாக வடிவெடுத்தது?

- ✶ ஜப்பான் பல துறைகளில் மேற்கத்திய நாடுகளுக்கு நிகராக மாறியது.
- ✶ நவீன ராணுவம், தொழில்துறையில் சிறந்த நாடாக மேலெழுந்தது.

இ) பத்தொன்பதாம் நூற்றாண்டில் தொழில் வளர்ச்சி பெற்ற நாடுகளுக்கு காலனிகள் ஏன் தேவைப்பட்டன?

- ✶ சந்தைகள், கச்சாப்பொருள் ஆகியவற்றுக்காக தேவைப்பட்டன.

ஈ) முதலாளித்துவம் உருவாக்கிய முரண்பாடுகள் யாவை?

- ✶ அதிகளவு வறுமை - அதிகளவு செல்வ குவிப்பு, பேரரசுகள் - சுரண்டப்பட்ட காலனிகள்.
- ✶ குடிசைப் பகுதிகள் - விண்ணை முட்டும் கோபுரங்கள்.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

## 2. ஜெர்மன் பேரரசர் :

**அ) ஜெர்மன் பேரரசர் இரண்டாம் கெய்சர் வில்லியமின் இயல்பு யாது?**

✶ இரக்கமற்ற தன்முனைப்பு, ஆக்கிரமிப்பு மனப்பான்மை கொண்டவர்.

**ஆ) ஜெர்மனின் வன்முறைசார் தேசியம் எவ்வாறு அழைக்கப்பட்டது?**

✶ ஜெர்மனியின் பேரினவாத நாட்டுப்பற்று - Kultur

**இ) மொராக்கோ விவகாரத்தில் கெய்சர் வில்லியம் தலையிட்டதேன்?**

✶ மொராக்கோவை பிரான்ஸ் ஆக்கிரமித்ததை இங்கிலாந்து அனுமதித்தது.

**ஈ) ஜெர்மனியின் ஆப்பிரிக்கக் காலனிகளுக்கு என்ன நேர்ந்தது?**

✶ நேசநாடுகளால் தாக்கப்பட்டு சரணடையும் நிலை ஏற்பட்டது.

## 3. பால்கன் போர்கள் :

**அ) பால்கன் கழகம் ஏன் உருவாக்கப்பட்டது?**

✶ துருக்கியை வீழ்த்தவும், மாசிடோனியாவைக் கைப்பற்றவும்.

**ஆ) முதல் பால்கன் போரின் விளைவுகள் யாவை?**

✶ அல்பேனியா என்ற புதிய நாடு உதயமானது.

✶ மாசிடோனியாவை பால்கன் நாடுகள் பங்கிட்டுக் கொண்டன.

**இ) இப்போரில் தோற்கடிக்கப்பட்டவர்கள் யாவர்?**

✶ துருக்கி மற்றும் பல்கேரியா.

**ஈ) இரண்டாவது பால்கன் போரின் முடிவில் கையெழுத்திடப்பட்ட உடன்படிக்கையின் பெயரென்ன?**

✶ புகாரெஸ்ட் உடன்படிக்கை.

## VII. விரிவான விடையளிக்கவும் :

**1. முதல் உலகப் போருக்கான முக்கியக் காரணங்களை விவாதி.**

**முதல் உலகப் போருக்கான முக்கியக் காரணங்கள் :**

**(i) ஐரோப்பிய நாடுகளின் அணி சேர்க்கைகளும் எதிரணி சேர்க்கைகளும் :**

✶ மூவர் உடன்படிக்கை - ஜெர்மனி, ஆஸ்திரியா - ஹங்கேரி, இத்தாலி.

✶ மூவர் கூட்டு நாடுகள் - இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா.

www.Padasalai.Net

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**(ii) வன்முறை சார்ந்த தேசியம் :**

- ✶ ஒரு நாட்டின் மீதான பற்று மற்றொரு நாட்டை வெறுக்கும் தேவை ஏற்பட்டது.
- ✶ இங்கிலாந்தின் ஆரவாரமான நாட்டுப்பற்று, பிரான்சின் வெறிகொண்ட நாட்டுப்பற்று.

**(iii) ஜெர்மன் பேரரசின் ஆக்கிரமிப்பு மனப்பாங்கு :**

- ✶ ஜெர்மனி பேரரசர் இரண்டாம் கெய்சர் வில்லியமின் ஆக்கிரமிப்பு மனப்பான்மை.
- ✶ ஜெர்மனியே உலகத்தின் தலைவன் என்றார். கப்பற்படை விரிவுபடுத்தப்பட்டது.

**(iv) பிரான்ஸ் ஜெர்மனியோடு கொண்ட பகை :**

- ✶ 1871 இல் அல்சேஸ், லொரைன் பகுதிகளை பிரான்ஸ் ஜெர்மனியிடம் இழந்தது.
- ✶ மொராக்கோ விவகாரத்தில் பிரான்சுக்கு எதிராக ஜெர்மனி தலையிட்டது.

**(v) பால்கன் போர்கள் :**

- ✶ முதல் பால்கன் போரில் துருக்கி தோற்கடிக்கப்பட்டு அதன் பேரரசு சுருங்கியது.
- ✶ இரண்டாவது பால்கன் போரில் பல்கேரியா தோற்கடிக்கப்பட்டது.

**(vi) உடனடிக் காரணம் :**

- ✶ பிரான்ஸ் பெர்டினாண்டு ஆஸ்திரியா - ஹங்கேரி பேரரசரின் வாரிசு ஆவார்.
- ✶ பெர்டினாண்டு செராஜிவோ நகரில் ஒரு செர்பியனால் கொலை செய்யப்பட்டார்.

**2. ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களை கோடிட்டு காட்டுக.**

**ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்கள் :**

- ✶ ஜெர்மனி போர் இழப்பீட்டுத் தொகையாக 6600 மில்லியன் பவுண்டு தரவேண்டும்.
- ✶ ஜெர்மன் படையானது 1,00,000 வீரர்கள் மட்டுமே என்ற அளவில் சுருக்கப்பட்டது.
- ✶ நீர்மூழ்கிக் கப்பல்களையும் போர் விமானங்களையும் வைத்துக் கொள்ளக் கூடாது.
- ✶ ஆஸ்திரியா, ஜெர்மனி ஆகிய இரண்டின் ஒருங்கிணைப்பு தடை செய்யப்பட்டது.
- ✶ ஜெர்மனி தனது கடல் கடந்த காலனிகள் மீதான உரிமையை விட்டுக் கொடுத்தல்.
- ✶ அல்சேஸ் - லொரைன் பகுதிகளை ஜெர்மனி பிரான்சுக்குத் திருப்பித் தரவேண்டும்.
- ✶ ரஷ்யா மற்றும் பல்கேரியா உடனான உடன்படிக்கையை ஜெர்மனி திரும்பப் பெறுதல்.
- ✶ ரைன்லாந்து நேச நாடுகளின் பிடியில் படை நீக்கம் செய்யப்பட்ட பகுதியாக இருக்கும்.

www.Padasalai.Net

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com

**3. லெனின் தலைமையிலான ரஷ்யப் புரட்சியின் போக்கினை விளக்குக.**

**லெனின் தலைமையிலான ரஷ்யப் புரட்சியின் போக்கு :**

- ✶ 1917 இல் ரஷ்யப் புரட்சி வெடித்த போது லெனின் சுவிட்சர்லாந்தில் இருந்தார்.
- ✶ ரஷ்யாவில் புரட்சி தொடர்ந்து நடைபெற வேண்டுமென லெனின் விரும்பினார்.
- ✶ "அனைத்து அதிகாரங்களும் சோவியத்திற்கே" என லெனின் முழக்கமிட்டார்.
- ✶ "ரொட்டி, அமைதி, நிலம்" என்ற லெனின் முழக்கத்தால் மக்கள் கவரப்பட்டனர்.
- ✶ லெனின் போல்ஸ்விக் கட்சியினரிடம் உடனடிப் புரட்சிக்கு அழைப்பு விடுத்தார்.
- ✶ லெனின் தலைமையிலான ரஷ்யப் புரட்சியே அக்டோபர் புரட்சி எனப்படுகிறது.
- ✶ 1917 நவம்பர் 7 இல் அரசுக் கட்டிடங்கள் புரட்சிப் படையால் கைப்பற்றப்பட்டது.
- ✶ 1917 நவம்பர் 8 இல் ரஷ்யாவில் புதிய கம்யூனிஸ்ட் அரசு ஆட்சிக்கு வந்தது.

**4. பன்னாட்டுச் சங்கத்தின் பணிகளை மதிப்பிடுக. அதன் தோல்விக்கான காரணங்களையும் குறிப்பிடுக.**

**பன்னாட்டுச் சங்கத்தின் பணிகள் :**

- ✶ சுவீடனுடன் ஏற்பட்ட பிரச்சனையில் ஆலேண்டு தீவுகள் பின்லாந்துக்குத் தரப்பட்டது.
- ✶ போலந்திற்கும் ஜெர்மனிக்கும் இடையேயான எல்லை பிரச்சனையை தீர்த்து வைத்தது.
- ✶ கிரிஸ் பல்கேரியாவின் மீது படையெடுத்த போது போர் நிறுத்தம் செய்ய உத்தரவிட்டது.
- ✶ 1925 இல் லொக்கர்னோ உடன்படிக்கை ஐரோப்பாவில் அமைதி ஏற்பட வழிவகுத்தது.

**அதன் தோல்விக்கான காரணங்கள் :**

- ✶ இத்தாலி, ஜெர்மனி, ஜப்பான் - சங்கத்தின் ஆணைகளுக்கு கட்டுப்பட மறுத்தன.
- ✶ அமெரிக்கா பன்னாட்டு சங்கத்தில் உறுப்பினராகச் சேராமல் தனித்து இருந்தது.
- ✶ பன்னாட்டு சங்கத்தின் முடிவுகளை செயல்படுத்த தனியாக ராணுவம் இல்லை.
- ✶ முதல் உலகப் போரில் வெற்றி பெற்ற நாடுகளின் அமைப்பாக சங்கம் இருந்தது.

www.Padasalai.Net

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com

## VIII. வரைபடப் பணி :

**உலக வரைபடத்தில் பின்வரும் நாடுகளைக் குறிக்கவும்.**

1. கிரேட் பிரிட்டன்  2. ஜெர்மனி  3. பிரான்ஸ்  4. இத்தாலி
5. மொராக்கோ  6. துருக்கி  7. செர்பியா  8. பாஸ்னியா
9. கிரிஸ்  10. ஆஸ்திரிய-ஹங்கேரி  11. பல்கேரியா  12. ருமேனியா

## IX. காலக்கோடு :

- 1914 - முதல் உலகப்போர் தொடக்கம்
- 1917 - ரஷ்யப் புரட்சி
- 1918 - முதல் உலகப்போர் முடிவு
- 1919 - வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை
- 1920 - பன்னாட்டுச் சங்கம் அமைக்கப்படுதல்

www.Padasalai.Net

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# வரலாறு

## 2. இரு உலகப் போர்களுக்கு இடையில் உலகம்

### V. சுருக்கமாக விடையளிக்கவும்.

**1. இந்தோ-சீனாவில் நடைபெற்ற "வெள்ளை பயங்கரம்" குறித்து நீங்கள் அறிந்ததென்ன?**

**இந்தோ-சீனாவில் நடைபெற்ற வெள்ளை பயங்கரம் :**

- ✶ கம்யூனிஸ்டுகள் தலைமையில் மிகப்பெரும் விவசாயிகள் புரட்சி வெடித்தது.
- ✶ புரட்சி ஒடுக்கப்பட்டு ஆயிரக்கணக்கில் புரட்சியாளர்கள் கொல்லப்பட்டனர்.

**2. ஒட்டாவா பொருளாதார உச்சி மாநாட்டின் முக்கியத்துவம் குறித்து விவாதிக்கவும்.**

**ஒட்டாவா பொருளாதார உச்சி மாநாட்டின் முக்கியத்துவம் :**

- ✶ இங்கிலாந்தும் ஆங்கிலப் பேரரசின் உறுப்பு நாடுகளும் பங்கேற்றன.
- ✶ 1932 இல் மாநாட்டில் இருதரப்பு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.
- ✶ இங்கிலாந்து பொருட்களுக்கு முன்னுரிமை வழங்க ஒத்துக்கொண்டன.

**3. மன்றோ கோட்பாட்டை விளக்குக.**

**மன்றோ கோட்பாடு :**

- ✶ அமெரிக்கக் கண்டத்தின் எந்த பகுதியிலும் அது வடக்கோ தெற்கோ ஐரோப்பியர்கள் தலையிட்டால், அது அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு எதிரான போராகக் கருதப்படும் என மன்றோ அறிவித்தார்.

**4. முசோலினியின் ரோமாபுரி நோக்கிய அணிவகுப்பின் விளைவுகள் யாவை?**

**முசோலினியின் ரோமாபுரி நோக்கிய அணிவகுப்பின் விளைவுகள் :**

- ✶ முசோலினியின் வலிமையைக் கண்டு அரசர் வியந்துபோனார்.
- ✶ இத்தாலிய அரசர், முசோலினியை ஆட்சியமைக்க வரவேற்றார்.

www.Padasalai.Net

5. 1884 - 85 இல் நடைபெற்ற பெர்லின் காலனிய மாநாட்டின் சாரத்தைக் குறிப்பிடுக.

**1884 - 85 இல் நடைபெற்ற பெர்லின் காலனிய மாநாட்டின் சாரம் :**

✶ பெர்லின் மாநாட்டில், காலனி ஆதிக்க சக்திகள் ஆப்பிரிக்காவைத் தங்கள் செல்வாக்கு மண்டலங்களாகப் பிரித்துக் கொள்ளலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது.

6. பொருளாதாரப் பெருமந்தம் இந்திய வேளாண்மையின் மீது எத்தகையத் தாக்கத்தை ஏற்படுத்தியது?

**பொருளாதாரப் பெருமந்தம் இந்திய வேளாண்மையின் மீது ஏற்படுத்திய தாக்கம் :**

✶ வேளாண் உற்பத்திப் பொருட்களின் விலை பாதியாகக் குறைந்தது.

✶ அரசுக்கு விவசாயிகள் செலுத்த வேண்டிய பணம் இரண்டு மடங்காயிற்று.

7. ஸ்மட்ஸ் - ஹெர்சாக் உடன்படிக்கைக்கானக் காரணங்களை விளக்குக.

**ஸ்மட்ஸ் - ஹெர்சாக் உடன்படிக்கைக்கானக் காரணங்கள் :**

✶ நாட்டின் பொருளாதாரப் பிரச்சனைகளை தீர்த்து வைக்க ஒரு கூட்டணி அரசு தேவை.

✶ பொருளாதார பெருமந்தம், வேலையில்லாத் திண்டாட்டம், கடன்சுமை சரிசெய்தல்.

8. "டாலர் ஏகாதிபத்தியம்" - தெளிவுபட விளக்குக.

**டாலர் ஏகாதிபத்தியம் :**

✶ டாலர் ஏகாதிபத்தியம் என்பது தொலைதூர நாடுகளுக்குப் பொருளாதார உதவிகள் செய்வதன் மூலம் அவற்றின் மீது ஆதிக்கம் செலுத்தவும், தக்கவைத்துக் கொள்ளவும், அமெரிக்கா பின்பற்றியக் கொள்கையை குறிக்கிறது.

## VI. தலைப்பின் கீழ் வினாக்கள்.

1. இந்தோ-சீனாவின் காலனிய எதிப்புப் போராட்டம்.

அ) காலனியாதிக்க நீக்கம் எனும் கோட்பாட்டைத் தெளிவுபட விளக்குக.

✶ காலனி ஆதிக்க சக்திகள் காலனிகள் மீது கொண்டுள்ள நிறுவனம் மற்றும் சட்டம் சார்ந்த கட்டுப்பாடுகளைச் சொந்த தேசிய அரசுகளிடம் வழங்குவதாகும்.

www.Padasalai.Net

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net
www.Trb Tnpsc.Com

ஆ) இந்தோ- சீனாவை உருவாக்கிய மூன்று நாடுகள் எவை?

✶ கம்போடியா, லாவோஸ், வியட்நாம்.

இ) காலனியாதிக்க எதிர்ப்பு உணர்வுகள் வளர்வதற்கு கம்யூனிசச் சிந்தனைகள் எவ்வாறு உதவின?

✶ இந்தோ - சீனாவின் செல்வம் காலனியாதிக்க சக்திக்கே பயன்படுவதை உணர்ந்தனர்.

ஈ) இந்தோ- சீனாவின் மைய நீரோட்ட அரசியல் கட்சி எது?

✶ வியட்நாம் தேசியக் கட்சி.

## 2. ஹோ சி மின்.

அ) ஹோ சி மின் எங்கே பிறந்தார்?

✶ 1890 இல் டோங்கிங் - இல் பிறந்தார்.

ஆ) ஹோ சி மின் எவ்வாறு நன்கறியப்பட்ட வியட்நாமின் தேசியவாதியானார்?

✶ வியட்நாமின் விடுதலையை முன்னெடுத்தார்.

இ) ஹோ சி மினின் புரட்சிகர இளைஞர் இயக்கம் குறித்து நீவிர் அறிந்ததென்ன?

✶ 1925 இல் நிறுவப்பட்டது. 1930 இல் விவசாயிகள் புரட்சியை நடத்தியது.

ஈ) வியட்நாம் விடுதலைச் சங்கம் இந்தோ- சீனாவில் எவ்வாறு அழைக்கப்பட்டது?

✶ வியட்மின் என்று அழைக்கப்பட்டது.

www.Padasalai.Net

## 3. தென் அமெரிக்க அரசியல் நிகழ்வுப் போக்குகள்.

அ) ஒட்டு மொத்த தென் அமெரிக்காவும் எந்த ஆண்டில் ஐரோப்பிய மேலாதிக்கத்தில் இருந்து விடுதலை பெற்றது?

✶ 1830 வாக்கில் ஒட்டு மொத்த தென் அமெரிக்காவும் விடுதலை பெற்றது.

ஆ) மத்திய அமெரிக்காவில் எத்தனைக் குடியரசுகள் உருவாயின?

✶ ஐந்து குடியரசுகள் மத்திய அமெரிக்காவில் உருவாயின.

இ) எந்த ஆண்டில் கியூபா அமெரிக்காவால் கைப்பற்றப்பட்டது?

✶ 1898 இல் கியூபாவை அமெரிக்கா கைப்பற்றியது.

ஈ) தென் அமெரிக்காவில் குழுக்களின் ஆட்சிகள் பலராலும் விரும்பப்படாமைக்குக் காரணம் என்ன?

✶ பொருளாதார பெருமந்தம், அமெரிக்காவின் தலையீடு, டாலர் ஏகாதிபத்தியம்.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

## VII. விரிவான விடையளிக்கவும்.

**1. ஜெர்மனியில் ஹிட்லரின் எழுச்சிக்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகளைக் கண்டறியவும்.**

**ஜெர்மனியில் ஹிட்லரின் எழுச்சிக்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகள் :**

- ✶ 1919 இல், ஹிட்லர் உட்பட ஏழு பேர் கொண்ட குழு நாசிசக் கட்சியை நிறுவியது.
- ✶ ஜெர்மனியில் யூதர்களுக்கு எதிரான ஒரு வன்முறைசார் அரசியலை வளர்த்தார்.
- ✶ முதல் உலகப் போரின் போது பவேரியாவின் படையில் சிறப்பாக பணியாற்றினார்.
- ✶ மியூனிச் நகரில் தேசியப் புரட்சியை நடத்திய குற்றத்திற்காக சிறைக்கு சென்றார்.
- ✶ சிறையில் இருந்த போது தனது சுயசரிதையான மெயின் காம்ப் நூலை எழுதினார்.
- ✶ 1932 இல் நடந்த தேர்தலில் கம்யூனிஸ்டுகள் 6,000,000 வாக்குகளைப் பெற்றனர்.
- ✶ முதலாளிகள், வங்கியாளர்கள், நில உரிமையாளர்கள் நாசிசத்தை ஆதரித்தனர்.
- ✶ ஹிட்லர் தவறான வழியில் ஜெர்மனியின் சான்சலராக அதிகாரத்தைப் பிடித்தார்.

**2. உலகப் போர்களுக்கு இடைப்பட்ட காலத்தில் (1919-39) இந்தியாவில் காலனிய நீக்கச் செயல்பாடுகள் எவ்வாறு நடைபெற்றன என்பதனைக் குறித்து வரிசையாக விவரிக்க முயற்சி செய்யவும்.**

**உலகப் போர்களுக்கு இடைப்பட்ட காலத்தில் (1919-39) இந்தியாவில் காலனிய நீக்கச் செயல்பாடுகள் :**

- ✶ 1919 இந்திய அரசுச் சட்டம் கொண்டு வந்த இரட்டையாட்சியை காங்கிரஸ் எதிர்த்தது.
- ✶ இந்தியாவைத் தொழில்மயமாக்க காலனிய அரசு குறைவான நடவடிக்கையே எடுத்தது.
- ✶ 1932 இல் ஒட்டாவா பொருளாதார உச்சி மாநாடு இங்கிலாந்தின் நலநன பாதுகாத்தது.
- ✶ அந்நியச் செலாவணி மாற்றுக் கொள்கை அரசியல் போராட்டங்களைத் தீவிரப்படுத்தியது.
- ✶ விலைவாசி வீழ்ச்சி, இரு மடங்கு வரி விதித்தல் ஆகியவற்றை விவசாயிகள் எதிர்த்தனர்.
- ✶ 1930 இல் சட்டமறுப்பு இயக்கம் கிராமப்புற இந்தியாவில் மாபெரும் வரவேற்பைப் பெற்றது.
- ✶ 1935 இந்திய அரசுச் சட்டத்தின்படி நடந்த தேர்தல்களில் காங்கிரஸ் வெற்றியை பெற்றது.
- ✶ ஆங்கில அரசாங்கம் இந்தியாவை இரண்டாம் உலகப் போரில் ஈடுபடுத்தியதை எதிர்த்தது.

www.Padasalai.Net

**3. தென் ஆப்பிரிக்க தேசிய அரசியலின் எழுச்சி, வளர்ச்சி குறித்து விவரிக்கவும்.**

**தென் ஆப்பிரிக்க தேசிய அரசியலின் எழுச்சி, வளர்ச்சி :**

- ✶ தென்னாப்பிரிக்காவில் இரண்டு முக்கிய அரசியல் கட்சிகள் செயல்பட்டு வந்தன.
- ✶ தென் ஆப்பிரிக்கக் கட்சியைச் சேர்ந்த போதா முதல் பிரதம மந்திரியாக இருந்தார்.
- ✶ தென் ஆப்பிரிக்கக் கட்சியைச் சேர்ந்த ஹெர்சாக் தேசியக் கட்சியை தொடங்கினர்.
- ✶ 1920 இல் ஸ்மட்ஸ் தலைமையிலான தென்னாப்பிரிக்கக் கட்சி ஆட்சியை பிடித்தது.
- ✶ 1924 இல் தொழிலாளர் இயக்கங்களின் ஆதரவுடன் தேசியக் கட்சி வெற்றி பெற்றது.
- ✶ 1923 மற்றும் 1924 இல் கருப்பின மக்களுக்கு எதிரான சட்டங்கள் இயற்றப்பட்டன.
- ✶ 1934 இல் ஹெர்சாக் மற்றும் ஸ்மட்ஸ் கூட்டணியில் ஐக்கிய கட்சி தொடங்கப்பட்டது.
- ✶ ஹெர்சாக் 1939 வரையும், ஸ்மட்ஸ் 1948 வரையும் பிரதமராகப் பணியாற்றினார்கள்.

www.Padasalai.Net

# வரலாறு

## 3. இரண்டாம் உலகப்போர்

### V. சுருக்கமாக விடையளிக்கவும்.

**1. ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் முக்கியச் சரத்துக்களைக் குறிப்பிடுக.**

**ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் முக்கியச் சரத்துக்கள் :**

- ✶ ஜெர்மனி தனது எல்லைகளில் பல பகுதிகளை விட்டுத்தர வேண்டும்.
- ✶ ஜெர்மனி ஆயுதக் குறைப்பு மற்றும் படைக் குறைப்பு செய்ய வேண்டும்.
- ✶ ஜெர்மனி அதிககளவு போர் இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும்.

**2. முதல் உலகப்போருக்குப் பிந்தைய உலகத்தின் மூன்று முக்கிய சர்வாதிகாரிகள் யாவர்?**

**முதல் உலகப்போருக்குப் பிந்தைய உலகத்தின் மூன்று முக்கிய சர்வாதிகாரிகள் :**

- ✶ இத்தாலி - முசோலினி
- ✶ ஜெர்மனி - ஹிட்லர்
- ✶ ஸ்பெயின் - பிராங்கோ

**3. ஹிட்லர் ஜெர்மனி மக்களின் ஆதரவை எவ்வாறு பெற்றார்?**

**ஹிட்லர் ஜெர்மனி மக்களின் ஆதரவை பெற்ற விதம் :**

- ✶ ஹிட்லர் தனது உணர்ச்சிமிக்கப் பேச்சுக்களாலும் வல்லமைமிக்க சொற்பொழிவுகளாலும் ஜெர்மனியை அதன் ராணுவப் புகழ்மிக்க முந்தைய காலத்திற்கு மீண்டும் அழைத்துச் செல்வதாக கூறி மக்களின் ஆதரவைப் பெற்றார்.

**4. முத்துத் துறைமுக நிகழ்வை விவரி.**

**முத்துத் துறைமுக நிகழ்வு :**

- ✶ 1941 டிசம்பரில் முத்து துறைமுகம் மீது ஜப்பானிய விமானப்படை தாக்குதல் நடத்தியது.
- ✶ போர்க் கப்பல்கள், போர் விமானங்கள் அழிக்கப்பட்டன. பல வீரர்கள் கொல்லப்பட்டனர்.
- ✶ அமெரிக்க கப்பற்படை தளமான முத்து துறைமுகம் பெரும் பாதிப்புகளுக்கு உள்ளானது.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

5. பெவரிட்ஜ் அறிக்கை குறித்து நீ அறிந்தது என்ன?

**பெவரிட்ஜ் அறிக்கை :**

✶ பெவரிட்ஜ் அறிக்கையை 1942 இல் பிரிட்டன் வெளியிட்டது.

✶ வறுமை, நோய் ஆகியவற்றை நீக்க, மக்களுக்கு அதிக வருமானம் அளிப்பது.

✶ உடல்நலப் பாதுகாப்பு, கல்வி, வீட்டுவசதி, வேலைவாய்ப்பு ஆகியவற்றை வழங்குவது.

6. பிரெட்டன் உட்ஸ் இரட்டையர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

**பிரெட்டன் உட்ஸ் இரட்டையர்களின் பெயர்கள் :**

✶ பிரெட்டன் உட்ஸ் இரட்டையர்கள் - 1. உலக வங்கி, 2. பன்னாட்டு நிதி அமைப்பு.

✶ இரண்டுமே பிரெட்டன் உட்ஸ் மாநாட்டிற்குப் பின் 1945 இல் நிறுவப்பட்டன.

7. பன்னாட்டு நிதியமைப்பின் (IMF) நோக்கங்கள் யாவை?

**பன்னாட்டு நிதியமைப்பின் (IMF) நோக்கங்கள் :**

✶ உலக அளவில் நிதி சார்ந்த ஒத்துழைப்பைப் பேணுவது, வறுமையை ஒழிப்பது.

✶ நிதி நிலையை உறுதியானதாக வைத்திருப்பது, நீடித்தப் பொருளாதார வளர்ச்சி.

✶ பன்னாட்டு வணிகத்திற்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது.

## VI. தலைப்பின் கீழ் வினாக்கள்.

### 1. ஸ்டாலின் கிரேடு போர் :

அ) ஜெர்மனி ஸ்டாலின் கிரேடை எப்போது தாக்கியது?

✶ 1942 ஆகஸ்ட்டில் ஜெர்மானி ஸ்டாலின்கிரேடு நகரைத் தாக்கியது.

ஆ) ஸ்டாலின் கிரேடின் முக்கிய உற்பத்திப் பொருள்கள் யாவை?

✶ ஆயுதங்கள் மற்றும் டிராக்டர்கள் முக்கிய உற்பத்தி பொருட்கள்.

இ) ஸ்டாலின் கிரேடைத் தாக்குவதற்கு ஹிட்லர் தீட்டிய திட்டத்தின் பெயரென்ன?

✶ ஃபால் புளூ - ஆபரேஷன் புளூ.

ஈ) ஸ்டாலின் கிரேடு போரின் முக்கியத்துவம் என்ன?

✶ ரஷ்ய மக்களின் மாபெரும் தேசப்பற்று மிக்க போராக இருந்தது.

www.Padasalai.Net

## 2. தென்கிழக்கு ஆசியாவை ஜப்பான் ஆக்கிரமித்தல் :

**அ) ஜப்பானிடம் வீழ்ந்த தென்கிழக்கு ஆசிய நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.**

✶ குவாம், பிலிப்பைன்ஸ், ஹாங்காங், சிங்கப்பூர், மலேயா, இந்தோனேசியா, பர்மா

**ஆ) பசிபிக் பகுதியில் நேசநாடுகள் சந்தித்த பின்னடைவுக்கான காரணங்களைக் கணக்கிடுக.**

✶ நேசநாடுகளிடம் போதுமான அளவிற்கு தயாரிப்பின்மை.

✶ ஆங்கிலேயர் தமது ஆட்சி பகுதிகளில் இருந்து வெளியேறியது.

**இ) மிட்வே போரின் முக்கியத்துவம் யாது?**

✶ மிட்வே போரில் அமெரிக்கக் கப்பற்படை ஜப்பானின் கப்பற்படையைத் தோற்கடித்தது.

✶ ஜப்பானின் தோல்வி போரின் போக்கை நேசநாடுகளுக்குச் சாதகமாக மாற்றியது.

**ஈ) பர்மாவில் வாழ்ந்து கொண்டிருந்த இந்தியர்களுக்கு என்ன நேர்ந்தது?**

✶ பர்மாவில் இருந்த இந்தியர்கள் ஜப்பானியரிடம் சிக்கி துயருற்றனர்.

## 3. பொதுச்சபையும் பாதுகாப்புக் கவுன்சிலும் :

**அ) பாதுகாப்புக் கவுன்சிலின் நிரந்தர உறுப்பினர் நாடுகளை பட்டியலிடுக.**

✶ அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, சீனா

**ஆ) பேரழிவு என்றால் என்ன?**

✶ ஜெர்மானியர்களால் ஆறு மில்லியன் யூத மக்கள் கொல்லப்பட்டதை குறிக்கிறது.

**இ) ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையத்தின் தலைவர் யார்?**

✶ குடியரசுத் தலைவர் பிராங்கிளின் ரூஸ்வெல்ட்டின் விதவை மனைவி.

**ஈ) மறுப்பாணை அதிகாரம் (தடுப்பாணை) என்றால் என்ன?**

✶ ஐ.நா. சபை எடுக்கும் எந்த முடிவையும் தடுத்து நிறுத்தும் அதிகாரத்தை குறிக்கிறது.

www.Padasalai.Net

## VII. விரிவான விடையளிக்கவும்.

### 1. அடால்ப் ஹிட்லரின் எழுச்சி மற்றும் வீழ்ச்சி குறித்து ஒரு கட்டுரை வரையவும்.

**அடால்ப் ஹிட்லரின் எழுச்சி :**

- ✶ ஹிட்லர் நாசிக் கட்சியை நிறுவி 1933 - 1945 வரை ஜெர்மனியை ஆட்சி செய்தார்.
- ✶ ஜெர்மனியின் ராணுவத்தையும் ஆயுதங்களையும் பலமடங்கு அதிகரிக்கச் செய்தார்.
- ✶ 1936 இல் படை நீக்கம் செய்யப்பட்ட மண்டலமான ரைன்லாந்து மீது படையெடுத்தார்.
- ✶ 1938 இல் ஆஸ்திரியா, செக்கோஸ்லோவாக்கியா ஆகிய நாடுகளை கைப்பற்றினார்.

**அடால்ப் ஹிட்லரின் வீழ்ச்சி :**

- ✶ பிரிட்டன் மீது நடத்திய விமானப் போரில் ஜெர்மனி மோசமான தோல்வியை சந்தித்தது.
- ✶ ரஷ்யா மீது படையெடுத்த ஜெர்மனி ஸ்டாலின்கிரேடு போரில் படுதோல்வி அடைந்தது.
- ✶ நேசநாடுகள் படை ஆப்பிரிக்காவில் எல் அலாமெய்ன் போரில் ஜெர்மனியை வீழ்த்தின.
- ✶ பிரான்சின் நார்மண்டியில் நடைபெற்ற போரில் ஜெர்மனி முழுமையாக தோல்வியுற்றது.

### 2. இரண்டாம் உலகப்போரின் விளைவுகளை ஆய்வு செய்க.

**இரண்டாம் உலகப்போரின் விளைவுகள் :**

- ✶ அமெரிக்கா மற்றும் சோவியத் யூனியன் தலைமையில் உலகம் இரு துருவங்களானது.
- ✶ கம்யூனிச நாடுகள், கம்யூனிசமில்லாத நாடுகள் என ஐரோப்பா இரண்டாக பிரிந்தது.
- ✶ அமெரிக்காவும் சோவியத் யூனியனும் போட்டியிட்டு அணு ஆயுதங்களை குவித்தன.
- ✶ பேரழிவு தரும் ஆயுதங்களை தயாரிக்க உலக நாடுகள் பெருமளவு செலவு செய்தன.
- ✶ கட்டாயத்தின் பேரில் இந்தியா உட்பட பல காலனி நாடுகள் விடுதலை பெற்றன.
- ✶ ஐ.நா. சபை, உலக வங்கி, பன்னாட்டு நிதியம் போன்ற அமைப்புகள் நிறுவப்பட்டன.
- ✶ பன்னாட்டு முகமைகள் பெரிய மற்றும் சிறிய நாடுகளுக்குப் பொது இடமாக இருந்தன.
- ✶ அதிகமான பெண்கள் உழைப்பாளர்களாகி பொருளாதார ரீதியான சுதந்திரம் பெற்றனர்.

www.Padasalai.Net

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net
www.TrbTnpsc.Com

3. ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு, செயல்பாடுகளைஆய்வு செய்க.

**ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு :**

- ✶ **பொதுச் சபை** - உலக நாடுகள் அனைத்தையும் பிரதிநிதிகளாகக் கொண்டுள்ளது.
- ✶ **பாதுகாப்புச் சபை** - 5 நிரந்தர, 10 தற்காலிக உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.
- ✶ **செயலகம்** - ஐ.நா. சபையின் செயல்பாட்டு அங்கமாகும். பொது செயலாளர் உள்ளார்.
- ✶ **பன்னாட்டு நீதிமன்றம்** மற்றும் **பொருளாதார மற்றும் சமூக மன்றம்** ஆகியன உள்ளன.

**ஐக்கிய நாடுகள் சபையின் செயல்பாடுகள் :**

- ✶ மாறிவரும் பிரச்சனைக்கு ஏற்ப ஐ.நா. தனது செயல்பாடுகளை விரிவாக்கம் செய்துள்ளது.
- ✶ 1960 களில் முக்கியப் பிரச்சனையான காலனி ஆதிக்கத்தை நீக்க பெரும் பங்காற்றியது.
- ✶ மனித உரிமைகள், அகதிகள் பிரச்சனை, பருவகால மாற்றம் ஆகியவற்றை கையாள்கிறது.
- ✶ உலகில் மோதல்கள் நடந்த பல பகுதிகளில் ஐ.நா.வின் அமைதிப்படை பணியாற்றியது.

## VIII. வரைபடப் பணி.

உலகவரைபடத்தில் கீழக்கண்டவற்றைக் குறிக்கவும்.

1. அச்சு நாடுகள்.
2. நேச நாடுகள்.
3. ஹிரோஷிமா, நாகசாகி, ஹவாய்தீவு, மாஸ்கோ, சான் பிரான்சிஸ்கோ.

www.Padasalai.Net

# வரலாறு

## 4. இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய உலகம்

### V. சுருக்கமாக விடை தருக.

**1. சீனாவில் 1911 ஆம் ஆண்டில் நடந்த புரட்சிக்கு ஏதேனும் மூன்று காரணிகளைக் குறிப்பிடுக.**

**சீனாவில் 1911 ஆம் ஆண்டில் நடந்த புரட்சிக்கான காரணிகள் :**

- ✶ அதிகமான வரி விதிப்பு, வறுமை அதிகரிப்பு, விவசாயிகள் நடத்திய தைபிங் கலகம்.
- ✶ இரு அபினிப் போர்களிலும் சீன அரசின் தோல்வி, திறந்தவெளி வாணிபக் கொள்கை.
- ✶ பேரரசி சீர்திருத்தங்களை புறந்தள்ளியது, ஐரோப்பியர்களின் வருகை, மேற்கத்திய கல்வி.

**2. கோமிங்டாங்கும் ஷியாங் கே - ஷேக்கும் 1928 ஆம் ஆண்டு சீனாவில் எவ்வாறு நடுவண் அரசை ஏற்படுத்தினார்கள் என்பதை விளக்குக.**

**கோமிங்டாங்கும் ஷியாங் கே - ஷேக்கும் 1928 ஆம் ஆண்டு சீனாவில் நடுவண் அரசை ஏற்படுத்துதல் :**

- ✶ கோமிங்டாங் கட்சியில் இருந்து பொதுவுடைமை வாதிகள் நீக்கப்பட்டனர்.
- ✶ ஷியாங் கே - ஷேக் 1925 முதல் சீனாவை வெற்றி கொள்ளத் துவங்கினார்.
- ✶ 1928 இல் பீகிங் நகரைக் கைப்பற்றி சீனாவில் நடுவண் அரசை ஏற்படுத்தினார்.

**3. மாவோவின் நீண்ட பயணம் பற்றிக் குறிப்பு வரைக.**

**மாவோவின் நீண்ட பயணம் :**

- ✶ மாவோவின் நீண்ட பயணம் 1934 இல் தொடங்கியது. 6,000 மைல்களைக் கடந்தது.
- ✶ ஒரு லட்சம் பேர் பங்கேற்றனர். 20,000 பேர் மட்டுமே ஷேனிப் பகுதியை அடைந்தனர்.

**4. பாக்தாத் உடன்படிக்கை பற்றி அறிந்ததை எழுதுக.**

**பாக்தாத் உடன்படிக்கை :**

- ✶ 1955 இல் துருக்கி, ஈராக், பிரிட்டன், பாகிஸ்தான், ஈரான் ஆகியன செய்து கொண்டன.
- ✶ 1958 இல் அமெரிக்கா இணைந்த பிறகு, மத்திய உடன்படிக்கை அமைப்பு என மாறியது.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

5. மார்ஷல் திட்டம் என்றால் என்ன?

மார்ஷல் திட்டம் :

✶ மேற்கு ஐரோப்பிய நாடுகளை அமெரிக்காவின் செல்வாக்கில் வைத்துக் கொள்வது.

✶ ஐரோப்பிய நாடுகள் அமெரிக்க டாலர்களைப் பயன்படுத்திக் கொள்ள வழி செய்தது.

6. மேற்கத்திய நாடுகளின் தேவையின் பொருட்டே இஸ்ரேல் உருவாக்கப்பட்டது என்பது சூயஸ் கால்வாய் பிரச்சனையில் உறுதியானது - விளக்குக.

மேற்கத்திய நாடுகளின் தேவையின் பொருட்டே இஸ்ரேல் உருவாக்கப்பட்டது என்பது சூயஸ் கால்வாய் பிரச்சனையில் உறுதியானது :

✶ இஸ்ரேல் கப்பல் போக்குவரத்திற்காக அக்கபா வளைகுடாவை திறந்துவிட்டது.

✶ 1956, அக்டோபர் - 29 இல் இஸ்ரேலியப் படைகள் எகிப்து மீது படையெடுத்தன.

7. மூன்றாம் உலக நாடுகள் பற்றி ஒரு குறிப்பு வரைக.

மூன்றாம் உலக நாடுகள் :

✶ அமெரிக்கா, சோவியத் யூனியன் ஆகிய இரண்டு அணிகளிலும் சேராத நாடுகள்.

✶ ஆசிய - ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க முன்னாள் காலனி நாடுகளை குறித்தது.

8. கியூபாவின் ஏவுகணைச் சிக்கல் எவ்வாறு செயலிழக்கச் செய்யப்பட்டது?

கியூபாவின் ஏவுகணைச் சிக்கல் செயலிழக்கச் செய்யப்பட்ட விதம் :

✶ கியூபா மீது எப்போதும் போர் தொடுப்பது இல்லை என அமெரிக்கா உறுதி அளித்தது.

✶ துருக்கி (ம) இத்தாலியில் வைத்திருந்த ஏவுகணைகளை நீக்க அமெரிக்கா சம்மதித்தது.

www.Padasalai.Net

## VI. தலைப்பின் கீழ் வினாக்கள்.

1. பனிப்போர் :

அ) இரண்டாம் உலகப் போருக்குப் பின் உருவான இரு இராணுவப் பிரிவுகள் பற்றிக் கூறுக.

✶ 1. அமெரிக்க ஐக்கிய நாடுகள், 2. சோவியத் யூனியன்.

ஆ) பனிப்போர் என்ற சொல்லாடலை உருவாக்கியவர் யார்? அதை முதலில் பயன்படுத்தியவர் யார்?

✶ ஜார்ஜ் ஆர்வெல் என்ற ஆங்கில எழுத்தாளர் கையாண்டார்.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

இ) நேட்டோவின் உருவாக்கத்திற்கு சோவியத் ரஷ்யாவின் பதிலடி யாது?

✶ வார்சா ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது.

ஈ) எவ்வகைப் போட்டியில் வார்சா உடன்படிக்கை கலைக்கப்பட்டது?

✶ சோவியத் யூனியன் பிளவு.

## 2. கொரியப்போர் :

அ) கொரியப் போரின் போது வடகொரியாவின் அதிபர் யார்?

✶ வடகொரிய அதிபர் - இரண்டாம் கிம்.

ஆ) வடகொரிய அதிபரின் தெற்குப்புற எதிரி யார்?

✶ தெற்குபுற எதிரி - சிங்மென் ரி.

இ) கொரியப் போர் எத்தனை காலம் நீடித்தது?

✶ மூன்று ஆண்டுகள் வரை நீடித்தது.

ஈ) போரின் விளைவாக ஏற்பட்ட மனித உயிரிழப்பு எவ்வளவு?

✶ மனித உயிரிழப்பு - அளவிட முடியாத எண்ணிக்கை.

## 3. அணிசேரா இயக்கம் :

அ) அணிசேரா இயக்கத்தின் முதல் மாநாடு எங்கே எப்போது நடைபெற்றது?

✶ பெல்கிரேட் - 1961.

ஆ) முதல் மாநாட்டில் கலந்து கொண்ட முக்கியப் பிரமுகர்கள் யாவர்?

✶ நேரு, நாசர், டிட்டோ, சுகர்ணோ, நுக்ருமா.

இ) அணிசேரா இயக்கத்தின் குறிக்கோள்கள் என்ன?

✶ இரு வல்லரசுகளின் அணிகளிலும் சேரக்கூடாது.

✶ காலனிய ஆதிக்கமும் ஏகாதிபத்தியமும் எவ்வடிவம் எடுத்தாலும் எதிர்த்து நிற்பது.

ஈ) அணிசேரா இயக்கத்தின் பெல்கிரேட் மாநாட்டில் கொண்டுவரப்பட்ட இரு அடிப்படைக் கொள்கைகளைக் கூறுக.

✶ அமைதியோடு இணைந்திருத்தல், அமைதி, பாதுகாப்பை முன்னிறுத்தப் பாடுபடல்.

✶ எந்த அணியோடும் இராணுவக் கூட்டுறவுக் கொள்ளாமல் இருத்தல்.

www.Padasalai.Net

## VII. விரிவான விடை தருக.

**1. சீனாவை ஒரு பொதுவுடைமை நாடாக்க மா சே துங் - கின் பங்களிப்பை அளவிடுக.**

**சீனாவை ஒரு பொதுவுடைமை நாடாக்க மா சே துங் - கின் பங்களிப்பு :**

- ✶ 1933 இல் சீன பொதுவுடைமை கட்சியின் முழு கட்டுப்பாடும் மாவோ வசம் வந்தது.
- ✶ 1934 இல் மாவோ ஒரு நீண்ட பயணத்தை தொடங்கி 6,000 மைல்களைக் கடந்தார்.
- ✶ 1945 இல் பொதுவுடைமை - கோமிங்டாங் கட்சி இடையே உள்நாட்டுப் போர் மூண்டது.
- ✶ கம்யூனிஸ்டுகள் விரும்புவது மக்களாட்சியே தவிர சர்வாதிகார ஆட்சி அல்ல என்றார்.
- ✶ மாவோ ஒருபுறம் கொரில்லா போரையும் மறுபுறம் இராணுவ நகர்வையும் கையாண்டார்.
- ✶ 1948 இல் சீனாவின் பெரும் பகுதிகளில் மாவோவின் கட்டுப்பாடு நிறுவப்பட்டிருந்தது.
- ✶ 1949 இல் பீகிங் மாநாட்டில் மா சே துங் நடுவண் ஆட்சிக் குழுவின் தலைவரானார்.
- ✶ உலகின் மாபெரும் பொதுவுடைமை சக்தியாக சீன மக்கள் குடியரசு உருவெடுத்தது.

**2. அரேபியர்களுக்கும் இஸ்ரேலியர்களுக்கும் இடையே மூண்ட 1967 மற்றும் 1973 ஆம் ஆண்டு போர்களைப் பற்றி ஒரு கட்டுரை வரைக.**

**அரபு - இஸ்ரேல் போர் (1967) :**

- ✶ பாலஸ்தீனிய விடுதலை அமைப்பு இஸ்ரேல் மீது கொரில்லாப் படை தாக்குதல் நடத்தியது.
- ✶ 1966 இல் ஜோர்டானின் அல்-சமூ கிராமம் மீது இஸ்ரேல் விமானத் தாக்குதல் நடத்தியது.
- ✶ 1967 இல் சிரியாவின் ஆறு சிறிய மிக் ரகப் போர் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டது.
- ✶ எகிப்து அக்கபா வளைகுடாவை கைப்பற்றி இஸ்ரேல் கப்பல்களை நுழையாதபடி தடுத்தது.
- ✶ சினாய் மலையில் எகிப்து படைகளை நிறுத்தியதோடு ஐ.நா. படைகளை நீக்கக் கோரியது.
- ✶ இஸ்ரேல் திடீர் தாக்குதல் நடத்தி எகிப்தின் 90% விமானப் படையை தரைமட்டமாக்கியது.

**அரபு - இஸ்ரேல் போர் (1973) :**

- ✶ 1973 இல் எகிப்தும் சிரியாவும் ஒரு இரகசிய ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டன.
- ✶ சினாய் மலையை விட்டு இஸ்ரேல் விலக வேண்டும் என எகிப்து கூறியதை நிராகரித்தது.
- ✶ எகிப்தும் சிரியாவும் யோம் கிப்பூர் தினத்தன்று இஸ்ரேல் மீது திடீர் தாக்குதல் நடத்தின.
- ✶ போரில் இஸ்ரேல் கடும் பின்னடைவைச் சந்தித்தாலும் அரபுப் படைகளை புறந்தள்ளியது.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.Com

**3. ஐரோப்பியக் குழுமம் எவ்வாறு ஐரோப்பிய இணைவானது என்ற வரலாற்றை எடுத்தியம்புக.**

**ஐரோப்பியக் குழுமம் - ஐரோப்பிய இணைவாக மாறிய வரலாறு :**

**ஐரோப்பியக் குழுமம் :**

- ✶ மே 1949 இல் லண்டனில் பத்து நாடுகள் கூடி ஐரோப்பிய சமூகத்தை உருவாக்கின.
- ✶ ஸ்ட்ராஸ்பர்க் நகரை தலைமையிடமாகக் கொண்டு இரு சபைகள் ஏற்படுத்தப்பட்டன.

**ஐரோப்பிய நிலக்கரி மற்றும் எஃகு சமூகம் :**

- ✶ ஐரோப்பியப் பாதுகாப்பு சமூகம், ஐரோப்பிய நிலக்கரி மற்றும் எஃகு சமூகம் தோன்றின.
- ✶ ஐரோப்பியப் பொருளாதார சமூகம் (அ) பொதுச் சந்தை பிரெஸெல்ஸ் நகரில் நிறுவினர்.

**ஐரோப்பியப் பொருளாதார சமூகம் :**

- ✶ பொதுவான விவசாய கொள்கையும், பொதுவான வெளிநாட்டு வணிகமும் உருவானது.
- ✶ 1970 மற்றும் 1980 களில் உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை மேலும் அதிகரித்தது.

**ஒற்றை ஐரோப்பியக சட்டம் :**

- ✶ ஒற்றை ஐரோப்பியச் சட்டம் 1987, ஜூலை - 1 இல் நடைமுறைக்கு வந்தது.
- ✶ ஐரோப்பியப் பொருளாதார சமூகத்தின் எல்லைகளை விரிவாக்கி சட்டவடிவம் தந்தது.

**ஐரோப்பிய ஒன்றியம் :**

- ✶ 1992 பிப்ரவரி - 7 இல் மாஸ்டிரிக்ட் ஒப்பந்தம், ஐரோப்பிய ஒன்றியத்தை ஏற்படுத்தியது.
- ✶ பொதுவான நிதிக் கொள்கையும், பொது பணமும் (யூரோ), நிறுவனங்களும் தோன்றின.

www.Padasalai.Net

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

# வரலாறு

## 5. 19 ஆம் நூற்றாண்டில் சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள்

### V. சுருக்கமாக விடையளிக்கவும்.

**1. ரிஷி தேவேந்திரநாத் தாகூர் முன்வைத்த நம்பிக்கையின் நான்கு கூறுகளைக் குறிப்பிடுக.**

**ரிஷி தேவேந்திரநாத் தாகூர் முன்வைத்த நம்பிக்கையின் நான்கு கூறுகள் :**

- ✶ எல்லாம் வல்ல ஒரு கடவுள் மட்டுமே உள்ளார். அவரே இவ்வுலகத்தைப் படைத்தார்.
- ✶ அவர் ஒருவரே நிலையானவர், எங்கும் நிறைந்திருப்பவர். அவருக்கிணை யாருமில்லை.
- ✶ நம்முடைய வீடுபேறு, அவரை நம்புபவரையும் அவரை வணங்குவதையும் சார்ந்துள்ளது.
- ✶ நம்புவது என்பது, நேசிப்பதிலும் அவரது விருப்பத்தைச் செயல்படுத்துவதிலும் உள்ளது.

**2. சமூகச் சீர்திருத்தங்களுக்கு மகாதேவ் ரானடேயின் பங்களிப்பைக் குறிப்பிடுக.**

**சமூகச் சீர்திருத்தங்களுக்கு மகாதேவ் ரானடேயின் பங்களிப்பு :**

- ✶ மகாதேவ் ரானடே 1861 இல் - விதவை மறுமணச் சங்கம் நிறுவினார்.
- ✶ 1870 இல் - புனே சர்வஜனிக் சபா, 1884 இல் - தக்காணக் கல்விக் கழகம் நிறுவினார்.

**3. ஒடுக்கப்பட்டோரின் நலன்களுக்காகப் போராடிய அய்யன் காளியின் பாத்திரத்தை மதிப்பீடு செய்க.**

**ஒடுக்கப்பட்டோரின் நலன்களுக்காகப் போராடிய அய்யன் காளியின் பாத்திரம் :**

- ✶ உயர் சாதியினர் ஆடைகளை அணிந்தார். பொதுச் சாலைகளில் பயணம் செய்தார்.
- ✶ புலையர் சமூக மக்களின் கல்விக்கு நிதிதிரட்ட சாது ஜன பரிபாலன சங்கம் நிறுவினார்.

**4. ராமலிங்க சுவாமிகளின் சீர்திருத்தங்கள் குறித்து சிறுகுறிப்பு வரைக.**

**ராமலிங்க சுவாமிகளின் சீர்திருத்தங்கள் :**

- ✶ 1856 இல் சமரச வேத சன்மார்க்க சங்கம் எனும் அமைப்பை நிறுவினார்.
- ✶ 1867 இல் அனைத்து மக்களுக்குமான இலவச உணவகத்தை வடலூரில் நிறுவினார்.

www.Padasalai.Net

**5. சுவாமி விவேகானந்தரின் "செயல்பாட்டாளர்" சித்தாந்தத்தின் தாக்கம் என்ன?**

**சுவாமி விவேகானந்தரின் "செயல்பாட்டாளர்" சித்தாந்தத்தின் தாக்கம் :**

- ✶ மனித குலத்திற்கு தொண்டு செய்வது, கல்வியறிவு வழங்குவது தொடங்கியது.
- ✶ மருத்துவ உதவி வழங்குவது, நிவாரணப் பணிகளை மேற்கொள்வது தொடங்கியது.

**6. சீர்திருத்த இயக்கங்களுக்கும், சமய இயக்கங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?**

**சீர்திருத்த இயக்கங்கள் :**

- ✶ பெண்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிரான சமூக அநீதிகளை ஒழிப்பதற்காக தோன்றியது. சமூக சமத்துவ கோட்பாட்டை போதித்தது.

**சமய இயக்கங்கள் :**

- ✶ உருவ வழிபாடு, சமய சடங்குகள், மூடநம்பிக்கைகள் ஆகியவற்றை ஒழிப்பதற்காக தோன்றியது. ஒரே கடவுள் கோட்பாட்டை போதித்தது.

**7. பிரம்ம சமாஜத்தால் ஒழிக்கப்பட்ட சமூகத் தீமைகள் யாவை?**

**பிரம்ம சமாஜத்தால் ஒழிக்கப்பட்ட சமூகத் தீமைகள் :**

- ✶ சதி எனும் உடன்கட்டை ஏறும் வழக்கம் ஒழிக்கப்பட்டது.
- ✶ குழந்தைத் திருமணம், பலதார மணம் ஆகியன ஒழிக்கப்பட்டது.
- ✶ விதவைகள் மறுமணம், பெண் கல்வி ஆகியன ஆதரிக்கப்பட்டது.

**8. ஏழைகள் மற்றும் அடித்தட்டு மக்களின் நலன்களுக்காக ஜோதிபா பூலே ஆற்றிய பணிகளை கோடிட்டுக் காட்டுக.**

**ஏழைகள் மற்றும் அடித்தட்டு மக்களின் நலன்களுக்காக ஜோதிபா பூலே ஆற்றிய பணிகள் :**

- ✶ 1852 ஆம் ஆண்டு ஒடுக்கப்பட்ட மக்களுக்கான முதல் பள்ளியை புனேயில் திறந்தார்.
- ✶ பெற்றோரில்லா குழந்தைகள் விடுதிகளையும் விதவைகள் காப்பகங்களையும் திறந்தார்.

**9. அயோத்தி தாசர் இலங்கை சென்ற போது நடந்த நிகழ்வு என்ன?**

**அயோத்தி தாசர் இலங்கை சென்ற போது நடந்த நிகழ்வு :**

- ✶ 1898 இல் இலங்கை சென்ற அயோத்தி தாசர் பௌத்த மதத்தைத் தழுவினார்.
- ✶ 1898 இல் "சாக்கிய பௌத்த சங்கம்" என்ற அமைப்பை சென்னையில் நிறுவினார்.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

## VI. தலைப்பின் கீழ் வினாக்கள்.

### 1. அலிகார் இயக்கம் :

**அ) இவ்வியக்கத்தின் முக்கியக் குறிக்கோள் என்ன?**

✶ இந்திய முஸ்லிம்களை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்வது.

**ஆ) இவ்வியக்கத்தின் ஆன்மாவாகக் கருதப்படுபவர் யார்?**

✶ சர் சையது அகமத்கான்.

**இ) ஆங்கில நூல்கள் ஏன் உருது மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டன?**

✶ மேலைநாட்டு அறிவியலை இந்திய முஸ்லிம்களுக்கு கற்பிக்க.

**ஈ) பல்கலைக் கழகமாக தரம் உயர்த்தப்பட்ட கல்லூரியின் பெயரைக் குறிப்பிடுக.**

✶ அலிகார் முகமதிய ஆங்கிலோ - ஓரியண்டல் கல்லூரி.

### 2. ராமலிங்க அடிகள் :

**அ) ஜீவகாருண்யம் என்றால் என்ன?**

✶ செடிகொடிகள் உட்பட அனைத்து உயிரினங்களிடமும் அன்பு காட்டுவது.

**ஆ) அருட்பா என்றால் என்ன?**

✶ ராமலிங்க அடிகள் இயற்றிய பாடல்களின் தொகுப்பு.

**இ) சமரச வேத சன்மார்க்க சத்ய சங்கத்தின் முக்கியப் பங்களிப்பை குறிப்பிடுக.**

✶ பஞ்சத்தால் வாடிய ஏழைகளுக்கு உணவளித்தது.

**ஈ) தனது இலவச உணவகத்தை அவர் எங்கே அமைத்திருந்தார்?**

✶ வடலூர்.

### 3. தியோபந்த் இயக்கம்:

**அ) இவ்வியக்கத்தைத் திட்டமிட்டு நடத்தியவர்கள் யார்?**

✶ பழமைவாத முஸ்லிம் உலேமாக்கள்.

**ஆ) இவ்வியக்கத்தின் இரண்டு முக்கியக் குறிக்கோள்கள் யாவை?**

✶ குரான் மற்றும் ஷரியத்தின் உண்மையான போதனைகளைப் பரப்புரை செய்தல்.

✶ புனிதப்போர் செய்யும் உணர்வுகளை ஊக்குவித்தல்.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

இ) தியோபந்த் பள்ளியை நிறுவியவர் யார்?

✶ முகமது குவாசிம் நானோதவி, ரஷித் அகமத் கங்கோத்ரி.

ஈ) யாருக்கு எதிராக தியோபந்த் உலேமாக்கள் சமய ஆணையைப் பிறப்பித்தனர்?

✶ சர் சையது அகமத்கான்.

## VII. விரிவாக விடையளிக்கவும்.

1. மீட்பியக்கத்தின் பங்களிப்பை சமய சீர்திருத்த இயக்கங்களின் பங்களிப்போடு ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் காட்டுக.

**மீட்பியக்கத்தின் பங்களிப்பை சமய சீர்திருத்த இயக்கங்களின் பங்களிப்போடு ஒப்பிடுதல் மற்றும் வேறுபடுத்துதல் :**

| மீட்பு இயக்கங்கள் | சமய சீர்திருத்த இயக்கங்கள் |
|---|---|
| தங்கள் சமயம் இழந்துவிட்ட பெருமையை மீட்க பாடுபட்டது. | தங்கள் சமயத்தில் இருந்த குறைபாடுகளை நீக்க பாடுபட்டது. |
| உதாரணம் - பிரம்ம சமாஜம், பிராத்தனை சமாஜம், அலிகார் இயக்கம். | உதாரணம் - ஆரிய சமாஜம், ராமகிருஷ்ணா மிஷன், தியோபந்த் இயக்கம். |
| தீவிர மதப்பற்று கொண்டிருந்தது. தங்கள் மதக் கோட்பாட்டை மட்டும் போதித்தது. | தீவிர மதப்பற்று காணப்படவில்லை. மற்ற மதக் கோட்பாடுகளையும் ஆதரித்தது. |
| பிற மதத்திற்கு மதம் மாறி சென்றவர்களை மீட்டுவர பணியாற்றியது. | அனைத்து மதமும் சமம் என கருதியதால் மதம் மாற்றத்தில் அக்கறை காட்டவில்லை. |
| ஒரே கடவுள் கோட்பாட்டை போதித்தது. | ஒரே கடவுள் கோட்பாட்டை போதித்தது. |
| உருவ வழிபாடு, சமயச் சடங்குகள் மற்றும் பிராமணர் மேலாதிக்கத்தை எதிர்த்தது. | உருவ வழிபாடு, சமயச் சடங்குகள் மற்றும் பிராமணர் மேலாதிக்கத்தை எதிர்த்தது. |
| பெண்களுக்கு எதிரான அநீதிகளை ஒழிக்க, பெண்கள் உரிமைகளை மீட்க போராடியது. | பெண்களுக்கு எதிரான அநீதிகளை ஒழிக்க, பெண்கள் உரிமைகளை மீட்க போராடியது. |
| தீண்டாமை ஒழிப்பு, சாதிமுறை ஒழிப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்தியது. | தீண்டாமை ஒழிப்பு, சாதிமுறை ஒழிப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்தியது. |

www.Padasalai.Net

**2. 19 ஆம் நூற்றாண்டில் சீர்திருத்த இயக்கங்கள் நடைபெறுவதற்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகளை விவாதிக்கவும்.**

**19 ஆம் நூற்றாண்டில் சீர்திருத்த இயக்கங்கள் நடைபெறுவதற்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகள் :**

- ✶ **சதி எனும் உடன்கட்டை ஏறும் வழக்கம்** - விதவைகளை உயிரோடு எரித்து கொல்லுதல்.
- ✶ **பலதார மணம்** - ஆண்கள் பல பெண்களை திருமணம் செய்து கொள்ள அனுமதித்தனர்.
- ✶ **குழந்தைத் திருமணம்** - ஒன்றும் அறியாத வயதிலேயே திருமணம் செய்து வைத்தனர்.
- ✶ **கைம்பெண் வழக்கம்** - விதவை பெண்களின் உரிமைகள் அனைத்தும் பறிக்கப்பட்டன.
- ✶ **பெண் கல்வி மறுப்பு** - பெண்கள் பள்ளி சென்று கல்வி பயிலும் உரிமை மறுக்கப்பட்டது.
- ✶ **சாதி முறை** - ஒடுக்கப்பட்டவர்கள் மீது சாதிக் கொடுமைகள் அதிகமாக காணப்பட்டது.
- ✶ **மூடநம்பிக்கைகள்** - பிராமணர்கள் ஆதிக்கம் செலுத்திட பல சடங்குகளை நடத்தினர்.
- ✶ **கல்வி மறுப்பு** - பிராமணர்கள் மட்டுமே கல்வி பயின்றனர். மற்றவர்களுக்கு மறுக்கப்பட்டது.

**3. இந்தியச் சமூகத்தின் புத்தெழுச்சிக்கு ராமகிருஷ்ண பரமஹம்சரும் விவேகானந்தரும் ஆற்றிய தொண்டினைத் திறனாய்வு செய்க.**

**இந்தியச் சமூகத்தின் புத்தெழுச்சிக்கு ராமகிருஷ்ண பரமஹம்சரும் விவேகானந்தரும் ஆற்றிய தொண்டு :**

**ராமகிருஷ்ண பரமஹம்சர் :**

- ✶ ராமகிருஷ்ணர் உயிர்களின் மேல் இரக்கம் தேவையில்லை, சேவையே தேவை என்றார்.
- ✶ ஜீவன் என்பதே சிவன், வாழ்கின்ற அனைத்து உயிர்களும் இறைவனே எனக் கூறினார்.
- ✶ மனிதர்களுக்கு செய்யும் சேவை, கடவுளுக்கு செய்யும் சேவையாகும் என போதித்தார்.
- ✶ எல்லா மதங்களும் உலகளாவிய, அனைவருக்குமான மூலக்கூறுகளை கொண்டுள்ளன.

**விவேகானந்தர் :**

- ✶ விவேகானந்தர் மனித குலத்திற்குத் தொண்டு செய்தல் எனும் கோட்பாட்டை கூறினார்.
- ✶ இந்து சமூகத்திற்கு புத்துயிர் அளிக்க இந்திய இளைஞர்களுக்கு அறைகூவல் விடுத்தார்.
- ✶ ஒடுக்கப்பட்ட மக்களும் இந்து சமயச் சடங்குகளில் கலந்து கொள்ள அனுமதி என்றார்.
- ✶ பொருள் உற்பத்தியில் இந்தியர்கள் கொண்டிருந்த தாழ்வு மனப்பான்மையை நீக்கினார்.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

4. **பெண்களின் மேம்பாட்டிற்கு 19 ஆம் நூற்றாண்டு சீர்திருத்தவாதிகள் ஆற்றிய பணிகள் குறித்து ஒரு கட்டுரை வரைக.**

**பெண்களின் மேம்பாட்டிற்கு 19 ஆம் நூற்றாண்டு சீர்திருத்தவாதிகள் ஆற்றிய பணிகள் :**

**இராஜா ராம் மோகன் ராய் :**

✶ சதி வழக்கம், குழந்தை திருமணம், பலதார மணம் ஆகியவற்றை எதிர்த்தார்.

✶ ஆண்களைவிட பெண்கள் கீழானவர்களாக நடத்தும் நடைமுறையை எதிர்த்தார்.

**ஈஸ்வர சந்திர வித்யாசாகர் :**

✶ குழந்தை திருமணத்தை எதிர்த்தார். விதவைகள் மறுமணத்தை ஆதரித்தார்.

✶ பெண் கல்வியை மேம்படுத்த பெண்களுக்கான பள்ளிகள் நிறுவப்பட உதவினார்.

**கேசவ சந்திர சென் :**

✶ குழந்தை திருமண முறைக்கு எதிராக கடுமையாக போராடிக் கொண்டிருந்தார்.

**எம்.ஜி. ரானடே :**

✶ விதவைகள் மறுமணம் மற்றும் பெண்கள் முன்னேற்றத்திற்காக அயராது உழைத்தார்.

**சுவாமி தயானந்த சரஸ்வதி :**

✶ குழந்தை திருமணத்தை எதிர்த்தார். விதவைகள் மறுமணத்தை ஆதரித்தார்.

**ஜோதிபா பூலே :**

✶ விதவைகள் மறுமணம் மற்றும் பெண்கள் முன்னேற்றத்திற்காக அயராது உழைத்தார்.

**ஜோதிபா பூலே :**

✶ விதவைகள் மறுமணம் மற்றும் பெண்களின் கல்வி மேம்பாட்டுக்காக போராடினார்.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.Com

# புவியியல்

## 1. இந்தியா - அமைவிடம், நிலத்தோற்றம் மற்றும் வடிகாலமைப்பு

### III. காரணம் கூறுக :

1. **இமயமலைகள் மடிப்பு மலைகள் என அழைக்கப்படுகின்றன.**
   - ✶ இமயமலைகள் புவிமேலோட்டு பேரியக்க விசையினால் மடிக்கப்பட்டு உள்ளது.
2. **வடஇந்திய ஆறுகள் வற்றாத ஆறுகள்.**
   - ✶ வடஇந்திய ஆறுகள் பனிப் பிரதேசமான இமயமலைகளில் உற்பத்தியாகின்றன.
3. **நாகபுரி பீடபூமி கனிமவளம் நிறைந்தது.**
   - ✶ நாகபுரி பீடபூமியில் இரும்புத்தாது, நிலக்கரி போன்ற கனிமங்கள் கிடைக்கின்றது.
4. **இந்திய பெரும் பாலைவனம் மருஸ்தலி என்று அழைக்கப்படுகிறது.**
   - ✶ ராஜஸ்தான் மாநிலத்தின் மூன்றில் இரண்டு பங்கு நிலப்பகுதி பாலைவனமாகும்.
5. **வடக்கு கிழக்கு மாநிலங்கள் "ஏழு சகோதரிகள்" என அழைக்கப்படுகின்றன.**
   - ✶ ஏழு வடகிழக்கு மாநிலங்களும் பூர்வாஞ்சல் குன்றுகள் பகுதியில் அமைந்துள்ளன.
6. **கோதாவரி ஆறு விருத்தகங்கா என அழைக்கப்படுகிறது.**
   - ✶ கோதாவரி ஆறு தீபகற்ப இந்தியாவில் பாயும் மிக நீளமான ஆறாக உள்ளது.

### IV. வேறுபடுத்துக :

1. **இமயமலை ஆறுகள் மற்றும் தீபகற்ப ஆறுகள்.**

| இமயமலை ஆறுகள் | தீபகற்ப ஆறுகள் |
|---|---|
| இமயமலையில் உற்பத்தியாகின்றன. | மேற்கு தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகின்றன. |
| அகலமானது, அதிக நீளமானது. | குறுகலானது, நீளம் குறைவானது. |
| வற்றாத ஆறுகள். | வற்றும் ஆறுகள். |

www.Padasalai.Net

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

## 2. மேற்குத் தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகள்.

| மேற்குத் தொடர்ச்சி மலைகள் | கிழக்கு தொடர்ச்சி மலைகள் |
|---|---|
| தீபகற்ப பீடபூமியின் மேற்கு விளிம்பு பகுதியில் அமைந்துள்ளது. | தீபகற்ப பீடபூமியின் கிழக்கு விளிம்பு பகுதியில் அமைந்துள்ளது. |
| மேற்கு கடற்கரைக்கு இணையாகச் செல்கிறது. | கிழக்கு கடற்கரைக்கு இணையாகச் செல்கிறது. |
| தொடர்ச்சியான மலைகள். | தொடர்ச்சியான மலைகள் அல்ல. |

## 3. இமாத்ரி மற்றும் இமாச்சல்.

| இமாத்ரி | இமாச்சல் |
|---|---|
| பெரிய இமயமலைகள். | சிறிய இமயமலைகள். |
| உயரமான சிகரங்கள் அமைந்துள்ளன. | கோடை வாழிடங்கள் அமைந்துள்ளன. |
| குறைவான மழைபொழிவை பெறுகின்றது. | மிகஅதிக மழைபொழிவை பெறுகின்றது. |

## 4. மேற்கு கடற்கரைச் சமவெளி மற்றும் கிழக்கு கடற்கரைச் சமவெளி.

| மேற்கு கடற்கரை சமவெளிகள் | கிழக்கு கடற்கரை சமவெளிகள் |
|---|---|
| மேற்கு தொடர்ச்சி மலைக்கும் அரபிக் கடலுக்கும் இடையில் உள்ளது. | கிழக்கு தொடர்ச்சி மலைக்கும் வங்காள விரிகுடாவுக்கும் இடையில் உள்ளது. |
| குஜராத் முதல் தமிழ்நாடு வரை நீண்டுள்ளது. | மேற்கு வங்காளம் முதல் தமிழ்நாடு வரை நீண்டுள்ளது. |
| வடபகுதி - கொங்கணம், மத்திய பகுதி - கனரா, தென்பகுதி - மலபார். | வடபகுதி - வடசர்கார், தென்பகுதி - சோழ மண்டலம். |

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.Com

## V. சுருக்கமாக விடையளி :

**1. இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களைக் கூறுக.**

**இந்தியாவின் அண்டை நாடுகள் :**

- ✶ பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ்.
- ✶ சீனா, நேபாளம், பூடான், மியான்மர், இலங்கை.

**2. இந்திய திட்ட நேரத்தின் முக்கியத்துவம் பற்றி கூறுக.**

**இந்திய திட்ட நேரத்தின் முக்கியத்துவம் :**

- ✶ இந்திய மாநிலங்களுக்கு இடையிலான நேர வேறுபாட்டை தவிர்க்கிறது.
- ✶ இந்தியா முழுவதும் ஒரே நேரம் கடைபிடிக்க வழிவகுக்கிறது.
- ✶ இந்தியாவிற்கான கிரீன்விச் நேரத்தை கணக்கிடுவது எளிதாகிறது.

**3. தக்காண பீடபூமி - குறிப்பு வரைக.**

**தக்காண பீடபூமி :**

- ✶ தக்காண பீடபூமி முக்கோண வடிவிலானது. அதன் பரப்பளவு ஏழு லட்சம் ச.கி.மீ.
- ✶ மலைகள், ஆறுகள், காடுகள் என மிகப்பெரிய இயற்கை அமைப்பை கொண்டுள்ளது.

**4. இந்தியாவின் மேற்கு நோக்கி பாயும் ஆறுகளைப் பற்றி கூறுக.**

**இந்தியாவின் மேற்கு நோக்கி பாயும் ஆறுகள் :**

- ✶ நர்மதை, தபதி, மாஹி ஆகியன மேற்கு நோக்கி பாயும் ஆறுகளாகும்.
- ✶ நர்மதை, தபதி ஆறுகள் காம்பே வளைகுடா வழியாக அரபிக் கடலில் கலக்கிறது.

**5. இலட்சத்தீவுக் கூட்டங்கள் பற்றி விவரி.**

**இலட்சத்தீவுக் கூட்டங்கள் :**

- ✶ இலட்சத்தீவு முருகைப் பாறைகளால் ஆனது. அதன் பரப்பளவு சுமார் 32 ச.கி.மீ.
- ✶ இலட்சத்தீவு, மினிக்காய்தீவு, அமினித்தீவு ஆகியன சேர்ந்ததே இலட்சத் தீவுகள்.

www.Padasalai.Net

## VI. ஒரு பத்தியில் விடையளிக்கவும் :

### 1. இமயமலையின் உட்பிரிவுகளையும் அதன் முக்கியத்துவம் பற்றியும் விவரி.

**இமயமலையின் உட்பிரிவுகள் :**

- ✶ ட்ரான்ஸ் இமயமலை - ஜம்மு காஷ்மீர் மற்றும் திபெத் பீடபூமியில் அமைந்துள்ளது.
- ✶ இமயமலை - இது ஒரு இளம் மடிப்புமலை. இங்கு உயரமான சிகரங்கள் உள்ளன.
- ✶ பூர்வாஞ்சல் குன்றுகள் - இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் பரவியுள்ளது.

**இமயமலையின் முக்கியத்துவம் :**

- ✶ தென்மேற்கு பருவக் காற்றைத் தடுத்து கனமழையைக் கொடுக்கிறது.
- ✶ இந்திய துணைக் கண்டத்திற்கு இயற்கை அரணாக அமைந்துள்ளது.
- ✶ வற்றாத நதிகளின் பிறப்பிடமாகவும் பல்லுயிர் மண்டலமாகவும் உள்ளது.
- ✶ மத்திய ஆசியாவில் இருந்து வீசும் கடும் குளிர் காற்றைத் தடுக்கிறது.
- ✶ கோடை வாழிடங்கள், சுற்றுலா தலங்கள், புனித தலங்கள் அமைந்துள்ளன.

### 2. தீபகற்ப ஆறுகளைப் பற்றி விவரி.

**தீபகற்ப ஆறுகள் :**

- ✶ தென் இந்தியாவில் பாயும் ஆறுகள் தீபகற்ப ஆறுகள் எனப்படுகின்றன.
- ✶ தீபகற்ப ஆறுகள் பாயும் திசையின் அடிப்படையில் இரு பிரிவாகப் பிரிக்கலாம்.

**கிழக்கு நோக்கி பாயும் ஆறுகள் :**

- ✶ **மகாநதி** - சத்தீஸ்கார் மாநிலத்தில் உற்பத்தியாகி ஒடிசா வழியாக பாய்கிறது.
- ✶ **கோதாவரி** - மகாராஷ்ட்ராவில் உற்பத்தியாகி ஆந்திர பிரதேசம் வழியாக பாய்கிறது. இது விருத்தகங்கா என்று அழைக்கப்படுகிறது.
- ✶ **கிருஷ்ணா** - மகாராஷ்ட்ராவில் உற்பத்தியாகி ஆந்திர பிரதேசம் வழியாக பாய்கிறது.
- ✶ **காவேரி** - கர்நாடகா மாநிலத்தில் உற்பத்தியாகி தமிழ்நாடு வழியாக பாய்கிறது. இது தென் இந்தியாவின் கங்கை என்று அழைக்கப்படுகிறது.

**மேற்கு நோக்கி பாயும் ஆறுகள் :**

- ✶ **நர்மதை** - மத்திய பிரதேசத்தில் உற்பத்தியாகி காம்பே வளைகுடா வழியாக பாய்கிறது.
- ✶ **தபதி** - மத்திய பிரதேசத்தில் உற்பத்தியாகி காம்பே வளைகுடா வழியாக பாய்கிறது.

www.Padasalai.Net

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**3. கங்கை ஆற்று வடிநிலம் குறித்து விரிவாக எழுதுக.**

**கங்கை ஆற்று வடிநிலம் :**

- ✶ கங்கை ஆற்றின் தொகுப்பு சுமார் 8,61,404 ச.கி.மீ பரப்பளவில் பாய்கிறது.
- ✶ கங்கை ஆறு இந்தியாவின் மிகப்பெரிய வடிகால் அமைப்பை கொண்டுள்ளது.
- ✶ கங்கை சமவெளியில் உள்ள நகரங்களின் மக்கள் அடர்த்தி அதிகமாகும்.
- ✶ கங்கை ஆறு உத்தரகாண்ட் மாநிலத்தில் 7010 மீ. உயரத்தில் உற்பத்தியாகிறது.
- ✶ கங்கோத்ரி பனியாற்றில் இருந்து பாகிரதி என்னும் பெயருடன் உற்பத்தியாகிறது.
- ✶ கங்கை நதியின் நீளம் சுமார் 2525 கி.மீ. இது வங்காள விரிகுடாவில் கலக்கிறது.
- ✶ கங்கை, பிரம்மபுத்ரா சேர்ந்து உலகின் மிகப்பெரிய டெல்டாவை உருவாக்கின.
- ✶ துணை ஆறுகள் - கோமதி, காக்ரா, கோசி, யமுனை, சோன் மற்றும் சாம்பல்.

## VI. வரைபடப் பயிற்சி :

**கொடுக்கப்பட்டுள்ள இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.**

1. **மலைத் தொடர்கள் :** காரகோரம், லடாக், ஜாஸ்கர், ஆரவல்லி, மேற்கு தொடர்ச்சி மலை, கிழக்கு தொடர்ச்சி மலை.
2. **ஆறுகள் :** சிந்து, கங்கை, பிரம்மபுத்ரா, நர்மதா, தபதி, மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, காவிரி.
3. **பீடபூமிகள் :** மாளவபீடபூமி, சோட்டா நாகபுரி பீடபூமி, தக்காண பீடபூமி.

www.Padasalai.Net

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

# புவியியல்

## 2. இந்தியா - காலநிலை மற்றும் இயற்கைத் தாவரங்கள்

### V. சுருக்கமாக விடையளி :

**1. "வானிலையியல்" வரையறு.**

**வானிலையியல் :**

- ✶ வானிலையியல் என்பது வானிலையின் பல்வேறு கூறுகளைப் பற்றி, குறிப்பாக வானிலை முன்னறிவிப்பு பற்றிய ஒரு அறிவியல் பிரிவு .
- ✶ வானிலையில் ஏற்படக்கூடிய மாற்றங்களை முன்கூட்டியே கண்டறிந்து கூறுகிறது.

**2. "இயல்பு வெப்ப வீழ்ச்சி" என்றால் என்ன?**

**இயல்பு வெப்ப வீழ்ச்சி :**

- ✶ இயல்பு வெப்ப வீழ்ச்சி என்பது புவிப்பரப்பில் இருந்து உயரே செல்லச் செல்ல வளிமண்டலத்தில் ஒவ்வொரு 1000 மீட்டர் உயரத்திற்கும் $6.5^{0}$ செல்சியஸ் என்ற அளவில் வெப்பநிலை குறைவதை குறிக்கிறது.

**3. "ஜெட் காற்றோட்டங்கள்" என்றால் என்ன?**

**ஜெட் காற்றோட்டங்கள் :**

- ✶ ஜெட் காற்றோட்டங்கள் என்பது வளிமண்டலத்தின் உயர் அடுக்குகளில் குறுகிய பகுதிகளில் வேகமாக நகரும் காற்றுகளைக் குறிக்கிறது. அதை மேலை மற்றும் கீழை ஜெட் காற்றுகள் என பிரிக்கின்றனர்.

**4. பருவக்காற்று குறித்து ஒரு சிறு குறிப்பு எழுதுக.**

**பருவக்காற்று :**

- ✶ "மான்சூன்" என்ற சொல் "மௌசிம்" என்ற அரபு சொல்லில் இருந்து பெறப்பட்டது.
- ✶ அரபிக் கடலில் பருவங்களுக்கு ஏற்ப மாறி வீசும் காற்றுகளை குறிப்பிட பருவக்காற்று என்ற சொல்லை அரபு மாலுமிகள் பயன்படுத்தினர்.

www.Padasalai.Net

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

5. இந்தியாவின் நான்கு பருவக் காலங்களைக் குறிப்பிடுக.

**இந்தியாவின் நான்கு பருவக் காலங்கள் :**

✶ குளிர் காலம் : ஜனவரி முதல் பிப்ரவரி வரை

✶ கோடைக் காலம் : மார்ச் முதல் மேவரை

✶ தென்மேற்கு பருவக்காற்று காலம் : ஜுன் முதல் செப்டம்பர் வரை

✶ வடகிழக்கு பருவக்காற்று காலம் : அக்டோபர் முதல் டிசம்பர் வரை

6. பருவமழை வெடிப்பு என்றால் என்ன?

**பருவமழை வெடிப்பு :**

✶ பருவமழை வெடிப்பு என்பது தென்மேற்கு பருவக்காற்று, கேரளாவில் உள்ள மலப்பார் கடற்கரையை அடையும் போது பலத்த இடி மின்னலுடன் கூடிய மழையை அளிப்பதாகும்.

7. அதிக மழைப்பெறும் பகுதிகளைக் குறிப்பிடுக.

**அதிக மழைப்பெறும் பகுதிகள் :**

✶ மேற்கு கடற்கரை சமவெளிகள் ✶ அசாம்

✶ மேகாலயாவின் தென்பகுதி ✶ திரிபுரா

✶ அருணாச்சலப் பிரதேசம் ✶ நாகலாந்து

8. இந்தியாவில் சதுப்பு நிலக்காடுகள் காணப்படும் இடங்களைக் குறிப்பிடுக.

**இந்தியாவில் சதுப்பு நிலக்காடுகள் காணப்படும் இடங்கள் :**

✶ கங்கை - பிரம்மபுத்ரா டெல்டா பகுதிகள்.

✶ மகாநதி, கோதாவரி மற்றும் கிருஷ்ணா நதிகளின் டெல்டா பகுதிகள்.

9. அயன மண்டல பசுமைமாறாக் காடுகளிலுள்ள மரங்களை எழுதுக.

**அயன மண்டல பசுமைமாறாக் காடுகளிலுள்ள மரங்கள் :**

✶ இரப்பர் ✶ மூங்கில் ✶ தென்னை

✶ ரோஸ் மரம் ✶ சின்கோனா ✶ ஏபனி, சிடார்

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com

**10. இந்தியாவில் உள்ள உயிர்க்கோள காப்பகங்கள் ஏதேனும் ஐந்தினை எழுதுக.**

**இந்தியாவில் உள்ள உயிர்க்கோள காப்பகங்கள் :**

- ✶ மன்னார் வளைகுடா
- ✶ நீலகிரி
- ✶ அகத்திய மலை
- ✶ பெரிய நிக்கோபார்
- ✶ சுந்தரவனம்
- ✶ கன்ஜன் ஜங்கா

**11. "புலிகள் பாதுகாப்புத் திட்டம்" எனறால் எனன?**

**புலிகள் பாதுகாப்புத் திட்டம் :**

- ✶ இந்தியாவில் புலிகள் பாதுகாப்பு திட்டம் 1973 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- ✶ புலிகளை பாதுகாக்கவும் அதன் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்யவும் புலிகள் பாதுகாப்பகங்கள் தொடங்கப்பட்டன.

## VI. வேறுபடுத்துக.

**1. வானிலை மற்றும் காலநிலை.**

| வானிலை | காலநிலை |
|---|---|
| ஓர் இடத்தின் குறுகிய கால வளிமண்டல நிலையைக் குறிப்பது. | ஒரு பகுதியின் நீண்டகால வானிலை சராசரியைக் குறிப்பது. |
| குறுகிய காலத்தில் ஏற்படும் வெப்பம், காற்று, மழை, மேகமூட்டம், வறட்சி, சூரிய ஒளி, ஆகியவற்றை குறிக்கிறது. | 30 முதல் 35 ஆண்டுகள் வரை ஏற்படும் வானிலையை மாற்றத்தைக் குறிக்கிறது. |

**2. அயன மண்டல பசுமைமாறாக் காடுகள் மற்றும் இலையுதிர்க் காடுகள்.**

| அயன மண்டல பசுமைமாறாக் காடுகள் | அயன மண்டல இலையுதிர்க் காடுகள் |
|---|---|
| மழைபொழிவு - 200 செ.மீ. க்கும் மேல். | மழைபொழிவு - 100 முதல் 200 செ.மீ. |
| வெப்பநிலை - 22$^{0}$C க்கும் மேல். | வெப்பநிலை - 27$^{0}$C க்கும் மேல். |
| ஈரப்பதம் - 70 சதவீதம். | ஈரப்பதம் - 60 முதல் 70 சதவீதம். |

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com
www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**3. வடகிழக்கு பருவக் காற்று மற்றும் தென்மேற்கு பருவக் காற்று.**

| வடகிழக்கு பருவக் காற்று | தென்மேற்கு பருவக் காற்று |
|---|---|
| செப்டம்பர் இறுதியில் தொடங்குகிறது. | ஜூன் முதல் வாரம் தொடங்குகிறது. |
| இந்தியாவின் மொத்த மழையளவில் 25% கிடைக்கிறது. | இந்தியாவின் மொத்த மழையளவில் 75% கிடைக்கிறது. |
| தமிழ்நாட்டிற்கு அதிகமான மழை தருகிறது. | தமிழ்நாட்டிற்கு குறைவான மழை தருகிறது. |

## VII. காரணம் கண்டறிக.

**1. மேற்கு கடற்கரைச் சமவெளி குறுகலானது.**

- ✶ மேற்கு தொடர்ச்சி மலைகள் அரபிக் கடலுக்கு மிக அருகில் உள்ளது.

**2. இந்தியா அயன மண்டலப் பருவக் காற்று காலநிலையைப் பெற்றுள்ளது.**

- ✶ இந்தியா பருவக் காற்றுகளின் தாக்கத்திற்கு உள்ளாகிறது.

**3. மலைப்பகுதிகள் சமவெளிகளைவிட குளிரானவை.**

- ✶ புவிப்பரப்பில் இருந்து உயரே செல்லச் செல்ல வெப்பநிலை குறைகிறது.

## VIII. விரிவான விடையளிக்கவும்.

**1. தென்மேற்கு பருவக் காற்று குறித்து எழுதுக.**

**தென்மேற்கு பருவக் காற்று :**

- ✶ தென்மேற்கு பருவக்காற்று ஜுன் முதல் வாரத்தில் தென்இந்தியாவில் தொடங்குகிறது.
- ✶ இப்பருவக்காற்று ஜுலை15-இல் அனைத்து இந்தியப் பகுதிகளுக்கும் முன்னேறுகிறது.
- ✶ உலகளாவிய காலநிலை நிகழ்வான "எல்நினோ" பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது.
- ✶ இடி, மின்னலுடன்கூடிய தென்மேற்கு பருவக்காற்றின் துவக்கமே பருவமழை வெடிப்பு.
- ✶ இந்தியாவின் தென்முனையை அடையும்பொழுது இரண்டு கிளைகளாகப் பிரிக்கிறது.
- ✶ இந்தியாவின் ஒட்டு மொத்த மழையளவில் 75 சதவீதம் மழைப்பொழிவைத் தருகிறது.
- ✶ தென்மேற்கு பருவக்காற்று இந்தியாவின் வெப்பநிலையை பெருமளவில் குறைக்கிறது.
- ✶ தமிழ்நாடு மலைமறைவுப் பகுதியில் அமைந்துள்ளதால் குறைவான மழை பெறுகிறது.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

## 2. இந்தியக் காடுகள் பற்றி விவரிக்கவும்.

### இந்தியக் காடுகள் :

**அயன மண்டல பசுமைமாறாக் காடுகள் :**

✶ ரப்பர், ரோஸ் மரம், தென்னை, மூங்கில், எபனி.

**அயன மண்டல இலையுதிர்க் காடுகள் :**

✶ தேக்கு, சால், சந்தனம், ஆம்லா, குசம், படாக்.

**அயன மண்டல வறண்டக் காடுகள் :**

✶ கருவேலம், சீமைக் கருவேலம், ஈச்சமரம், இலுப்பை, ஆலமரம், பலா, ஆவாரம்பூ.

**மலைக் காடுகள் :**

✶ சால், லாரஸ், அமுரா, டாக், ஜாமுன், ஓக், சில்வர் பெர், பைன்.

**அல்பைன் காடுகள் அல்லது ஊசியிலைக் காடுகள் :**

✶ ஓக், சில்வர் பெர், பைன், ஜுனிப்பர்.

**ஓத அலைக் காடுகள் அல்லது சதுப்புநிலக் காடுகள் :**

✶ இது மாங்குரோவ் காடுகள்.

**கடற்கரையோரக் காடுகள் அல்லது கடற்கரை காடுகள் :**

✶ தென்னை, பனை, சவுக்கு.

**ஆற்றங்கரைக் காடுகள் அல்லது நதி வனப்பகுதி :**

✶ புதர் தாவரங்கள், புளியமரம்.

## 3. இந்தியாவில் உள்ள உயிர்க்கோள பெட்டகங்கள் மற்றும் அவைகளின் அமைவிடங்களை எழுதுக.

### இந்தியாவில் உள்ள உயிர்க்கோள பெட்டகங்கள் :

✶ இந்திய அரசாங்கம் மொத்தம் 18 உயிர்க்கோள காப்பகங்களை ஏற்படுத்தியுள்ளது.

✶ உயிர்க்கோள பெட்டகத்தின் ஒருங்கிணைந்த ஓர் அங்கமாக மக்கள் இருக்கிறார்கள்.

✶ இந்தியாவில் நிலம் மற்றும் கடலோர சுற்றுச் சூழலைப் பாதுகாக்க ஏற்படுத்தப்பட்டன.

✶ இவற்றின் முக்கியப் பணி இயற்கை வாழ்விடத்தின் பெரும் பகுதிகளைப் பாதுகாப்பது.

✶ தேசிய பூங்காக்கள், பொருளாதார பயன்பாட்டு அண்மைப் பகுதிகளைப் பாதுகாப்பது.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**இந்தியாவில் உள்ள உயிர்க்கோள பெட்டகங்களின் அமைவிடங்கள் :**

- ✶ இந்தியாவில் 18 உயிர்க்கோள பெட்டகங்களில் 11 யுனெஸ்கோ கீழ் செயல்படுகின்றன.
- ✶ இந்தியாவின் உயிர்க்கோள பெட்டகங்கள் - மன்னார் வளைகுடா, அகத்திய மலை, நீலகிரி, பெரிய நிக்கோபார், சுந்தரவனம், நந்தாதேவி, கஞ்சன் ஜங்கா, நாக்ரேக், பச்மாரி, சிம்லிபால், அமர்கண்டாக், கட்ச், மானாஸ், பன்னா, திகேங் திபங், திப்ரு செய்கொவா, குளிர் பாலைவனம் மற்றும் சேஷாசலம் குன்றுகள் ஆகியன.

## IX. வரைபடப் பயிற்சி.

**இந்திய நிலவரைபடத்தில் கீழ்க்காண் இடங்களைக் குறிக்கவும்.**

1. தென்மேற்கு பருவக் காற்று வீசும் திசை.
2. வடகிழக்கு பருவக் காற்று வீசும் திசை.
3. அதிக மழை பெரும் பகுதிகள்.
4. மலைக் காடுகள்.
5. பன்னா உயிர்க்கோள பெட்டகம்.
6. அகத்தியர் மலை உயிர்க்கோள பெட்டகம்.

www.Padasalai.Net

# புவியியல்

## 3. வேளாண்மைக் கூறுகள்

### V. சுருக்கமாக விடையளி.

**1. "மண்" - வரையறு.**

**மண் வரையறை :**

- ✶ மண் என்பது கனிமங்களின் கூட்டுப் பொருட்கள், மக்கிய தாவரங்கள், விலங்கினப் பொருட்கள், காற்று மற்றும் நீர் ஆகியவற்றை உள்ளடக்கியது.
- ✶ இது புவியின் மேற்பரப்பில் காணப்படும் ஒரு அடுக்காகும்.

**2. இந்தியாவில் காணப்படும் மண் வகைகளின் பெயர்களைப் பட்டியலிடுக.**

**இந்தியாவில் காணப்படும் மண் வகைகளின் பெயர்கள் :**

- ✶ வண்டல் மண்
- ✶ கரிசல் மண்
- ✶ செம்மண்
- ✶ சரளை மண்
- ✶ வறண்ட பாலை மண்
- ✶ காடு மற்றும் மலை மண்
- ✶ உப்பு மற்றும் கார மண
- ✶ களி மண் மற்றும் சதுப்பு நிலம்

**3. கரிசல் மண்ணின் ஏதேனும் இரண்டு பண்புகளை எழுதுக.**

**கரிசல் மண்ணின் பண்புகள் :**

- ✶ டைட்டானியம் மற்றும் இரும்பு தாதுக்கள் உள்ளதால் கருப்பு நிறமாக உள்ளது.
- ✶ ஈரப்பதத்தை நீண்ட நேரம் தக்க வைத்துக் கொள்ளும் தன்மையும் உடையது.

**4. பல்நோக்குத் திட்டம் என்றால் என்ன?**

**பல்நோக்குத் திட்டம் :**

- ✶ பல்நோக்குத் திட்டம் என்பது அறிவியல் முறையிலான நீர்வள மேலாண்மை திட்டமாகும்.
- ✶ ஆற்றின் குறுக்கே பல்வேறு நோக்கங்களுக்காக அணைகள் கட்டுவதைக் குறிக்கிறது.
- ✶ பல்வேறு நோக்கங்கள் - நீர்ப் பாசனம், நீர்மின் சக்தி, குடிநீர், வெள்ளத் தடுப்பு, மீன்வளம்.

www.Padasalai.Net

5. "வேளாண்மை" - வரையறு.

**வேளாண்மை வரையறை :**

- ✶ வேளாண்மை என்பது குறிப்பிடப்பட்ட பயிர்களை உற்பத்தி ய்தும் மற்றும் கால்நடைகளை வளர்த்தும் மக்களுக்கு உணவையும் கால்நடைகளுக்கு தீவனத்தையும், நார் மற்றும் யான இதர பொருட்களை வழங்குவதாகும்.

6. இந்தியாவின் வேளாண்மை முறைகளை குறிப்பிடுக.

**இந்தியாவின் வேளாண்மை முறைகள் :**

- ✶ தன்னிறைவு வேளாண்மை, இடப்பெயர்வு வேளாண்மை, தீவிர வேளாண்மை.
- ✶ வறண்ட நில வேளாண்மை, கலப்பு வேளாண்மை, படிக்கட்டு முறை வேளாண்மை.

7. இந்திய வேளாண் பருவங்களைக் குறிப்பிடுக.

**இந்திய வேளாண் பருவங்கள் :**

- ✶ **காரிஃப் பருவம்** - ஜூன் முதல் செப்டம்பர் வரை
- ✶ **ராபி பருவம்** - அக்டோபர் முதல் மார்ச் வரை
- ✶ **சையத் பருவம்** - ஏப்ரல் முதல் ஜூன் வரை

8. இந்தியாவின் தோட்டப் பயிர்களைக் குறிப்பிடுக.

**இந்தியாவின் தோட்டப் பயிர்கள் :**

- ✶ இந்தியாவில் தேயிலை, காபி, இரப்பர், வாசனைப் பொருட்கள் பயிராகின்றன.
- ✶ மலைச் சரிவுகளில் விளைகின்றன. இதை ஏற்றுமதி செய்யுவே பயிரிடுகின்றனர்.

9. கால்நடைகள் என்றால் என்ன?

**கால்நடைகள் :**

- ✶ கால்நடைகள் இந்தியாவில் விவசாயத்தோடு ஒருங்கிணைந்த கூறுகள் ஆகும்.
- ✶ வேளாண்மை பொய்க்கும் பொழுது வேலைவாய்ப்பும், வருவாயும் அளிக்கின்றன.
- ✶ நிலத்தை உழுவதிலும், பயிர்களுக்கு உரம் அளிப்பதிலும் முக்கிய பங்காற்றுகிறது.

www.Padasalai.Net

10. இந்தியாவில் மீன்வளர்ப்பு பிரிவுகளைப் பற்றி ஒரு சுருக்கமான குறிப்பு தருக.

இந்தியாவில் மீன்பிடிப்பு பிரிவுகள் :

- ✶ **கடல் மீன் பிடிப்பு** - கடற்கரைப் பகுதி, கடற்கரையை ஒட்டிய பகுதி மற்றும் ஆழ்கடல் பகுதிகளில் மீன்பிடிப்பை குறிக்கிறது.
- ✶ **உள்நாட்டு மீன் பிடிப்பு** - ஆறுகள், ஏரிகள், குளங்கள், கால்வாய்கள் மற்றும் கண்மாய்கள் பகுதிகளில் மீன்பிடிப்பை குறிக்கிறது.

## VI. காரணம் கூறுக.

1. வேளாண்மை இந்தியாவின் முதுகெலும்பு.

- ✶ இந்தியாவில் வேளாண்மை 50 சதவீதத்திற்கும் அதிகமான மக்களுக்கு வேலை வாய்ப்பும் நாட்டின் மொத்த வருமானத்தில் 25 சதவீதமும் அளிக்கிறது.

2. மழைநீர் சேமிப்பு அவசியம்.

- ✶ மழைநீர் வீணாக கடலில் கலப்பதை தடுக்கவும், நிலத்தடி நீர்மட்டதை உயர்த்தவும் மழைநீர் சேமிப்பு அவசியமாகிறது.

3. சிறிய வேளாண் பண்ணைகள் இந்தியாவில் அதிகம்.

- ✶ இந்தியாவில் மக்கள் அடர்த்தி அதிகமாக உள்ள பகுதிகளில் நிலங்கள் துண்டாக்கப்பட்டு சிறிய வேளாண் பண்ணைகள் அதிகம் உள்ளன.

## VII. வேறுபடுத்துக.

1. ராபி பருவம் மற்றும் காரிஃப் பருவம்.

| ராபி பருவம் | காரிஃப் பருவம் |
|---|---|
| அக்டோபர் முதல் மார்ச் வரை. | ஜூன் முதல் செப்டம்பர் வரை. |
| வட மாநிலங்கள் - கோதுமை, பருப்பு, ஆலிவிதைகள், கடுகு, பார்லி. | வட மாநிலங்கள் - நெல், பருத்தி, மக்காச்சோளம், கம்பு, உளுந்து. |
| தென் மாநிலங்கள் - நெல், கேழ்வரகு, மக்காச்சோளம், கம்பு, நிலக்கடலை. | தென் மாநிலங்கள் - நெல், கேழ்வரகு, மக்காச்சோளம், கம்பு, நிலக்கடலை. |

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

## 2. வெள்ளப் பெருக்கு கால்வாய் மற்றும் வற்றாத கால்வாய்.

| வெள்ளப் பெருக்கு கால்வாய் | வற்றாத கால்வாய் |
|---|---|
| நதிகளின் குறுக்கே தடுப்பணைகள் இன்றி தண்ணீர் எடுக்கப்படுகிறது. | வற்றாத நதிகளின் குறுக்கே அணை கட்டி தண்ணீர் எடுக்கப்படுகிறது. |
| வெள்ளக் காலங்களில் தண்ணீரை திசை திருப்பப் பயன்படுகிறது. | நீர்பாசனத்திற்கு தண்ணீரை அனுப்பி வைக்கப் பயன்படுகிறது. |
| மழைக் காலங்களில் மட்டும் பயன்பாட்டில் இருக்கும். | ஆண்டு முழுவதும் பயன்பாட்டில் இருக்கும். |

## 3. கடல் மீன்பிடிப்பு மற்றும் உள்நாட்டு மீன் பிடிப்பு.

| கடல் மீன்பிடிப்பு | உள்நாட்டு மீன் பிடிப்பு |
|---|---|
| கடற்கரைப் பகுதி, மற்றும் ஆழ்கடல் பகுதிகளில் நடைபெறுகிறது. | ஆறுகள், ஏரிகள், குளங்கள் மற்றும் கால்வாய்களில் நடைபெறுகிறது. |
| கண்டத்திட்டு பகுதிகளில் மீன் பிடித்தல். | நன்னீர் நிலைகளில் மீன் பிடித்தல். |
| கேரளா முதன்மை மாநிலமாககும். | ஆந்திரா முதன்மை மாநிலமாககும். |

## 4. வண்டல் மண் மற்றும் கரிசல் மண்.

| வண்டல் மண் | கரிசல் மண் |
|---|---|
| நெல், கோதுமை, கரும்பு மற்றும் எண்ணெய் வித்துக்கள் விளைகிறது. | பருத்தி, தினை வகைகள், புகையிலை மற்றும் கரும்பு விளைகிறது. |
| சிற்றோடைகள் மற்றும் ஆறுகளினால் படிய வைக்கப்பட்டு உருவானது. | தக்காணப் பகுதியில் உள்ள பசால்ட் பாறைகளில் இருந்து உருவானது. |
| பரவல் - பஞ்சாப், ஹரியானா, பீகார், மேற்கு வங்கம் உத்திரப் பிரதேசம், | பரவல் - மகராஷ்டிரா, மாளவப் பீடபூமி கத்தியவார் தீபகற்பம், தெலங்கானா. |

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

## VIII. பத்தியளவில் விடையளி.

**1. இந்திய மண்வகைகளைக் குறிப்பிட்டு, மண்ணின் பண்புகள் மற்றும் பரவல் பற்றி விவரி.**

**1. வண்டல் மண் :**

✶ பண்புகள் - வண்டல், மண்மண்டி களிமண் போன்ற கலவைகளுடன் காணப்படுகிறது.

✶ பரவல் - உத்திரப் பிரதேசம், உத்தரகாண்ட், பஞ்சாப், ஹரியானா, மேற்கு வங்கம், பீகார்.

**2. கரிசல் மண் :**

✶ பண்புகள் - ஈரமாக இருந்தால் சேறாக மாறும், ஈரப்பதத்தை நீண்ட நேரம் தக்க வைக்கும்.

✶ பரவல் - மகராஷ்டிரா, கத்தியவார் தீபகற்பம், மாளவப் பீடபூமி, தெலங்கானா, ராயல்சீமா.

**3. செம்மண் :**

✶ பண்புகள் - மென்துகள்கள், உப்புக் கரைசல், வெண்களிப் பாறைத் தாதுக்கள் உடையது.

✶ பரவல் - தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஜார்கண்ட், சோட்டா நாகபுரி பீடபூமி.

**4. சரளை மண் :**

✶ பண்புகள் - உயரமான பகுதியில் அமிலத் தன்மை அதிகம். ஈரப்பதத்தை தக்க வைக்காது.

✶ பரவல் - அசாம் குன்றுகள், ஒடிசா, மேற்கு தொடர்ச்சி மலையின் அடிவாரம்.

**5. காடு மற்றும் மலை மண் :**

✶ பண்புகள் - மென்மையான மணல் மற்றும் பாறைத் துகள்கள் கலந்து காணப்படுகிறது.

✶ பரவல் - இமாச்சலப் பிரதேசம், உத்தரகாண்ட், சிக்கிம், ஜம்மு - காஷ்மீர்.

**6. வறண்ட பாலை மண் :**

✶ பண்புகள் - குறைந்த ஈரத் தன்மை, குறைந்த இலைமக்கு சத்து, வெளிர் நிறம் உடையது.

✶ பரவல் - இராஜஸ்தான், வடக்கு குஜராத், தெற்கு பஞ்சாப்.

**7. உப்பு மற்றும் கார மண் :**

✶ பண்புகள் - சிதைக்கப்படாத பாறைகள் மற்றும் சிதைவுற்ற கனிமங்களை உடையது.

✶ பரவல் - ஆந்திரா, கர்நாடகம், மகாராஷ்டிரா, இராஜஸ்தான், பஞ்சாப், உத்திரப் பிரதேசம்.

**8. களிமண் மற்றும் சதுப்பு நிலம் :**

✶ பண்புகள் - அதிக ஈரத் தன்மை, அதிக இலைமக்கு சத்து, கருமை நிறம் உடையது.

✶ பரவல் - ஒடிசா, பீகார், மேற்கு வங்கம், தமிழ்நாடு, கேரளாவில் கோட்டயம், ஆலப்புழை.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**2. ஏதேனும் இரண்டு இந்திய பல்நோக்கு திட்டங்கள் பற்றி எழுதுக.**

**இந்திய பல்நோக்கு திட்டங்கள் :**

**1. ஹிராகுட் திட்டம் :**

✶ உலகின் மிக நீளமான அணையாகத் திகழ்கிறது.

✶ மகாநதி ஆற்றின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ளது.

✶ ஒடிசா மாநிலம் அதிகம் பயன் பெறுகிறது.

✶ 347.5 மெகாவாட் நீர்மின்சக்தி உற்பத்தியாகிறது.

✶ 1,41,600 சதுர.கி.மீ. பரப்பளவு நிலம் நீர்பாசனம் பெறுகிறது.

**2. பக்ரா நங்கல் திட்டம் :**

✶ உலகின் பெரிய புவிஈர்ப்பு அணையாகத் திகழ்கிறது.

✶ சட்லஜ் ஆற்றின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ளது.

✶ பஞ்சாப், ஹரியானா, இராஜஸ்தான் அதிகம் பயன் பெறுகின்றன.

✶ 1500 மெகாவாட் நீர்மின்சக்தி உற்பத்தியாகிறது.

✶ 52,609 சதுர.கி.மீ. பரப்பளவு நிலம் நீர்பாசனம் பெறுகிறது.

**3. தீவிர வேளாண்மை மற்றும் தோட்ட வேளாண்மையின் பண்புகளை வெளிக்கொணர்க.**

**தீவிர வேளாண்மையின் பண்புகள் :**

✶ இயந்திரங்கள் மற்றும் பல்வேறு நவீன யுக்திகள் மூலம் உற்பத்தியை அதிகரித்தல்.

✶ பூச்சிக் கொல்லிகள், இரசாயன உரங்கள் பயன்படுத்தி விளைச்சலை பெருக்குதல்.

✶ இயந்திர மயமாக்கல் மற்றும் தீவிரப்படுத்துதல் மூலம் கால்நடைகளை வளர்த்தல்.

✶ பசுக்கள், பன்றிகள், கோழிகள் ஆகியவை பெரிய பண்ணைகள் மூலம் வளர்த்தல்.

**தோட்ட வேளாண்மையின் பண்புகள் :**

✶ தேயிலை, காபி, இரப்பர், வாசனைப் பொருட்கள் ஆகியவை தோட்டப் பயிர்கள்.

✶ தோட்டப் பயிர்கள் மலைச் சரிவுகளில் பெரிய எஸ்டேட் பண்ணைகளாக உள்ளன.

✶ தோட்ட வேளாண்மை பயிர்கள் ஏற்றுமதி செய்யும் நோக்குடன் பயிரிடப்படுகிறது.

✶ தோட்ட வேளாண்மையில் பரந்த நிலத்தில் ஒரு பயிர் மட்டுமே விளைவிக்கின்றனர்.

www.Padasalai.Net

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**4. நெல் மற்றும் கோதுமை பயிரிடுவதற்கு ஏற்ற புவியியல் சூழல்கள் பற்றி விவரி.**

**நெல் பயிரிடுவதற்கு ஏற்ற புவியியல் சூழல்கள் :**

- ✶ நெல் விளைய $24^0$ செல்சியஸ் சராசரி வெப்ப நிலை தேவைப்படுகிறது.
- ✶ ஆண்டுக்கு 150 செ.மீ மழையளவு உள்ள பகுதிகளில் பயிரிடப்படுகிறது.
- ✶ வளமான களிமண் அல்லது வண்டல் மண் நெல் சாகுபடிக்கு ஏற்றது.
- ✶ நெல் ஒரு அயன மண்டலப் பயிர். டெல்டா பகுதிகளில் அதிகம் விளைகிறது.

**கோதுமை பயிரிடுவதற்கு ஏற்ற புவியியல் சூழல்கள் :**

- ✶ கோதுமை விளைய விதைக்கும் பருவத்தில் $10^0$ - $15^0$ C வெப்ப நிலையும், முதிர் பருவத்தில் $20^0$ - $25^0$ C வெப்ப நிலையும் தேவைப்படுகிறது.
- ✶ ஆண்டுக்கு 50 - 60 செ.மீ மழையளவு உள்ள பகுதிகளில் பயிரிடப்படுகிறது.
- ✶ களிமண் அல்லது வண்டல் மண் கலந்த களிமண் கோதுமை சாகுபடிக்கு ஏற்றது.
- ✶ கோதுமை ஒரு மித வெப்ப மண்டலப் பயிர். குளிர் பிரதேசங்களில் அதிகம் விளைகிறது.

## X. நிலவரைபட பயிற்சி.

**இந்திய நிலவரைபடத்தில் கீழ்க்காண் இடங்களைக் குறிக்கவும்.**

1) வண்டல் மண்அதிகம் காணப்படும் பகுதிகளைக் குறிப்பிடுக.
2) கரிசல் மண் காணப்படும் பகுதிகளைக் குறிக்கவும்.
3) ஹிராகுட் அணை, மேட்டூர் அணை மற்றும் தாமோதர் அணைகளின் அமைவிடங்களைக் குறிக்கவும்.
4) சணல் விளையும் பகுதிகளைக் குறிக்கவும்.
5) காபி மற்றும் தேயிலை விளையும் பகுதிகள் ஏதேனும் மூன்றை குறிக்கவும்.
6) பாலை மண் காணப்படும் பகுதிகளைக் குறிக்கவும்.
7) தூத்துக்குடி, சென்னை, கொச்சின், மும்பை மற்றும் மசூலிப்பட்டினம் மீன் பிடித்தல் மையங்களைக் கண்டறிக.
8) காவேரி மற்றும் கோதாவரி டெல்டா பகுதிகளைக் குறிக்கவும்.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.Com

# புவியியல்

## 4. வளங்கள் மற்றும் தொழிலகங்கள்

### III. சுருக்கமாக விடையளி.

**1. வளத்தை வரையறுத்து அதன் வகைகளை குறிப்பிடுக.**

**வளம் மற்றும் அதன் வகைகள் :**

✶ இயற்கையில் இருந்து பெறப்பட்டு உயிரினங்களால் பயன்படுத்தப்படும் அனைத்துமே வளம் என்று அழைக்கப்படுகிறது.

i. புதுப்பிக்க இயலும் வளங்கள்.

ii. புதுப்பிக்க இயலாத வளங்கள்.

**2. இந்தியாவில் இரும்பு தாது உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் மாநிலங்களைக் குறிப்பிடுக.**

**இந்தியாவில் இரும்பு தாது உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் மாநிலங்கள் :**

✶ ஜார்கண்ட் முதல் இடத்திலும், ஒடிசா இரண்டாவது இடத்திலும் உள்ளது.

✶ சத்தீஸ்கர், பீகார், அசாம், கர்நாடகா, ஆந்திரா, தமிழ்நாடு ஆகியன.

**3. கனிமங்கள் மற்றும் அதன் வகைகள் யாவை?**

**கனிமங்கள் மற்றும் அதன் வகைகள் :**

✶ ஒரு குறிப்பிட்ட வேதியியல் மற்றும் இயற்பியல் பண்புகளைக் கொண்ட உயிருள்ள மற்றும் உயிரற்ற இயற்கை மூலங்களே கனிமங்கள் ஆகும்.

i. உலோகக் கனிமங்கள்.

ii. அலோகக் கனிமங்கள்.

**4. மெக்னீசியத்தின் பயன்களை குறிப்பிடுக.**

**மெக்னீசியத்தின் பயன்கள் :**

✶ ஒரு டன் இரும்பு எஃகு உற்பத்தி செய்வதற்கு 10 கிலோ மாங்கனீசு தேவைப்படுகிறது.

✶ வெளுக்கும் தூள், பூச்சிக் கொல்லிகள், வண்ணப் பூச்சிகள், மின்கலன்கள் தயாரிக்க.

www.Padasalai.Net

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

5. **இயற்கை எரிவாயு என்றால் என்ன?**

**இயற்கை எரிவாயு :**

- இயற்கை எரிவாயு பெட்ரோலிய பகுதிகளுடன் இணைந்து காணப்படுகிறது.
- இயற்கையாக உருவாகும் ஒரு நீர்ம கரிம வாயு. மீத்தேன் வாயு அதிகம் உள்ளது.
- சமையல் எரிவாயு, வாகன எரிபொருள், மின் உற்பத்தி தயாரிக்க பயன்படுகிறது.

6. **நிலக்கரியின் வகைகளை அதன் கரிம அளவுகளுடன் குறிப்பிடுக.**

**நிலக்கரியின் வகைகளும் அதன் கரிம அளவுகளும் :**

- ஆந்தரசைட் - 80 முதல் 90 சதவீதம்.
- பிட்டுமினஸ் - 60 முதல் 80 சதவீதம்.
- பழுப்பு நிலக்கரி - 40 முதல் 60 சதவீதம்.
- மரக்கரி - 40 சதவீதத்திற்கும் குறைவு.

7. **இந்தியாவில் சணல் உற்பத்தி செய்யும் முக்கிய பகுதிகளைக் குறிப்பிடுக.**

**இந்தியாவில் சணல் உற்பத்தி செய்யும் முக்கிய பகுதிகள் :**

- மேற்கு வங்கம், அசாம், பீகார், ஒடிசா, ஆந்திரா, உத்திரப் பிரதேசம் மற்றும் சத்தீஸ்கர்.
- மேற்கு வங்கம் - ஹூக்ளி, டிட்டகார், ஜகட்டட், பட்ஜ்-பட்ஜ், ஹவுரா மற்றும் பத்ரேஸ்வர்.

8. **இந்தியாவின் முக்கிய எண்ணெய் உற்பத்தி பகுதிகளைக் குறிப்பிடுக.**

**இந்தியாவின் முக்கிய எண்ணெய் உற்பத்தி பகுதிகள் :**

**மேற்கு கடற்கரை பகுதி :**

- மும்பை ஹை எண்ணெய் வயல், குஜராத் கடற்கரை, பேஸ்ஸைம் எண்ணெய் வயல்.
- அலியாபெத் எண்ணெய் வயல், அங்கலேஸ்வர், காம்பே - லூனி பகுதிகள்.

**கிழக்கு கடற்கரை பகுதி :**

- பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கு, சர்மா பள்ளத்தாக்கு, திக்பாய் எண்ணெய் வயல்.
- நாகர்காட்டியா எண்ணெய் வயல், மன்னார் வளைகுடா, பலேஷ்வர் கடற்கரை.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

## IV. வேறுபடுத்துக.

### 1. புதுப்பிக்க இயலும் மற்றும் புதுப்பிக்க இயலா வளங்கள்.

| புதுப்பிக்க இயலும் வளங்கள் | புதுப்பிக்க இயலா வளங்கள் |
|---|---|
| இயற்கையான முறையில் மீட்டுருவகாக்கம் செய்து கொள்வது. | இயற்கையான முறையில் மீட்டுருவகாக்கம் செய்ய இயலாது. |
| வற்றாத இயற்கை வளங்கள். | வற்றும் இயற்கை வளங்கள். |
| உதாரணம் - சூரிய ஆற்றல், ஓத சக்தி, காற்று சக்தி, உயிரி ஆற்றல். | உதாரணம் - நிலக்கரி, பெட்ரோலியம், இயற்கைவாயு, இரும்புத் தாது. |

### 2. உலோகம் மற்றும் அலோக கனிமங்கள்.

| உலோக கனிமங்கள் | அலோக கனிமங்கள் |
|---|---|
| ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உலோகங்களைக் கொண்டிருக்கும். | இவ்வகை கனிமங்களில் உலோகத் தன்மை இருப்பதில்லை. |
| தாது படிவங்களாக உள்ளன. | புதை படிவங்களாக உள்ளன. |
| உலோக கனிமங்கள் - இரும்பு, தாமிரம், மாங்கனீசு, பாக்சைட், நிக்கல், காரியம், துத்தநாகம், தங்கம். | அலோக கனிமங்கள் - மைக்கா, சுண்ணாம்பு, ஜிப்சம், நைட்ரேட், நிலக்கரி, பெட்ரோலியம். |

### 3. வேளாண் சார்ந்த மற்றும் கனிமம் சார்ந்த தொழிலகங்கள்.

| வேளாண் சார்ந்த தொழிலகங்கள் | கனிமம் சார்ந்த தொழிலகங்கள் |
|---|---|
| வேளாண் உற்பத்தி பொருட்களை மூலப்பொருட்களாக கொண்டது. | உலோக மற்றும் அலோக கனிமங்களை மூலப்பொருட்களாக கொண்டது. |
| உதாரணம் - பருத்தி, சணல், பட்டு நெசவாலைகள், சர்க்கரை ஆலைகள். | உதாரணம் - இரும்பு எஃகு தொழிற்சாலை. |
| அத்தியாவசியப் பொருட்கள் தயாரிக்கப்படுகிறது. | ஆடம்பரமானப் பொருட்கள் தயாரிக்கப்படுகிறது. |

www.Padasalai.Net

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

## 4. சணல் ஆலைகள் மற்றும் சர்க்கரை ஆலைகள்.

| சணல் ஆலைகள் | சர்க்கரை ஆலைகள் |
|---|---|
| சணல் பயிரில் இருந்து ஒரு வகை இழை நார் பிரித்தெடுத்தல். | கரும்பு, சர்க்கரை பொருட்கள் அடங்கிய பயிரில் இருந்து சர்க்கரை தயாரித்தல். |
| சணல் பயிரிடும் பகுதிகளுக்கு அருகில் அமைந்துள்ளன. | கரும்பு பயிரிடும் பகுதிகளுக்கு அருகில் அமைந்துள்ளன. |
| இந்தியாவின் இரண்டாவது பெரிய நெசவாலைத் துறையாகும். | இந்தியாவின் இரண்டாவது பெரிய வேளாண்சார் தொழில் துறையாகும். |

## 5. மரபு சார் மற்றும் மரபு சாரா எரிசக்தி.

| மரபு சார் எரிசக்தி | மரபு சாரா எரிசக்தி |
|---|---|
| மனிதர்களால் பாரம்பரிய முறையாக பயன்படுத்தப்பட்டு வரும் எரிசக்தி. | பாரம்பரிய முறைக்கு மாற்றாக பயன்படுத்தப்பட்டு வரும் எரிசக்தி. |
| உதாரணம் - நிலக்கரி, பெட்ரோலியம், இயற்கை எரிவாயு, அணு சக்தி. | உதாரணம் - சூரிய ஆற்றல், காற்று ஆற்றல், உயிரி சக்தி, நீர் மின்சக்தி. |
| சுற்றுசூழலை மாசுபடுத்தும். புதுப்பிக்க இயலாத இயற்கை வளங்கள். | சுற்றுசூழலை மாசுபடுத்தும். புதுப்பிக்க இயலும் இயற்கை வளங்கள். |

www.Padasalai.Net

## VI. வரைபடப் பயிற்சி :

**கொடுக்கப்பட்டுள்ள இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.**

1. இரும்புத்தாது உற்பத்தி மையங்கள்.
2. பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு மையங்கள்.
3. நிலக்கரி சுரங்கங்கள்.
4. பருத்தி விளையும் பகுதிகள்.
5. இரும்பு எஃகு தொழிலகங்கள்.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

## V. ஒரு பத்தியில் விடையளி.

**1. இந்தியாவில் உள்ள பருத்தி நெசவாலைகளின் பரவல் பற்றி எழுதுக.**

**இந்தியாவில் உள்ள பருத்தி நெசவாலைகளின் பரவல் :**

- ✶ இந்தியாவில் தற்பொழுது மொத்தம் 1719 பருத்தி நெசவாலைகள் அமைந்துள்ளன.
- ✶ இந்தியாவில் பருத்தி நெசவாலைகளின் பரவல் - மகாராஷ்டிரம், குஜராத், மேற்கு வங்கம், உத்திரப் பிரதேசம் மற்றும் தமிழ்நாடு.
- ✶ மும்பை மற்றும் அதன் புறநகர் பகுதியில் பருத்தி ஆலைகள் செரிந்து காணப்படுகிறது.
- ✶ மும்பை மாநகரம் இந்தியாவின் "மான்செஸ்டர்" என்று அழைக்கப்படுகிறது.
- ✶ தமிழ்நாட்டில் தற்பொழுது மொத்தம் 435 பருத்தி நெசவாலைகள் அமைந்துள்ளன.
- ✶ தமிழ்நாட்டில் பருத்தி நெசவாலைகளின் பரவல் - ஈரோடு, திருப்பூர், கரூர், சென்னை, திருநெல்வேலி, மதுரை, தூத்துக்குடி, சேலம் மற்றும் விருதுநகர்.
- ✶ தமிழ்நாட்டில் கோயம்புத்தூரில் மட்டுமே 200 பருத்தி நெசவாலைகள் உள்ளன.
- ✶ கோயம்புத்தூர் தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படுகிறது.

**2. ஹூக்ளி ஆற்றுப் பகுதியில் சணல் தொழிலகங்கள் செறிந்து காணப்படுவதற்கான காரணிகளை விளக்குக.**

**ஹூக்ளி ஆற்றுப் பகுதியில் சணல் தொழிலகங்கள் செறிந்து காணப்படுவதற்கான காரணிகள் :**

- ✶ மேற்கு வங்கத்தில் ஹூக்ளி ஆற்றங்கரை நெடுகிலும் சணல் உற்பத்தியாகிறது.
- ✶ சணல் செடியில் இருந்து நார் பிரித்தெடுக்க ஓடும் நீரில் ஊறவைக்க வேண்டும்.
- ✶ சணல் செடியை ஊறவைக்கத் தேவையான நீரை ஹூக்ளி ஆறு வழங்குகிறது.
- ✶ ஹூக்ளி ஆற்றுப் பகுதிக்கு கச்சா சணல் கொண்டு வருவது எளிதாக உள்ளது.
- ✶ சணல் பொருட்கள் ஏற்றுமதிக்கு வசதியாக ஹூக்ளி துறைமுகம் அமைந்துள்ளது.
- ✶ சணல் ஆலைகள் இந்தியாவின் இரண்டாவது பெரிய நெசவாலைத் துறையாகும்.
- ✶ சணல் விலை மலிவான இழை நாராகும். அது தங்க இழைப்பயிர் எனப்படுகிறது.
- ✶ சணல் பைகள், கூடார துணிகள், சிப்பப் பைகள், தரைவிரிப்புகள் தயாரிக்கப்படுகிறது.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**3. இந்தியாவின் இரும்பு எஃகு தொழிலகங்கள் பற்றி ஒரு தொகுப்பு எழுதுக.**

**இந்தியாவின் இரும்பு எஃகு தொழிலகங்கள் :**

| தொழிலகங்களின் பெயர்கள் | அமைவிடம் | நிறுவப்பட்ட ஆண்டு | உற்பத்தி பொருட்கள் |
|---|---|---|---|
| டாட்டா இரும்பு எஃகு நிறுவனம் | ஜாம்ஷெட்பூர் (ஜார்கண்ட்) | 1911 | தேனிரும்பு |
| இந்தியா இரும்பு எஃகு நிறுவனம் | பர்ன்பூர், ஹிராப்பூர், (மேற்கு வங்காளம்) | 1972 | தேனிரும்பு, கச்சா எஃகு |
| இந்தியா இரும்பு எஃகு நிறுவனம் | பத்ராவதி (கர்நாடகா) | 1923 | கலப்பு தேனிரும்பு, கடல் பாசி எஃகு |
| இந்துஸ்தான் இரும்பு எஃகு நிறுவனம் (ரஷ்யா உதவி) | பிலாய் (சத்தீஸ்கர்) | 1957 | ரயில்வே (ம) கப்பல் கட்டும் உபகரணம் |
| இந்துஸ்தான் இரும்பு எஃகு நிறுவனம் (ஜெர்மனி உதவி) | ரூர்கேலா (ஒடிசா) | 1965 | மின்முலாம் பூசிய (ம) மின்சாதன தகடுகள் |
| இந்துஸ்தான் இரும்பு எஃகு நிறுவனம் (இங்கிலாந்து உதவி) | துர்காபூர் (மேற்கு வங்காளம்) | 1959 | உலோக கலவை ரயில்வே உபகரணம் |
| இந்துஸ்தான் இரும்பு எஃகு நிறுவனம் (ரஷ்யா உதவி) | பொகாரோ ஜார்கண்ட் | 1972 | இரும்பு கழிவு இரும்பு உலோகம் |
| சேலம் எஃகு ஆலை | சேலம் தமிழ்நாடு | 1982 | துருப்பிடிக்காத இரும்பு |

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# புவியியல்

## 5. இந்தியா - மக்கள் தொகை, போக்குவரத்து தகவல் தொடர்பு மற்றும் வணிகம்

### III. குறுகிய விடையளி.

**1. மனிதவள மேம்பாடு என்றால் என்ன?**

**மனிதவள மேம்பாடு :**

✶ மனிதவள மேம்பாடு என்பது கல்வி, உடல்நலம், வருமானம், அதிகாரம் போன்றவைகளில் மக்களுக்கான வாய்ப்புகளை அதிகப்படுத்தும் ஒரு செயல் முறையாகும்.

✶ மனிதவள மேம்பாடு என்பது ஆரோக்கியம், கல்வி, வருமானம் ஆகிய மூன்று அடிப்படை பரிமாணங்களைக் கொண்ட ஒரு கூட்டுக் குறியீடாகும்.

**2. இடம்பெயர்வு என்றால் என்ன? அதன் வகைகளைக் குறிப்பிடுக.**

**இடம்பெயர்வு மற்றும் அதன் வகைகள் :**

✶ இடப்பெயர்வு என்பது ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு மக்கள் இடம் பெயர்ந்து செல்வதைக் குறிக்கிறது. இடப்பெயர்வு இரு வகைப்படும்.

1. உள்நாட்டு இடப்பெயர்வு (ஒரு நாட்டின் எல்லைக்குள் செல்வது)

2. சர்வதேச இடப்பெயர்வு (ஒரு நாட்டின் எல்லையை தாண்டி செல்வது)

**3. இரயில் போக்குவரத்தின் நன்மைகள் ஏதேனும் நான்கினை எழுதுக.**

**இரயில் போக்குவரத்தின் நன்மைகள் :**

✶ வணிகம், சுற்றுலா மற்றும் கல்வி போன்றவற்றை ஊக்குவிக்கிறது.

✶ மக்களை ஒன்றிணைப்பதன் மூலம் தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கிறது.

✶ எளிதில் அழுகக்கூடிய வேளாண் பொருட்களை விரைவாக கொண்டு செல்கிறது.

✶ தொழிற்சாலைக்கும் சந்தைகளுக்கும் பொருட்களை கொண்டு செல்ல உதவுகிறது.

www.Padasalai.Net

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

4. நம் நாட்டின் குழாய் போக்குவரத்து அமைப்பு பற்றி ஒரு குறிப்பு எழுதுக.

நம் நாட்டின் குழாய் போக்குவரத்து அமைப்பு :

✶ மேல் அசாமில் உள்ள எண்ணெய் வயலில் இருந்து கான்பூர் வரை செல்கிறது.

✶ குஜராத்தில் சலாயா பகுதியில் இருந்து, பஞ்சாபில் ஜலந்தர் வரை செல்கிறது.

✶ குஜராத்தில் ஹஜிரா முதல் உத்தரப் பிரதேசத்தில் ஜெகதீஷ்பூர் வரை செல்கிறது.

5. இந்தியாவின் முக்கிய உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்துகளைக் குறிப்பிடுக.

இந்தியாவின் முக்கிய உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்துகள் :

✶ கங்கை ஆற்றில் ஹால்தியா - அலகாபாத் இடையே 1620 கி.மீ நீளம் செல்கிறது.

✶ பிரம்மபுத்ரா ஆற்றில் துபிரி - காடியா இடையே சுமார் 891 கி.மீ நீளம் செல்கிறது.

✶ கேரளா மாநிலத்தில் கொல்லம் - கோட்டபுரம் இடையே 205 கி.மீ நீளம் செல்கிறது.

6. தகவல் தொடர்பு என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

தகவல் தொடர்பு மற்றும் அதன் வகைகள் :

✶ தகவல் தொடர்பு என்பது தகவல்கள், எண்ணங்கள் மற்றும் கருத்துக்கள் ஆகியவற்றின் பரிமாற்றத்தைக் குறிக்கிறது. தகவல் தொடர்பு இரு வகைப்படும்.

1. தனிமனித தகவல் தொடர்பு, 2. பொதுத் தகவல் தொடர்பு.

7. பன்னாட்டு வணிகம் - வரையறு.

பன்னாட்டு வணிகம் :

✶ இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளுக்கு இடையே நடைபெறும் வணிகம் பன்னாட்டு வணிகம் அல்லது அயல்நாட்டு வணிகம் என அழைக்கப்படுகிறது. ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செயல்கள் நடைபெறுகிறது.

8. சாலைப் போக்குவரத்தின் சாதக அம்சங்களை குறிப்பிடுக.

சாலைப் போக்குவரத்தின் சாதக அம்சங்கள் :

✶ இது குறுகிய மத்திய மற்றும் தொலைதூர சேவைகளுக்கு பொருத்தமானது ஆகும்.

✶ சாலைகள் அமைப்பதும், சாலைகளை பராமரிப்பதும் விலை மலிவானதாக உள்ளது.

✶ பண்ணைகள், தொழிற்சாலைகள், சந்தைகள் என எங்கும் எளிதில் செல்ல முடிகிறது.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

## IV. வேறுபடுத்துக.

### 1. மக்கள் அடர்த்தி மற்றும் மக்கள் தொகை வளர்ச்சி.

| மக்கள் அடர்த்தி | மக்கள் தொகை வளர்ச்சி |
|---|---|
| சராசரியாக ஒரு ச.கி.மீ. பரப்பளவில் வசிக்கும் மக்களின் எண்ணிக்கையை குறிப்பிடுகிறது. | குறிப்பிட்ட காலத்தில் ஒரு நாட்டின் மக்கள் தொகை எண்ணிக்கையில் ஏற்படும் மாற்றத்தை குறிப்பிடுகிறது. |
| மக்கள் தொகை பரவலை அறிந்து கொள்வதற்கு உதவுகிறது. | மக்கள் தொகை மாற்றத்தை அறிந்து கொள்வதற்கு உதவுகிறது. |
| இந்தியா மக்கள் அடர்த்தி மிகுந்த பத்து நாடுகளில் ஒன்றாக உள்ளது. | இந்தியா மக்கள் தொகை மிகுந்த இரண்டாவது நாடாக உள்ளது. |

### 2. தனிநபர் தகவல் தொடர்பு மற்றும் பொதுத் தகவல் தொடர்பு.

| தனிநபர் தகவல் தொடர்பு | பொதுத் தகவல் தொடர்பு |
|---|---|
| இரு தனி நபர்களுக்கு இடையேயான தகவல் பரிமாற்றத்தை குறிக்கிறது. | ஒரே நேரத்தில் பல லட்சம் மக்கள் தகவல் பெறுவதை குறிக்கிறது. |
| அஞ்சல் சேவை, தந்தி, தொலைபேசி, கைப்பேசி, மின்அஞ்சல் ஆகியவை. | செய்தித்தாள், தொலைக்காட்சி, வானொலி, இணையம் ஆகியவை. |
| பயனாளிகள் இடையே நேரடித் தொடர்பை ஏற்படுத்துகிறது. | விழிப்புணர்வு, கல்வி, பொழுதுபோக்கு அம்சங்களை வழங்குகிறது. |

### 3. அச்சு ஊடகம் மற்றும் மின்னணு ஊடகம்.

| அச்சு ஊடகம் | மின்னணு ஊடகம் |
|---|---|
| முதன்முதலில் தோன்றிய பொது தகவல் தொடர்பு சாதனம். | பிற்காலத்தில் தோன்றிய பொது தகவல் தொடர்பு சாதனம். |
| உதாரணம் - செய்தித்தாள், இதழ்கள் மற்றும் கட்டுரைகள். | உதாரணம் - தொலைக்காட்சி, வானொலி மற்றும் இணையம். |
| வாசிக்க முடியும். அனைத்து பிரிவு மக்களையும் சென்றடையும். | பார்க்கவும் கேட்கவும் முடியும். வசதி படைத்த மக்களையே சென்றடையும். |

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.Com

4. சாலைவழிப் போக்குவரத்து மற்றும் இரயில்வழிப் போக்குவரத்து.

| சாலைவழிப் போக்குவரத்து | இரயில்வழிப் போக்குவரத்து |
|---|---|
| குறுகிய தூர பயணத்திற்கு உகந்தது. | தொலை தூர பயணத்திற்கு உகந்தது. |
| சாலைகளை அமைப்பது மற்றும் பராமரிப்பது எளிதானது. | இரயில் பாதைகளை அமைப்பது மற்றும் பராமரிப்பது கடினமானது. |
| அனைத்து மக்களும் பயன்படுத்தக் கூடிய மலிவான போக்குவரத்து. | ஓரளவு வசதி படைத்த மக்கள் பயன்படுத்தக் கூடியது போக்குவரத்து. |

5. நீர்வழிப் போக்குவரத்து மற்றும் வான்வழிப் போக்குவரத்து.

| நீர்வழிப் போக்குவரத்து | வான்வழிப் போக்குவரத்து |
|---|---|
| பழமையான போக்குவரத்து. விலை மலிவான போக்குவரத்து. | நவீனகால போக்குவரத்து. விலை அதிகமான போக்குவரத்து. |
| கனமான மற்றும் அதிக அளவு சரக்குகளை கொண்டு செல்கிறது. | கனமற்ற மற்றும் குறைந்த அளவு சரக்குகளை கொண்டு செல்கிறது. |
| குறைவான எரிபொருள் செலவினம் கொண்ட போக்குவரத்து. | அதிகமான எரிபொருள் செலவினம் கொண்ட போக்குவரத்து. |

6. உள்நாட்டு வணிகம் மற்றும் பன்னாட்டு வணிகம்.

| உள்நாட்டு வணிகம் | பன்னாட்டு வணிகம் |
|---|---|
| ஒரு நாட்டின் எல்லைக்குள் மட்டுமே நடைபெறும். | இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளுக்கு இடையே நடைபெறும். |
| உள்நாட்டு பணம் / நாணயம் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. | அந்நிய நாட்டு பணம் அதிகமாக பயன்படுத்தப்படுகிறது. |
| சாலை, ரயில்பாதை போக்குவரத்து மூலம் நடைபெறுகிறது. | நீர்வழி, வான்வழி போக்குவரத்து மூலம் நடைபெறுகிறது. |

www.Padasalai.Net

## V. ஒரு பத்தியில் விடையளி.

**1. நகரமயமாக்கம் என்றால் என்ன? அதன் தாக்கங்களை விளக்குக.**

**நகரமயமாக்கம் பொருள் :**

- ✶ கிராமப்புற சமுதாயம் நகர்புற சமுதாயமாக மாற்றம் அடைவதே நகரமயமாக்கம் ஆகும்.
- ✶ மக்கள் தொகை விகிதம், வேளாண்சாரா தொழிலார்கள் விகிதம் அதிகமாக இருக்கும்.
- ✶ நகரங்கள் மற்றும் பெரு நகரங்களில் தொழில் மயமாக்கம் அதிகரித்து காணப்படுகிறது.
- ✶ இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை தொழில்களுடன் நெருங்கிய தொடர்புடையது.

**நகரமயமாக்கத்தின் தாக்கங்கள் :**

- ✶ மக்கள் தொகை அடர்த்தி அதிகரித்து மக்கள் நெருக்கடியை தோற்றுவிக்கிறது.
- ✶ குடியிருப்புகளின் பற்றாக்குறை ஏற்பட்டு குடிசை பகுதிகளை தோற்றுவிக்கிறது.
- ✶ குடிநீர் பற்றாக்குறை ஏற்படுகிறது. போக்குவரத்து நெரிசலும் அதிகரிக்கிறது.
- ✶ வடிகால் பிரச்சனைகள் உண்டாகிறது. குற்றங்கள் அதிகரித்து காணப்படுகிறது.

**2. இந்தியாவில் செயற்கைக்கோள் தகவல் தொடர்பின் முக்கியத்துவத்தை விளக்குக.**

**இந்தியாவில் செயற்கைக்கோள் தகவல் தொடர்பின் முக்கியத்துவம் :**

- ✶ செயற்கைக் கோள் பதிமங்களைப் பயன்படுத்தி தகவல்கள் பரிமாற்றம் செய்கின்றனர்.
- ✶ வானிலை ஆய்வு மற்றும் எல்லை பகுதி கண்காணிப்பு பணிகள் நடைபெறுகிறது.
- ✶ வானிலை முன் அறிவிப்பு, இயற்கை பேரழிவு கண்காணிப்பு பணிகள் நடைபெறுகிறது.
- ✶ 1969 க்கு பிறகு தகவல் தொடர்பு பரிமாற்றத்தில் செயற்கைக்கோளை பயன்படுத்தினர்.
- ✶ 1983 இல் நிறுவப்பட்ட INSAT தகவல் தெடர்பு, வானியல் ஆய்வுகள் மேற்கொண்டது.
- ✶ இன்சாட் செயற்கைக்கோள் தகவல் தொடர்பு சாதனங்களுக்கு சமிக்கை அனுப்புகிறது.
- ✶ இன்சாட் செயற்கைக்கோள் வானிலையை கண்டறியவும், ராணுவத்திற்கும் உதவுகிறது.
- ✶ தகவல் தொடர்பு செயற்கைக்கோள்கள் - இன்சாட் வரிசை, ஜி-சாட் வரிசை, கல்பனா 1, ஹேம்சாட், எஜுசாட் போன்றவை.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.Com

**3. இந்தியாவின் மக்கள் பரவல் மற்றும் மக்கள் அடர்த்தியை விவரிக்க.**

**இந்தியாவில் மக்கள் பரவல் :**

- ✶ இந்தியாவில் அதிகபட்சமாக உத்திரப் பிரதேசத்தின் மக்கள் தொகை 199.5 மில்லியன்.
- ✶ இந்தியாவில் குறைந்தபட்சமாக சிக்கிம் மாநிலத்தின் மக்கள் தொகை 0.61 மில்லியன்.
- ✶ புதுடெல்லி யூனியன் பிரதேசம் - 16.75 மில்லியன் மக்கள் தொகையை கொண்டுள்ளது.
- ✶ மக்கள் தொகை பரவல் ⟶ மகாராஷ்ட்டிரா - 112.3 மில்லியன், பீகார் - 103.8 மில்லியன்.
- ✶ மக்கள் தொகை பரவல் ⟶ மேற்கு வங்கம் - 91.3 மில்லியன், ஆந்திரா - 84.6 மில்லியன்.

**இந்தியாவில் மக்கள் அடர்த்தி :**

- ✶ இந்தியாவில் சராசரி மக்கள் அடர்த்தி ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 382 ஆகும்.
- ✶ இந்தியாவில் அதிக மக்கள் அடர்த்தி கொண்ட மாநிலம் பீகார் - 1106 பேர் / ச.கி.மீ.
- ✶ குறைந்த மக்கள் அடர்த்தி கொண்ட மாநிலம் அருணாச்சல பிரதேசம் - 17 பேர் / ச.கி.மீ.
- ✶ புதுடெல்லி - 11320 பேர் / ச.கி.மீ., அந்தமான் நிக்கோபார் தீவுகள் - 46 பேர் / ச.கி.மீ.
- ✶ இந்தியா உலக அளவில் மக்கள் அடர்த்தி மிகுந்த பத்து நாடுகளில் ஒன்றாக உள்ளது.

**4. மனிதவள மேம்பாட்டை அளவிடும் முறையை விளக்குக.**

**மனிதவள மேம்பாட்டை அளவிடும் முறை :**

- ✶ மனிதவள மேம்பாட்டை மூன்று அடிப்படை பரிமாணங்களை கொண்டு அளவிடுகின்றனர்.
- ✶ மனிதவள மேம்பாடு - ஆரோக்கியம், கல்வி, வருமானம் ஆகிய மூன்றின் கூட்டு குறியீடு.
- ✶ ஆரோக்கியம் - பிறப்பு காலம் மற்றும் சராசரி வாழ்நாள் மதிப்பீடு.
- ✶ கல்வி - குழந்தைகளின் பள்ளி பருவம், வயது வந்தோர் பள்ளியில் கற்கும் சராசரி காலம்.
- ✶ வருமானம் - நிகர தேசிய வருமானம் மற்றும் தனிநபர் வருமானம்.

**மனிதவள மேம்பாட்டை அளவிட நிர்ணயிக்கப்பட்ட குறியீடுகள் :**

- ✶ HDI - 0.550 க்கு கீழ் இருந்தால் குறைந்த மனிதவள மேம்பாடு
- ✶ HDI - 0.550 முதல் 0.699 வரை மிதமான மனிதவள மேம்பாடு.
- ✶ HDI - 0.700 முதல் 0.799 வரை அதிகமான மனிதவள மேம்பாடு.
- ✶ HDI - 0.800 க்கு மேல் இருந்தால் மிக அதிகமான மனிதவள மேம்பாடு.

www.Padasalai.Net

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

## 5. இந்தியாவின் சாலைகளை வகைப்படுத்தி விளக்குக.

### 1. தேசிய நெடுஞ்சாலைகள் :

✶ 2016 இல் தேசிய நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் சுமார் 1,01,011 கி.மீ. ஆகும்

✶ இந்தியாவில் மிக நீளமான தேசிய நெடுஞ்சாலையாக NH 7 அமைந்துள்ளது.

### 2. மாநில நெடுஞ்சாலைகள் :

✶ முக்கிய நகரங்களை மாநில தலைநகரம் (ம) தேசிய நெடுஞ்சாலையுடன் இணைக்கிறது.

✶ 2016 இல் மாநில நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் சுமார் 1,76,166 கி.மீ. ஆகும்

### 3. மாவட்ட சாலைகள் :

✶ மாவட்ட - வட்டார தலைமை இடங்களை மாநில, தேசிய நெடுஞ்சாலையுடன் இணைக்கிறது.

✶ 2016 இல் மாவட்ட சாலைகளின் மொத்த நீளம் சுமார் 5,61,940 கி.மீ. ஆகும்

### 4. கிராமப்புற சாலைகள் :

✶ பல்வேறு கிராமங்களை அதன் அருகில் உள்ள நகரங்களுடன் இணைக்கிறது.

✶ 2016 இல் கிராமப்புற சாலைகளின் மொத்த நீளம் சுமார் 39,35,337 கி.மீ. ஆகும்

### 5. எல்லையோர சாலைகள் :

✶ இந்தியாவில் எல்லைப்புற சாலைகள் நிறுவனம் 1960 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

✶ உலகின் உயரமான எல்லைப்புறச் சாலை - லடாக்கில் உள்ள லேவில் முதல் சண்டிகர் வரை.

### 6. பன்னாட்டு நெடுஞ்சாலைகள் :

✶ இந்தியாவை அண்டை நாடுகளுடன் இணைப்பது பன்னாட்டு நெடுஞ்சாலைகள் ஆகும்.

✶ இணைக்கும் நாடுகள் - இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், பூடான், வங்கதேசம், மியான்மர்.

## VI. வரைபடப் பயிற்சி.

**இந்திய புறவளி நில வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும்.**

1. தேசிய நெடுஞ்சாலை எண். 7 (NH7).
2. இந்தியாவின் முக்கியத் துறைமுகங்கள்.
3. இந்தியாவின் முக்கிய பன்னாட்டு விமான நிலையங்கள்.
4. மக்கள் அடர்த்தி மிகுந்த இந்திய மாநிலங்கள்.
5. இந்தியாவின் அதிக கல்வியறிவு பெற்ற மாநிலம்.
6. இந்திய இரயில்வே மண்டலங்கள்.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# குடிமையியல்

## 1. இந்திய அரசியலமைப்பு

### IV. குறுகிய விடை தருக :

**1. அரசியலமைப்பு என்றால் என்ன ?**

**அரசியலமைப்பு என்பது :**

✶ ஒரு நாட்டின் நிர்வாகமானது எந்த அடிப்படை கொள்கைகளைச் சார்ந்துள்ளது என்பதை பிரதிபலிக்கும் அடிப்படைச் சட்டமே அரசியலமைப்பு ஆகும்.

✶ அரசியலமைப்பு ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அச்சாணியாகும்.

**2. குடியுரிமை என்பதன் பொருள் என்ன?**

**குடியுரிமை - பொருள் :**

✶ சிட்டிசன் எனும் சொல் சிவிஸ் எனும் இலத்தின் சொல்லில் இருந்து வந்தது.

✶ சிட்டிசன் அல்லது குடியுரிமை என்பதன் பொருள் ஒரு நகர அரசில் வசிப்பவர்.

**3. எத்தனை வகையான அடிப்படை உரிமைகள், இந்திய அரசியலமைப்பால் பட்டியலிடப் படுகின்றன?**

**இந்திய அரசியலமைப்பால் பட்டியலிடப்படுகின்ற அடிப்படை உரிமைகள் :**

1. சமத்துவ உரிமை,
2. சுதந்திர உரிமை
3. சமயசார்பு உரிமை
4. சுரண்டலுக்கு எதிரான உரிமை
5. கல்வி, கலாச்சார உரிமை
6. அரசியலமைப்புக்கு உட்பட்டு தீர்வு காணும் உரிமை

**4. நீதிப்பேராணை (Writ) என்றால் என்ன?**

**நீதிப்பேராணை (Writ) என்பது :**

✶ நீதிப்பேராணை - நீதிமன்ற முத்திரையுடன், நீதிமன்றத்தால் வெளியிடப்படுவது.

✶ இது சில சட்டங்களை நிறைவேற்றாமல் தடைசெய்ய, நீதிமன்றம் வெளியிடுகிறது.

**5. இந்தியாவின் செம்மொழிகள் எவை?**

www.Padasalai.Net
kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**இந்தியாவின் செம்மொழிகள் :**

- ✶ செம்மொழிகள் - தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஒடியா.
- ✶ 2004 இல் இந்திய அரசு "செம்மொழிகள்" என்ற புதிய வகைப்பாட்டை ஏற்படுத்தியது.

**6. தேசிய அவசரநிலை என்றால் என்ன?**

**தேசிய அவசரநிலை :**

- ✶ போர் அல்லது வெளிநாட்டினர் ஆக்கிரமிப்பு, ஆயுதமேந்திய கிளர்ச்சி அல்லது உடனடி ஆபத்து காரணமாக இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் குடியரசு தலைவர் தேசிய அவசர நிலையை அறிவிக்கலாம்.

**7. மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையேயான உறவுகளை மூன்று தலைப்புகளில் பட்டியலிடுக.**

**மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையேயான உறவுகள் :**

- ✶ சட்டமன்ற உறவுகள், நிர்வாக உறவுகள், நிதி உறவுகள் ஆகியன.
- ✶ இவைகள் மத்திய, மாநில அரசுகளின் அதிகாரங்களை விளக்குகிறது.

## V. விரிவான விடை தருக :

**1. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக.**

**இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகள் :**

- ✶ உலகின் மிக நீளமான எழுதப்பட்ட அரசியலமைப்பாக அமைந்துள்ளது.
- ✶ இது பல்வேறு நாடுகளின் அரசியலமைப்புகளில் இருந்து பெறப்பட்டவை.
- ✶ நெகிழும் தன்மை மற்றும் நெகிழாத் தன்மை கொண்டதாகவும் உள்ளது.
- ✶ மத்தியிலும் மாநிலங்களிலும் நாடாளுமன்ற முறையைக் கொண்டுள்ளது.
- ✶ ஒற்றை குடியுரிமை மற்றும் சுதந்திரமான நீதித்துறையை வழங்குகிறது.
- ✶ இந்தியா சமயச் சார்பற்ற நாடாகவும் கூட்டாட்சி முறை அரசாங்கமும் உள்ளது.
- ✶ வயது வந்தோர் அனைவருக்கும் பாகுபாடுமின்றி வாக்குரிமையை வழங்குகிறது.
- ✶ சிறுபான்மையினர், பட்டியல் இனத்தவர், பழங்குடியினர் ஆகியோருக்கு சலுகைகள்.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

2. அடிப்படை உரிமைகளைக் குறிப்பிடுக.

**அடிப்படை உரிமைகள் :**

**I. சமத்துவ உரிமை :**

✶ சமத்துவ உரிமைகள் பிரிவு - 14 முதல் 18 வரை இடம் பெற்றுள்ளது.

✶ சட்டத்தின் முன் அனைவரும் சமம், தீண்டாமை ஒழிப்பு பற்றி கூறுகிறது.

**II. சுதந்திர உரிமை :**

✶ சுதந்திர உரிமைகள் பிரிவு - 19 முதல் 22 வரை இடம் பெற்றுள்ளது.

✶ பேச்சுரிமை, கருத்து சுதந்திரம், சங்கம் அமைக்க சுதந்திரம் தரப்பட்டுள்ளது.

**III. சுரண்டலுக்கு எதிரான உரிமை :**

✶ சுரண்டலுக்கு எதிரான உரிமைகள் பிரிவு - 23, 24 இல் இடம் பெற்றுள்ளது.

✶ கட்டாய வேலை, கொத்தடிமை முறை, குழந்தை தொழிலாளர் முறை ஒழித்தல்.

**IV. சமயசார்பு உரிமை :**

✶ சமயசார்பு உரிமைகள் பிரிவு - 25 முதல் 28 வரை இடம் பெற்றுள்ளது.

✶ எந்த ஒரு சமயத்தையும் ஏற்கவும், பின்பற்றவும், பரப்பவும் உரிமை தரப்பட்டுள்ளது.

**V. கல்வி, கலாச்சார உரிமை :**

✶ கல்வி, கலாச்சார உரிமைகள் பிரிவு - 29, 30 இல் இடம் பெற்றுள்ளது.

✶ சிறுபான்மையினரின் கல்வி, மொழி மற்றும் கலாச்சாரத்தை பாதுகாத்தல்.

**VI. அரசியலமைப்புக்கு உட்பட்டு தீர்வு காணும் உரிமை :**

✶ இந்த உரிமை அரசியலமைப்புப் பிரிவு - 32 இல் இடம் பெற்றுள்ளது.

✶ நீதிமன்றத்தை அணுகி தனது அடிப்படை உரிமைகளைப் பெறுதல்.

3. அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை பற்றி எழுதுக.

**அரசியலமைப்புக்கு உட்பட்டு தீர்வு காணும் உரிமை :**

✶ உச்சநீதிமன்றம் "அரசியலமைப்பின் பாதுகாவலன்" என்று அழைக்கப்படுகிறது.

✶ நீதிப்பேராணை - நீதிமன்ற முத்திரையுடன், நீதிமன்றத்தால் வெளியிடப்படுவது.

✶ இது சில சட்டங்களை நிறைவேற்றாமல் தடைசெய்ய, நீதிமன்றம் வெளியிடுகிறது.

✶ நீதிப்பேராணைகள் வெளியிடப்படுவதால் மக்களின் உரிமைகள் காக்கப்படுகிறது.

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

- ✶ உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதி மன்றங்கள் நீதிப்பேராணைகளை வெளியிடலாம்.
- ✶ அவை ஐந்து வகையான நீதிப்பேராணைகளை வெளியிட அதிகாரம் பெற்றுள்ளன.
- ✶ ஆட்கொணர்வு நீதிப்பேராணை, கட்டளையுறுத்தும் நீதிப்பேராணை, தடையுறுத்தும் நீதிப்பேராணை, ஆவணக்கேட்பு நீதிப்பேராணை, தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை.

**4. அடிப்படை உரிமைகளுக்கும், அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகளுக்கும் இடையேயான வேறுபாடுகளைக் குறிப்பிடுக.**

**அடிப்படை உரிமைகளுக்கும், அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகளுக்கும் இடையேயான வேறுபாடுகள் :**

| அடிப்படை உரிமைகள் | அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள் |
|---|---|
| அமெரிக்க நாட்டின் அரசியலமைப்பில் இருந்து பெறப்பட்டவை. | அயர்லாந்து நாட்டின் அரசியலமைப்பில் இருந்து பெறப்பட்டவை. |
| இந்த உரிமையை அரசாங்கத்தால் கூட சுருக்கவோ, நீக்கவோ முடியாது. | இந்த கோட்பாடுகள் அரசுக்கு வெறும் அறிவுறுத்தல்களே ஆகும். |
| இவற்றை நீதிமன்ற சட்டத்தின் மூலமாக செயற்படுத்த முடியும். | இவற்றை எந்தவகை நீதிமன்றத்தாலும் கட்டாயப்படுத்த முடியாது. |
| இவை சட்ட ஒப்புதலைப் பெற்றவை. | இவை தார்மீக மற்றும் அரசியல் ஒப்புதல் பெற்றவை ஆகும். |
| நாட்டின் அரசியல் மற்றும் ஜனநாயகத்தை வலுப்படுத்துகின்றன. | சமுதாயம், பொருளாதாரம், ஜனநாயகம் உறுதியாகிறது. |
| இயற்கையான உரிமைகள். | மனித உரிமைகளைப் பாதுகாக்கிறது. |

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# குடிமையியல்

## 2. மத்திய அரசு

### V. சுருக்கமாக விடையளி.

**1. இந்தியக் குடியரசுத் தலைவர் எவவாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்?**

**இந்தியக் குடியரசுத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படும் முறை :**

- ✶ குடியரசுத் தலைவர், ஒற்றை மாற்று வாக்கு மூலம் விகிதாச்சார பிரதிநிதித்துவத்தின்படி வாக்காளர் குழுமத்தால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
- ✶ வாக்காளர் குழுமம் என்பது மக்கள் பிரதிநிதிகளைக் குறிக்கிறது.

**2. மத்திய அரசின் பல்வேறுபட்ட அமைச்சர்களின் வகைகள் யாவை?**

**மத்திய அரசின் பல்வேறுபட்ட அமைச்சர்களின் வகைகள் :**

- ✶ கேபினெட் அமைச்சர்கள் அல்லது ஆட்சிக்குழு அமைச்சர்கள்.
- ✶ இராஜாங்க அமைச்சர்கள்.
- ✶ இணை அமைச்சர்கள்.

**3. உச்சநீதிமன்ற நீதிபதி ஆவதற்கான தகுதிகள் யாவை?**

**உச்சநீதிமன்ற நீதிபதி ஆவதற்கான தகுதிகள் :**

- ✶ இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- ✶ ஐந்து ஆண்டுகள் உயர்நீதிமன்ற நீதிபதியாக பணியாற்றி இருத்தல் வேண்டும்.
- ✶ 10 ஆண்டுகள் உயர்நீதிமன்ற வழக்குரைஞராக பணியாற்றி இருத்தல் வேண்டும்.

**4. மக்களவையின் சபாநாயகர் பற்றி குறிப்பு வரைக.**

**மக்களவையின் சபாநாயகர் :**

- ✶ மக்களவையைத் தலைமை ஏற்று நடத்துபவரே சபாநாயகர் ஆவார்.
- ✶ சபாநாயகர் மக்களவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
- ✶ நிதி மசோதாவை தீர்மானிப்பதில் இவருடைய முடிவே இறுதியானது.

www.Padasalai.Net

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

5. நிதி மசோதா என்றால் என்ன?

நிதி மசோதா :

✶ குடியரசுத் தலைவர் ஒப்புதலுடன் மக்களவையில் மட்டுமே கொண்டுவர முடியும்.

✶ நிதி மசோதாவை மாநிலங்களவையில் திருத்தவோ, நிராகரிக்கவோ முடியாது.

6. இந்திய அரசின் தலைமை வழக்குரைஞரின் சிறப்பு அதிகாரங்கள் இரண்டினைப் பட்டியலிடு.

இந்திய அரசின் தலைமை வழக்குரைஞரின் சிறப்பு அதிகாரங்கள் :

✶ இந்தியாவில் உள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் வழக்காடும் உரிமை.

✶ நாடாளுமன்ற இரு அவைகளிலும் பேசுவதற்கும், பங்கேற்பதற்கும் உரிமை.

## VI. விரிவான விடையளி.

1. இந்தியக் குடியரசுத் தலைவரின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகளை விவரி.

இந்தியக் குடியரசுத் தலைவரின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள் :

**நிர்வாக அதிகாரங்கள் :**

✶ பிரதம அமைச்சர் மற்றும் மற்ற அமைச்சர்களுக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தல்.

✶ மாநில ஆளுநர்கள், உச்சநீதிமன்ற - உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமனம் செய்தல்.

**சட்டமன்ற அதிகாரங்கள் :**

✶ நாடாளுமன்ற கூட்டத் தொடரை துவக்கி வைத்தல், மசோதாவை சட்டமாக மாற்றுதல்.

✶ மக்களவையில் - 2, மாநிலங்களவையில் - 12 என நியமன உறுப்பினர்களை நியமித்தல்.

**நிதி அதிகாரங்கள் :**

✶ நிதி மசோதா மற்றும் வரவு செலவு திட்டத்தை மக்களவையில் சமர்பிக்க அனுமதித்தல்.

✶ அவசரகால நிதியை பராமரித்தல், ஐந்து ஆண்டுக்கு ஒருமுறை நிதிக்குழு அமைத்தல்.

**நீதி அதிகாரங்கள் :**

✶ ஒருவருக்கு அளிக்கப்பட்ட தண்டனையைக் குறைத்தல், ஒத்தி வைத்தல், விடுவித்தல்.

✶ தண்டனை பெற்றவருக்கு மன்னிப்பு வழங்குதல், மரண தண்டனையை ரத்து செய்தல்.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**இராணுவ அதிகாரங்கள் :**

✶ மற்ற நாடுகளின் மீது போர் அறிவித்தல், அமைதியை ஏற்படுத்துதல் ஆகியன செய்தல்.

✶ பாதுகாப்புப் படையின் தலைமைத் தளபதியாக இருத்தல், இராணுவத்தை வழிநடத்துதல்.

**இராஜதந்திர அதிகாரங்கள் :**

✶ இந்தியத் தூதர்களை நியமித்தல் மற்றும் வெளிநாட்டுத் தூதர்களை வரவேற்றல்.

✶ மற்ற நாடுகளுடன் உடன்படிக்கைகள், ஒப்பந்தங்கள் மேற்கொள்ள ஒப்புதல் தருதல்.

**நெருக்கடி நிலை அதிகாரங்கள் :**

✶ தேசிய நெருக்கடி நிலை, மாநில நெருக்கடி நிலை, நிதி நெருக்கடி நிலை அறிவித்தல்.

✶ போர், வெளிநாட்டு ஆக்கிரமிப்பு, ஆயுதமேந்திய கிளர்ச்சி ஏற்படும் போது அறிவித்தல்.

**2. இந்திய உச்ச நீதிமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் நீதிவரையறைகளை விளக்குக.**

**இந்திய உச்ச நீதிமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் நீதிவரையறைகள் :**

**அ) தனக்கேயுரிய நீதிவரையறை :**

✶ இந்திய அரசிற்கும் ஒன்று அல்லது பல மாநிலங்களுக்கும் இடையிலான சிக்கல்கள்.

✶ அடிப்படை உரிமைகளை நடைமுறைபடுத்துவது தொடர்பாக எழுகின்ற சிக்கல்கள்.

**ஆ) மேல்முறையீட்டு நீதிவரையறை :**

✶ உச்ச நீதிமன்றமே நாட்டின் இறுதி மேல்முறையீட்டு நீதிமன்றமாகச் செயல்படுகிறது.

✶ மாநில உயர்நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீட்டு வழக்குகளை தொடுக்கலாம்.

**இ) ஆலோசனை நீதிவரையறை :**

✶ பொது முக்கியத்துவம் வாய்ந்த எந்த ஒரு சட்டத்தின் மீதும் ஆலோசனை வழங்குதல்.

✶ குடியரசுத் தலைவர் புதிய சட்டம் குறித்து உச்சநீதிமன்றத்தின் கருத்தினைப் பெறுதல்.

**ஈ) இதர நீதிவரையறை :**

✶ உச்ச நீதிமன்ற ஆணை இந்தியாவின் அனைத்து நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்தும்.

✶ குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்று நீதிமன்றத்திற்கான விதிகளை உருவாக்குதல்.

**உ) நீதிப்புனராய்வு :**

✶ ஒரு புதிய சட்டத்தினை அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானது என அறிவித்தல்.

✶ மத்திய அரசு மற்றும் மாநில அரசுகள் இடையிலான பிரச்சனைகளை தீர்த்து வைத்தல்.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.Com

**3. இந்தியப் பிரதம அமைச்சரின் பணிகள் மற்றும் கடமைகள் யாவை?**

**இந்தியப் பிரதம அமைச்சரின் பணிகள் மற்றும் கடமைகள் :**

- ✶ அமைச்சர்களின் நிலையை அறிந்து அரசின் பல்வேறு துறைகளை ஒதுக்கீடு செய்வது.
- ✶ தனது அமைச்சரவைக் கூட்டத்தின் தேதி மற்றும் நிகழ்ச்சி நிரல் பற்றி முடிவு செய்வது.
- ✶ குடியரசுத் தலைவருடன் மத்திய அரசு விவகாரம், சட்ட முன்மொழிவுகள் விவாதித்தல்.
- ✶ குடியரசுத் தலைவருக்கும், அமைச்சரவைக்கும் இடையே பாலமாகச் செயல்படுகிறார்.
- ✶ நாட்டின் உண்மையான தலைவராகவும், செய்தித் தொடர்பாளராகவும் செயல்படுகிறார்.
- ✶ காமன்வெல்த், அணிசேரா நாடுகள் மற்றும் சார்க் நாடுகள் மாநாடுகளில் பங்கேற்றல்.
- ✶ கேபினெட் கூட்டம் நடைபெறாத போது மூத்த அமைச்சர்களை கலந்தாலோசிக்கலாம்.
- ✶ அமைச்சரவையின் தலைவராக பல்வேறு துறைகளின் பணிகளை மேற்பார்வையிடுதல்.

**4. நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை திறனாய்வு செய்க.**

**நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் :**

- ✶ சட்டம் இயற்றுதல், சர்வதேச உறவுகள், உள்நாட்டுக் கொள்கைகளை விவாதித்தல்.
- ✶ நிர்வாகத்தினை மேற்பார்வையிடுதல், வரவுசெலவு திட்டத்தினை நிறைவேற்றுதல்.
- ✶ குடியரசுத் தலைவர் மீது சுமர்த்தப்பட்ட அரசியல் குற்றச்சாட்டுகளை விசாரித்தல்.
- ✶ குடியரசுத் தலைவர், உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகளை பதவி நீக்குதல்.
- ✶ தலைமை தேர்தல் ஆணையர், தலைமைக் கணக்கு தணிக்கையாளரை பதவி நீக்குதல்.
- ✶ மாநிலங்களின் எல்லைகளை மாற்றி அமைத்தல், கேள்விகள் - விவாதங்கள் நடத்துதல்.
- ✶ ஒத்திவைப்புத் தீர்மானங்களும், நம்பிக்கையில்லாத் தீர்மானங்களும் கொண்டு வருதல்.
- ✶ பொதுமக்களின் குறைகளைப் போக்குதல் மற்றும் வளர்ச்சித் திட்டங்களைத் தீட்டுதல்.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**5. மாநிலங்களவை மற்றும் மக்களவையின் பணிகளைப் பட்டியலிடுக.**

**மாநிலங்களவையின் பணிகள் :**

- நிதி மசோதா தவிர எந்தவொரு மசோதாவும் சட்டமாவதற்கு ஒப்புதல் வழங்குவது.
- குடியரசுத் தலைவர் மற்றும் துணைக் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுந்தெடுப்பது.
- அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் தொடர்பான மசோதாக்களை நிறைவேற்றுவது.
- குடியரசுத் தலைவர், உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகளை பதவிநீக்கம் செய்வது.

**மக்களவையின் பணிகள் :**

- நிதி மசோதா உள்பட அனைத்துவித மசோதாவையும் அறிமுகப்படுத்தி நிறைவேற்றுவது.
- குடியரசுத் தலைவர், துணை குடியரசுத் தலைவர், சபாநாயகரைத் தேர்ந்தெடுந்தெடுப்பது.
- அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் தொடர்பான மசோதாக்களை நிறைவேற்றுவது.
- குடியரசுத் தலைவர், உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகளை பதவிநீக்கம் செய்வது.

www.Padasalai.Net

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# குடிமையியல்

## 3. மாநில அரசு

### V. சுருக்கமாக விடையளி.

**1. இந்திய மாநிலங்களில் இருந்து ஜம்மு - காஷ்மீர் எவ்வாறு வேறுபடுகிறது?**

**இந்திய மாநிலங்களில் இருந்து ஜம்மு - காஷ்மீர் வேறுபடுதல் :**

- ஜம்மு - காஷ்மீருக்கு அரசியலமைப்பு சட்டப் பிரிவு 370 சிறப்பு அந்தஸ்து வழங்கியுள்ளது.
- இந்திய அரசியலமைப்பு கூறும் அடிப்படை உரிமைகள், கடமைகள் இதற்கு பொருந்தாது.

**2. மாநில ஆளுநரின் முக்கியத்துவம் என்ன?**

**மாநில ஆளுநரின் முக்கியத்துவம் :**

- மாநில நிர்வாகத்தின் தலைவராக ஆளுநர் செயல்படுகிறார்.
- மாநில ஆளுநரின் பெயரில் மாநில நிர்வாகம் செயல்படுகிறது.
- ஒரு மாநிலத்தின் அனைத்து அதிகாரங்களையும் பெற்றுள்ளார்.

**3. ஆளுநராக நியமிக்கப்படுவதற்கான தகுதிகள் என்ன?**

**ஆளுநராக நியமிக்கப்படுவதற்கான தகுதிகள் :**

- 35 வயது நிரம்பிய இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- நாடாளுமன்ற அல்லது சட்டமன்ற உறுப்பினராக இருத்தல் கூடாது.
- இலாபம் தரும் எந்த ஒரு தொழிலிலும் ஈடுபடுதல் கூடாது.

**4. உயர் நீதிமன்றத்தின் தனக்கேயுரிய நீதிவரையறை அதிகாரங்கள் யாவை?**

**உயர் நீதிமன்றத்தின் தனக்கேயுரிய நீதிவரையறை அதிகாரங்கள் :**

- மேல்முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளது.
- 2000 ரூபாய்க்கு மேற்பட்ட மதிப்புடைய குற்றவியல் வழக்குகளை விசாரிக்கும்.
- முக்கிய வழக்கு, உயில், திருமணம், நீதிமன்ற அவமதிப்பு வழக்குகளை விசாரிக்கும்.

www.Padasalai.Net

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**5. உயர் நீதிமன்றத்தின் மேல்முறையீட்டு அதிகாரங்கள் பற்றி நீ புரிந்து கொண்டதென்ன?**

**உயர் நீதிமன்றத்தின் மேல்முறையீட்டு அதிகாரங்கள் :**

- ✶ தன்னிடம் வரும் உரிமையியல், குற்றவியல் மேல்முறையீட்டு வழக்குகளை விசாரித்தல்.
- ✶ கீழ் நீதிமன்றங்கள் அனுப்பி வைக்கும் மேல்முறையீட்டு வழக்குகளை விசாரித்தல்.
- ✶ இராணுவ தீர்பாயங்களின் கீழ்வரும் ஆயுதம் சார்ந்த வழக்குகளை விசாரிக்க முடியாது.

## VI. விரிவான விடையளி.

**1. முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி.**

**முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் :**

**அமைச்சரவை தொடர்பானவை :**

- ✶ முதலமைச்சரின் பரிந்துரையின் பேரில் ஆளுநர் அமைச்சர்களை நியமிக்கிறார்.
- ✶ அமைச்சர்களுக்குத் துறைகளை ஒதுக்குதல், அமைச்சரவையை மாற்றியமைத்தல்.

**ஆளுநர் தொடர்பானவை :**

- ✶ ஆளுநருக்கும் அமைச்சரவைக்கும் இடையே பாலமாக செயல்படுகிறார்.
- ✶ முக்கிய அலுவலர்களின் நியமனங்களில் ஆளுநருக்கு ஆலோசனை வழங்குகிறார்.

**சட்டமன்றம் தொடர்பானவை :**

- ✶ சட்டமன்ற கூட்டத்தொடரை ஆரம்பிக்கவும் ஒத்திவைக்கவும் ஆளுநரிடம் ஆலோசித்தல்.
- ✶ சட்டமன்றத்தில் அரசின் கொள்கைகளை அறிவித்தல், மசோதாக்கள் கொண்டு வருதல்.

**இதர அதிகாரங்கள் மற்றும் பணிகள் :**

- ✶ ஆளுங்கட்சியின் தலைவராக கட்சியைக் கட்டுப்படுத்தி, ஒழுக்கத்தை மேம்படுத்துதல்.
- ✶ பல்வேறு துறை செயலர்களின் பணிகளை மேற்பார்வையிடுதல், ஒருங்கிணைத்தல்.

**2. ஆளுநரின் பல்வேறு அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி.**

**ஆளுநரின் பல்வேறு அதிகாரங்கள் மற்றும் பணிகள் :**

**நிர்வாக அதிகாரங்கள் :**

- ✶ முதலமைச்சர் மற்றும் மற்ற அமைச்சர்களுக்கு பதவி பிரமானம் செய்து வைத்தல்.
- ✶ மாநில அரசு வழக்குரைஞர் மற்றும் மாநில தலைமை தேர்தல் ஆணையரை நியமித்தல்.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**சட்டமன்ற அதிகாரங்கள் :**

✶ சட்டமன்ற கூட்டத்தை கூட்டவும், ஒத்தி வைக்கவும், சட்டமன்றத்தை கலைக்கவும் முடியும்.

✶ சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதா ஆளுநர் கையொப்பமிட்ட பிறகே சட்டமாகும்.

**நிதி அதிகாரங்கள் :**

✶ ஆண்டு வரவு செலவு திட்டத்தை சட்டமன்றத்தில் அறிமுகம் செய்ய காரணமாகிறார்.

✶ ஆளுநரின் முன் அனுமதியுடன் நிதி மசோதாவை சட்டமன்றத்தில் அறிமுகம் செய்தல்.

**நீதித்துறை அதிகாரங்கள் :**

✶ கீழ் நீதிமன்றங்களின் நீதிபதிகளை நியமனம் செய்தல் மற்றும் பதவி உயர்வு செய்தல்.

✶ குற்றவாளிகளை மன்னித்தல், தண்டனையைக் குறைத்தல் அல்லது நிறுத்தி வைத்தல்.

**விருப்புரிமை அதிகாரங்கள் :**

✶ குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்காக ஒரு மசோதாவை நிறுத்தி வைக்க முடியும்.

✶ அமைச்சரவை பெரும்பான்மையை இழந்தால், சட்டமன்றத்தை ஆளுநர் கலைக்கலாம்.

**அவசரகால அதிகாரங்கள் :**

✶ மாநில அரசை கலைக்க குடியரசுத் தலைவருக்கு பரிந்துரை செய்யலாம்.

✶ குடியரசுத் தலைவரின் பிரதிநிதியாக ஆளுநரே மாநிலத்தை நிர்வாகிக்கிறார்.

**3. சட்டமன்றத்தின் பணிகளை சுருக்கமாக விவாதிக்க.**

**சட்டமன்றத்தின் பணிகள் :**

**சட்டமன்ற அதிகாரங்கள் :**

✶ மாநிலப் பட்டியல் மற்றும் பொதுப் பட்டியல் துறைகளின் மீது சட்டம் இயற்றலாம்.

✶ ஒரு மசோதா சட்டமன்றத்தில் மூன்று நிலைகளை கடந்த பிறகே சட்டமாகிறது.

**நிதி அதிகாரங்கள் :**

✶ சட்டமன்றம் ஒரு மாநிலத்தின் நிதி நிலையைக் கட்டுப்படுத்துகிறது.

✶ சட்டமன்றக் கீழவையின் அனுமதியின்றி புதிய வரிகளை விதிக்க முடியாது.

**நிர்வாகத் துறையின் மீது கட்டுப்பாடுகள் :**

✶ சட்டமன்ற உறுப்பினர்களின் கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதிலளிக்க வேண்டும்.

✶ நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை இயற்றி அமைச்சர்களை பதவி நீக்கம் செய்யலாம்.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**பரந்த அதிகாரங்கள் :**

- ✶ ஈரவை கொண்ட சட்டமன்றங்களில் கீழவை அதிக அதிகாரத்துடன் விளங்குகிறது.
- ✶ மாநிலங்களின் நிதி சார்ந்த நடவடிக்கைகளில் மேலவை வாக்களிக்க முடியாது.

### 4. அமைச்சரவையின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை ஆயுக.

**அமைச்சரவையின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் :**

- ✶ மாநில அரசிற்கான கொள்கைகளை உருவாக்கி, அதை திறம்பட செயல்படுத்துதல்.
- ✶ சட்டமன்ற நிகழ்ச்சிகளை முடிவு செய்தல், முக்கிய மசோதாக்களுக்கு ஆதரித்தல்.
- ✶ ஆண்டு வரவு செலவு திட்டம் (Budget) அமைச்சரவையால் இறுதி செய்யப்படுதல்.
- ✶ நிதிக்கொள்கையைக் கட்டுப்படுத்துதல், வரிக்கொள்கையை முடிவு செய்தல்.
- ✶ மாநிலங்கள் இடையிலான பிரச்சினைகளைத் தீர்க்க பேச்சுவார்த்தை நடத்துதல்.
- ✶ மாநில அரசின் பல்வேறு துறைகளை உருவாக்கி அதன் தலைவர்களை நியமித்தல்.
- ✶ கீழ் நீதிமன்ற நீதிபதிகளின் நியமனங்களில் ஆளுநருக்கு ஆலோசனை வழங்குதல்.
- ✶ ஒரு மசோதாவை சாதாரண மசோதாவா அல்லது நிதி மசோதாவா என தீர்மானித்தல்.

### 5. உயர் நீதிமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் விவரி.

**உயர் நீதிமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் :**

- ✶ மேல்முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளது.
- ✶ 2000 ரூபாய்க்கு மேற்பட்ட மதிப்புடைய குற்றவியல் வழக்குகளை விசாரித்தல்.
- ✶ சார்பு நீதிமன்றங்கள் மற்றும் தீர்பாயங்களின் பணிகளை மேற்பார்வை செய்தல்.
- ✶ அடிப்படை உரிமைகள், சாதாரண சட்டங்கள் மீறலுக்கு நீதிப்பேராணை வெளியிடுதல்.
- ✶ மத்திய - மாநில அரசுகள் இயற்றும் சட்டங்களை ஆராயும் நீதிப்புனராய்வு அதிகாரம்.
- ✶ கீழ் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகள் மீது குறுக்கு விசாரணை நடத்துதல்.
- ✶ உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகளை சான்றாதாரமாக பதிவேடுகளில் பாதுகாக்கத்தல்.
- ✶ கீழ் நீதிமன்றங்களில் வழங்கப்பட்ட தீர்ப்புகளை திரும்பப் பெறுதல் அல்லது ரத்து செய்தல்.

www.Padasalai.Net

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# பொருளியல்

## 1. மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் அதன் வளர்ச்சி: ஓர் அறிமுகம்

### V. குறுகிய விடையளி :

**1. நாட்டு வருமானம் - வரையறு.**

**நாட்டு வருமானம் :**

- ✶ நாட்டு வருமானம் என்பது ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பாகும்.
- ✶ அதையே மொத்த நாட்டு உற்பத்தி அல்லது நாட்டு வருமான ஈவு என்கிறோம்.

**2. உள்நாட்டு உற்பத்தியின் பொருள் என்ன?**

**உள்நாட்டு உற்பத்தியின் பொருள் :**

- ✶ உள்நாட்டு உற்பத்தி என்பது ஒரு ஆண்டில் ஒரு நாட்டின் புவியியல் எல்லைக்குள் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பாகும்.
- ✶ அது உள்நாட்டில் உள்ள உற்பத்தி காரணிகளினால் உற்பத்தி செய்யப்பட்டவை.

**3. GDP - இன் முக்கியத்துவத்தை எழுதுக.**

**GDP - இன் முக்கியத்துவம் :**

- ✶ பொருளாதார வளர்ச்சி பற்றி ஆய்வு செய்து அறிந்து கொள்ள உதவுகிறது.
- ✶ பணவீக்கம் மற்றும் பணவாட்டத்தின் சிக்கல்கள் பற்றி அறிய உதவுகிறது.
- ✶ வளர்ந்த நாடுகளுடன் ஒப்பீடவும், வாங்கும் திறனை மதிப்பிடவும் உதவுகிறது.

**4. தனிநபர் வருமானம் என்றால் என்ன?**

**தனிநபர் வருமானம் :**

- ✶ தனிநபர் வருமானம் - மக்களின் வாழ்க்கைத் தரத்தை உணர்த்தும் ஒரு கருவி.
- ✶ $\text{தனிநபர் வருமானம்} = \dfrac{\text{நாட்டு வருமானம்}}{\text{மக்கள் தொகை}}$

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

5. மதிப்பு கூட்டு முறையை எடுத்துக்காட்டுடன் வரையறு.

மதிப்பு கூட்டு முறை :

✶ மதிப்பு கூட்டு முறை என்பது ⟶ " டீதூள் + பால் + சர்க்கரை = தேனீர் "

✶ இடைநிலை பண்டங்களின் கூடுதல் = இறுதிப் பண்டம்.

6. GDP - இல் பங்களிப்புள்ள துறைகளை எடுத்துக்காட்டுடன் எழுதுக.

GDP - இல் பங்களிப்புள்ள துறைகள் எடுத்துக்காட்டுடன் :

✶ விவசாயத் துறை - கால்நடை வளர்ப்பு, மீன் பிடித்தல், சுரங்கத் தொழில், காடு வளர்ப்பு.

✶ தொழில் துறை - இரும்பு, ஆடைகள், சர்க்கரை, சிமெண்ட், காகிதம் போன்ற தொழில்கள்.

✶ பணிகள் துறை - போக்குவரத்து, தபால் மற்றும் தந்தி, பொழுதுபோக்கு, கல்வி, சுகாதாரம்.

7. இந்தியாவில் 2017 இல் GDP - இன் துறைவாரியான பங்களிப்பை கூறுக.?

இந்தியாவில் 2017 இல் GDP - இன் துறைவாரியான பங்களிப்பு :

| ஆண்டு | விவசாயம் % | தொழில்கள் % | பணிகள் % |
|---|---|---|---|
| 2016 - 2017 | 17.09 | 29.03 | 52.08 |
| 2017 - 2018 | 17.01 | 29.01 | 53.09 |

8. இந்திய பொருளாதாரத்தை மேம்படுத்த உதவும் காரணிகள் யாவை?

இந்திய பொருளாதாரத்தை மேம்படுத்த உதவும் காரணிகள் :

✶ 35 வயதுக்கு உட்பட்ட உழைக்கும் வயது மக்கள் அதிகரிப்பு. இந்தியாவின் சட்டங்கள்.

✶ ஆங்கில மொழி பேசுபவர்கள் அதிகரிப்பு. தகவல் தொழில்நுட்ப நிபுணர்கள் அதிகரிப்பு.

✶ குறைவான கூலிச் செலவு. தொழில்நுட்ப வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள்.

9. இந்தியாவின் பொருளாதாரக் கொள்கைகளின் பெயர்களை எழுதுக.

இந்தியாவின் பொருளாதாரக் கொள்கைகளின் பெயர்கள் :

✶ வேளாண் கொள்கை - வேளாண்மை சார்ந்த பொருட்களின் மீது அரசு முடிவெடுப்பது.

✶ தொழில் கொள்கை - பெரிய அளவில் தொழிற்சாலைகள் வளர்ச்சியை ஏற்படுத்துவது.

✶ புதிய பொருளாதார கொள்கை - இது பொதுவாக LPG என்று அழைக்கப்படுகிறது.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com
www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.Com

10. சிறு குறிப்பு வரைக. 1) GNH 2) HDI

- ✶ **GNH** என்பது மொத்த தேசிய மகிழ்ச்சி. அது பூட்டான் அரசாங்கத்தை வழிநடத்தும் ஒரு தத்துவமாகும்.
- ✶ **HDI** என்பது மனிதவள மேம்பாட்டுக் குறியீடு. அதை 1990 இல் பாகிஸ்தான் பொருளியல் அறிஞர் முகஹப் - உல் - ஹிக் அறிமுகம் செய்தார்.

## VI. விரிவான விடையளி :

1. நாட்டு வருமானத்தை கணக்கிடுவதற்கு தொடர்புடைய பல்வேறு கருத்துக்களை விவரி.

நாட்டு வருமானத்தை கணக்கிடுவதற்கு தொடர்புடைய பல்வேறு கருத்துக்கள் :

1. மொத்த நாட்டு உற்பத்தி :

- ✶ மொத்த நாட்டு உற்பத்தி என்பது ஒரு நாட்டின் மக்களால் ஒரு ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பாகும்.

2. மொத்த உள்நாட்டு உற்பத்தி :

- ✶ மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பது ஒரு நாட்டின் புவியியல் எல்லைக்குள் ஒரு ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பாகும்.

3. நிகர நாட்டு உற்பத்தி :

- ✶ நிகர நாட்டு உற்பத்தி என்பது மொத்த நாட்டு உற்பத்தியில் இருந்து மூலதனத் தேய்மானத்தின் மதிப்பை நீக்கிய பின் கிடைக்கும் பண மதிப்பாகும்.

4. நிகர உள்நாட்டு உற்பத்தி :

- ✶ நிகர உள்நாட்டு உற்பத்தி என்பது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இருந்து மூலதனத் தேய்மானத்தின் மதிப்பை நீக்கிய பின் கிடைக்கும் பண மதிப்பாகும்.

5. தலா வருமானம் / தனிநபர் வருமானம் :

- ✶ தலா வருமானம் என்பது நாட்டு வருமானத்தை மக்கள் தொகையில் வகுப்பதன் மூலம் கிடைக்கப் பெறப்படுகின்ற மதிப்பாகும்.

6. தனிப்பட்ட வருமானம் :

- ✶ தனிப்பட்ட வருமானம் என்பது தனிநபர்கள் மற்றும் குடும்பங்களின் மூலம் அனைத்து ஆதாரங்களில் இருந்து பெறப்படுகின்ற மொத்த பண வருமானமாகும்.

7. செலவிடத் தகுதியான வருமானம் :

- ✶ செலவிடத் தகுதியான வருமானம் என்பது தனிநபர்கள் மற்றும் குடும்பங்களின் உண்மையான வருமானத்தில் நுகர்வுக்கு செலவிடப்படுகின்ற வருமானமாகும்.

www.Padasalai.Net

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

## 2. GDP - யை கணக்கிடும் முறைகள் யாவை? அவைகளை விவரி.

### GDP - யை கணக்கிடும் முறைகள் :

**1. செலவின முறை :**

✶ செலவின முறை என்பது மொத்த உள்நாட்டு உற்பத்தியை ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்த அனைத்து இறுதிப்பண்ட பணிகளுக்கு மேற்கொள்ளும் செலவுகளின் கூட்டுத் தொகையாகும்.

✶ செலவின முறை என்பது ⟶ **Y = C + I + G + ( X - M )**

**2. வருமான முறை :**

✶ வருமான முறை என்பது பண்டங்கள் மற்றும் பணிகளின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள ஆண்கள் மற்றும் பெண்களின் வருமானத்தை கணக்கிட்டு கூறுவதாகும்.

✶ வருமான முறை என்பது ⟶ **வருமானம் = கூலி + வாரம் + வட்டி + லாபம்**

**3. மதிப்பு கூட்டு முறை :**

✶ மதிப்பு கூட்டு முறை என்பது அனைத்து இடைநிலைப் பண்டங்களின் மதிப்பைக் கூட்டி உற்பத்தி செய்யப்பட்ட இறுதிப் பண்டங்களின் மொத்த மதிப்பைக் கணக்கிடுவது.

✶ மதிப்பு கூட்டு முறை என்பது ⟶ **டீதூள் + பால் + சர்க்கரை = தேனீர்**

## 3. இந்தியாவில் GDP - இல் பல்வேறு துறைகளின் பங்கினை விவரி.

### இந்தியாவில் GDP - இல் பல்வேறு துறைகளின் பங்கு :

**1. வேளாண்மைத் துறை :**

✶ விவசாய பண்டங்களின் உற்பத்தியில் இந்தியா இரண்டாவது பெரிய நாடாகும்.

✶ 2018 - 2019 இல் மொத்த மதிப்பு கூடுதலில் விவசாயத் துறையின் பங்கு 15.87%

✶ இந்தியாவில் விவசாயத் துறைகளின் பங்களிப்பு உலக சராசரியைவிட 6.4% அதிகம்.

**2. தொழில் துறை :**

✶ 2018 - 2019 இல் மொத்த மதிப்பு கூடுதலில் தொழில் துறையின் பங்கு 29.74%

✶ இந்தியா தொழில் துறைகள் வளர்ச்சியில் உலகில் எட்டாவது இடத்தில் உள்ளது.

✶ இந்தியாவில் தொழில் துறைகளின் பங்களிப்பு உலக சராசரியைவிட 30% குறைவு.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**3. பணிகள் துறை :**

✶ இந்தியா பணிகள் துறைகள் வளர்ச்சியில் உலகில் ஆறாவது இடத்தில் உள்ளது.

✶ 2018 - 2019 இல் மொத்த மதிப்பு கூடுதலில் பணிகள் துறையின் பங்கு 54.40%

✶ இந்தியாவில் பணிகள் துறைகளின் பங்களிப்பு உலக சராசரியைவிட 63% குறைவு.

**4. பொருளாதார வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் இடையேயுள்ள வேறுபாடுகளைக் கூறுக.**

**பொருளாதார வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் :**

| வேறுபாடுகள் | பொருளாதார வளர்ச்சி | பொருளாதார முன்னேற்றம் |
|---|---|---|
| கருத்து | இது ஒரு குறுகிய கருத்து. | இது ஒரு பரந்த கருத்து. |
| அணுகுமுறை இயல்பு | அளவின் இயல்பு | தரத்தின் இயல்பு |
| கால வரம்பு | குறுகிய காலத்தை உடையது. | நீண்ட காலத்தை உடையது. |
| பொருந்தும் நாடுகள் | வளர்ந்த நாடுகள் | வளர்ந்து வரும் நாடுகள் |
| நிகழ்வின் அதிர்வெண் | குறிப்பிட்ட கால செயல்முறை. | தொடர்ச்சியான செயல்முறை. |
| அரசாங்க உதவி | இது ஒரு தானியங்கி செயல்முறையாகும். | அரசாங்கத் தலையீட்டை அதிகம் நம்பியுள்ளது. |
| அளவீட்டு நுட்பங்கள் | நாட்டு வருமானத்தை அதிகரித்தல். | நாட்டு வருமானத்துடன் தொடர்புடையவற்றை அதிகரித்தல். |
| நோக்கம் | GDP, GNP, FDI, FII, போன்ற அளவுகள் அதிகரிக்கும். | வாழ்க்கை எதிர்பார்ப்பு விகிதம், குழந்தை எழுத்தறிவு விகிதம், வறுமை விகிதம் ஆகியவற்றில் முன்னேற்றம். |

www.Padasalai.Net

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com

5. வளர்ச்சி பாதையின் அடிப்படையில் GDP மற்றும் வேலைவாய்ப்பு பற்றி விவரி.

**வளர்ச்சி பாதையின் அடிப்படையில் GDP மற்றும் வேலைவாய்ப்பு :**

- ✶ முதலாவதாக இந்தியா நெருக்கமான வர்த்தகக் கொள்கையை எடுத்துக் கொண்டது.
- ✶ உள்நாட்டு தொழில்கள் மற்றும் உள்நாட்டு பொருள் உற்பத்தி ஊக்குவிக்கப்பட்டது.
- ✶ வெளிநாட்டுப் பொருட்கள், நிறுவனங்களை சார்ந்திருக்கும் நிலை குறைக்கப்பட்டது.
- ✶ திறந்த வர்த்தகத்திற்காக 1991 முதல் இந்தியா தனது எல்லைகளைத் திறந்துவிட்டது.
- ✶ வெளிநாட்டு நிறுவனங்கள் இந்திய பொருளாதாரத்திற்குள் அனுமதிக்கப்பட்டது.
- ✶ ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பை உருவாக்குதல் ஊக்குவிக்கப்பட்டது.
- ✶ இந்திய வளர்ச்சி பாதையில் வறுமை ஒழிப்பும் கிராமப்புற வளர்ச்சியும் ஒரு பகுதி.
- ✶ இந்தியா தனிநபர் வருமானத்தில் வளரும் நாடுகளின் பிரிவில் இடம் பிடித்துள்ளது.

6. கீழ்க்கண்ட பொருளாதார கொள்கைகளை விவரி.

**1) விவசாய கொள்கை :**

- ✶ உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேளாண்மை பொருட்கள் மீது அரசு முடிவெடுப்பது.
- ✶ உள்நாட்டு வேளாண் உற்பத்தி, அங்காடிகளில் ஒருசில விளைவுகளை அடையவைப்பது.
- ✶ விலை கொள்கை, நிலச் சீர்திருத்தம் கொள்கை, உணவுக் கொள்கை, பசுமைப் புரட்சி.

**2) தொழிற் கொள்கை :**

- ✶ பெரிய அளவிலான தொழிற்சாலைகளின் வளர்ச்சிக்காக ஏற்படுத்தப்பட்டது.
- ✶ வேலைவாய்ப்பு அதிகரிப்பு, ஆராய்ச்சி, நவீனமயமாக்கல் ஆகியவற்றை ஊக்குவித்தல்.
- ✶ ஜவுளி தொழில் கொள்கை, சர்க்கரை தொழில் கொள்கை, சிறுதொழில்கள் கொள்கை.

**3) புதிய பொருளாதார கொள்கை :**

- ✶ இந்தியாவின் புதிய பொருளாதார கொள்கை LPG என்று அழைக்கப்படுகிறது.
- ✶ LPG என்பது தாராளமயமாக்கல், தனியார் மயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல்.
- ✶ இதன் குறிக்கோள் உலகில் வேகமாக வளரும் பொருளாதாரத்தை உருவாக்குவது.

www.Padasalai.Net

# பொருளியல்

## 2. உலகமயமாதல் மற்றும் வர்த்தகம்

### V. குறுகிய விடையளி.

**1. உலகமயமாக்கல் என்றால் என்ன?**

**உலகமயமாக்கல் :**

- ✶ உலகமயமாக்கல் என்பது பண்டங்கள் மற்றும் பணிகள், தொழில்நுட்பம், மூலதனம், உழைப்பு ஆகியவற்றின் தடையில்லா ஓட்டத்தில், எந்த தடையும் ஏற்படாமல் உலகின் பல்வேறு பொருளாதாரங்களை ஒருங்கிணைக்கும் செயல்முறை ஆகும்.

**2. உலகமயமாக்கலின் வகைகளை எழுதுக.**

**உலகமயமாக்கலின் வகைகள் :**

- ✶ தொன்மையான உலகமயமாக்கல்.
- ✶ இடைப்பட்ட உலகமயமாக்கல்.
- ✶ நவீன உலகமயமாக்கல்.

**3. பன்னாட்டு நிறுவனங்கள் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.**

**பன்னாட்டு நிறுவனங்கள் :**

- ✶ பன்னாட்டு நிறுவனம் என்பது நாட்டில் பண்டங்கள் மற்றும் பணிகளை உற்பத்தி செய்யும் அல்லது கட்டுப்படுத்தும் ஒரு பெருநிறுவனம் ஆகும்.
- ✶ சர்வதேச நிறுவனங்கள் அல்லது பன்னாட்டு அமைப்பு எனவும் கூறலாம்.

**4. தென்னிந்தியாவில் டச்சு - சிறு குறிப்பு வரைக.**

**தென்னிந்தியாவில் டச்சு :**

- ✶ இந்தியாவில் டச்சுக்காரர்களின் தலைமை இடமாக புலிகாட் இருந்தது.
- ✶ இண்டிகோ, சால்ட்பேட்டர், வங்க கச்சா பட்டு ஆகியன ஏற்றுமதியாயின.
- ✶ டச்சு நிறுவனம் - மசூலிப்பட்டினம், நிஜாம்பட்டினம், தேவனாம்பட்டினம், நாகப்பட்டினம்.

www.Padasalai.Net

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net
www.Trb Tnpsc.Com

## 5. உலகமயமாக்கலை மேற்கொள்ளும் சீர்திருத்தங்கள் யாவை?

**உலகமயமாக்கலை மேற்கொள்ளும் சீர்திருத்தங்கள் :**

- ✶ சில தொழிற்சாலைகளைத் தவிர, மற்றவை தொழில் உரிமம் பெறுவதை நீக்கியது.
- ✶ பொதுத்துறை நிறுவனத்தில் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது.

## 6. நியாயமான வர்த்தகம் என்றால் என்ன?

**நியாயமான வர்த்தகம் :**

- ✶ நியாயமான வர்த்தகம் - "விவசாயம் மற்றும் கைவினைப் பொருட்களின் உற்பத்தியாளரும், வாங்குவோரும் தானாக ஏற்றுக் கொண்ட பல சமூக, பொருளாதார, சுற்றுச்சூழல் குறிக்கோள்களை முன்னெடுக்க வடிவமைக்கப்பட்ட வணிக நடைமுறைகள்" ஆகும்.

## 7. "நியாயமான வர்த்தக நடைமுறைகளின்" ஏதாவது ஐந்து கொள்கைகளை எழுதுக.

**நியாயமான வர்த்தக நடைமுறைகளின் கொள்கைகள் :**

- ✶ பொருளாதார ரிதியில் பின்தங்கிய உற்பத்தியாளர்களுக்கு வாய்ப்புகளை உருவாக்குதல்.
- ✶ நியாயமான விலைக்கு விற்றல். சுற்றுசூழலுக்கு மதிப்பளித்தல். பாலின சமபங்கு காத்தல்.
- ✶ குழந்தை தொழிலாளர் மற்றும் கட்டாயத் தொழிலாளர் இல்லை என்பதை உறுதி செய்தல்.

## 8. "உலக வர்த்தக அமைப்பின்" முக்கிய நோக்கம் என்ன?

**உலக வர்த்தக அமைப்பின் முக்கிய நோக்கம் :**

- ✶ அயல் நாட்டு வாணிபத்திற்கான விதிகளை அமைத்தல் மற்றும் செயல்படுத்தல்.
- ✶ உலக நாடுகள் இடையே எழுகின்ற வர்த்தகத் தகராறுகளைக் கையாளுதல்.
- ✶ உலக வர்த்தகத்தில் வளர்ந்து வரும் நாடுகளின் வளர்ச்சியைப் பாதுகாத்தல்.

## 9. TRIPs மற்றும் TRIMs - சிறுகுறிப்பு எழுதுக.

**TRIPs - அறிவுசார் சொத்துரிமை தொடர்பான வர்த்தக உரிமைகள் :**

- ✶ அறிவுசார் பண்டங்களின் உரிமைகள் என்பது ஒரு வணிக மதிப்புடன் கூடிய தகவல். இந்த உரிமைகளில் ஏழு பகுதிகள் உள்ளன.

www.Padasalai.Net

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

**TRIMs - வர்த்தகம் தொடர்புடைய முதலீட்டு நடவடிக்கைகள் :**

✶ உள்நாட்டு தொழில்களின் வளர்ச்சிக்காக வெளிநாட்டு முதலீட்டிற்கு சில நிபந்தனைகள் அல்லது கட்டுபாடுகளை அரசு விதிக்ப்பது.

**10. உலகமயமாக்கலின் நேர்மறையான தாக்கத்தை எழுதுக.**

**உலகமயமாக்கலின் நேர்மறையான தாக்கம் :**

✶ வேகமான வர்த்தகம், வாழ்க்கைத் தரம், வேலை வாய்ப்புகள் அதிகரித்துள்ளது.

✶ புதிய தொழில்நுட்பங்கள், புதிய அறிவியல் ஆராய்ச்சி முறைகள் அறிமுகமாயின.

✶ மொத்த உள்நாட்டு உற்பத்தி, வெளிநாட்டின் நேரடி முதலீடு அதிகரித்துள்ளது.

## VI. விரிவான விடையளி.

**1. உலகமயமாக்கல் வரலாற்றை சுருக்கமாக எழுதுக.**

**உலகமயமாக்கலின் வரலாறு :**

✶ உலகமயமாக்கல் என்ற சொல்லை அறிமுகம் செய்தவர் தியோடோர் லெவிட்.

✶ உலகமயமாக்கல் வரலாற்று பின்னணியில் மூன்று நிலைகளைக் கொண்டுள்ளது.

**தொன்மையான உலகமயமாக்கல் :**

✶ சுமர் மற்றும் சிந்து சமவெளி நாகரிகங்கள் இடையே வர்த்தக உறவுகள் நிலவின.

✶ இந்தியாவுடன் கிரேக்கம் மற்றும் ரோம் பட்டு சாலை வழியாக வர்த்தகம் செய்தன.

**இடைப்பட்ட உலகமயமாக்கல் :**

✶ 16, 17 ஆம் நூற்றாண்டுகளில், ஐரோப்பிய பேரரசுகள் கடல் வழி வாணிபம் செய்தன.

✶ 1600 இல் முதல் பன்னாட்டு நிறுவனம் - பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனியை நிறுவினர்.

**நவீன உலகமயமாக்கல் :**

✶ உலகளாவிய வர்த்தக பொருளாதாரத்தில் மூலதனம் மற்றும் முதலீடு செய்யப்பட்டது.

✶ GATT மற்றும் WTO போன்ற பன்னாட்டு வர்த்தக ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**2. MNC இன் பரிமாண வளர்ச்சியை கூறி அதன் நன்மைகள் மற்றும் தீமைகளை சுருக்கமாக எழுதுக.**

**MNC இன் பரிமாண வளர்ச்சி :**

✶ 1920 களில் பன்னாட்டு நிறுவனங்கள் முதன் முதலில் இந்தியாவிற்குள் நுழைந்தன.

✶ 1950 களுக்கு பிறகு உற்பத்தி மற்றும் பணிகள் துறையில் MNC ஈடுபட தொடங்கின.

✶ அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், (ம) ஜெர்மனி இந்தியாவில் MNC வைத்துள்ளன.

✶ 1991 இல் இந்தியா அறிவித்த LPG கொள்கை வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஈர்த்தது.

**MNC இன் நன்மைகள் :**

✶ குறைந்த விலையில் தரமாகவும், பரிவர்த்தனை செலவு இல்லாமலும் உற்பத்தி செய்வது.

✶ விலைகளை குறைப்பதால் உலகளாவிய நுகர்வோரின் வாங்கும் சக்தி அதிகரிக்கிறது.

**MNC இன் தீமைகள் :**

✶ முற்றுரிமையை வளர்க்கவும், சுற்றுசூழலில் தீங்கினை உருவாக்கவும் வாய்ப்புள்ளது.

✶ பன்னாட்டு நிறுவனங்கள் சிறிய உள்ளூர் வணிகங்களின் வீழ்ச்சிக்கு வழிவகுக்கும்.

**3. தென்னிந்தியாவில் வர்த்தகம் மற்றும் வர்த்தகர்களை பற்றி சுருக்கமாக விளக்குக.**

**தென்னிந்தியாவில் வர்த்தகம் மற்றும் வர்த்தகர்கள் :**

✶ தென்னிந்தியாவில் வர்த்தகர்கள் வணிகக் குழுக்களை உருவாக்கி இருந்தனர்.

✶ தென்னிந்தியாவில் வர்த்தகம் சோழர்களிடம் இருந்து பல்லவர்களிடம் மாறியது.

✶ ஐரோப்பிய நிறுவனங்கள் இந்தியாவுடன் கடல்வழி வர்த்தகம் செய்ய முற்சித்தன.

✶ **போர்ச்சுகீசியர்கள்** - காலிகட், கொச்சின், கண்ணனூர் வர்த்தக நிறுவனங்கள்.

✶ **டச்சுக்காரர்கள்** - மசூலிப்பட்டினம், பெத்தபோலி, புலிகாட் வர்த்தக நிறுவனங்கள்.

✶ **ஆங்கிலேயர்கள்** - மசூலிப்பட்டினம், புலிகாட், சென்னை வர்த்தக நிறுவனங்கள்.

✶ **டேனிஷ்காரர்கள்** - டிராங்குபாரை தலைமையிடமாக கொண்ட வர்த்தக நிறுவனம்.

✶ **பிரெஞ்சுகாரர்கள்** - பாண்டிச்சேரியை தலைமையிடமாக கொண்ட வர்த்தக நிறுவனம்.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

### 4. "உலக வர்த்தக அமைப்பு" பற்றி எழுதுக.

**உலக வர்த்தக அமைப்பு (WTO) :**

- ✶ ஏப்ரல் 1994 இல் WTO அமைப்பதற்கான இறுதி ஒப்பந்தம் கையெழுத்தானது.
- ✶ WTO உடன்படிக்கையை ஏற்று 104 காட் உறுப்பு நாடுகள் கையெழுத்திட்டன.
- ✶ WTO உடன்படிக்கை ஜனவரி 1, 1995 முதல் நடைமுறைக்கு வந்தது.
- ✶ தற்போது உலக வர்த்தக அமைப்பில் 164 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளனர்.
- ✶ தலைமையகம் - ஜெனிவா. WTO ஐந்து வகையான மானியங்களை குறிப்பிடுகிறது.

**உலக வர்த்தக அமைப்பின் முக்கிய நோக்கம் :**

- ✶ அயல் நாட்டு வாணிபத்திற்கான விதிகளை அமைத்தல் மற்றும் செயல்படுத்தல்.
- ✶ உலக நாடுகள் இடையே எழுகின்ற வர்த்தகத் தகராறுகளைக் கையாளுதல்.
- ✶ உலக வர்த்தகத்தில் வளர்ந்து வரும் நாடுகளின் வளர்ச்சியைப் பாதுகாத்தல்.

### 5. உலகமயமாக்கலின் சவால்களை எழுதுக.

**உலகமயமாக்கலின் சவால்கள் :**

- ✶ உலகமயமாக்கலில் நன்மைகள் அனைத்து நாடுகளுக்கும் நீடிக்கப்பட வேண்டும்.
- ✶ உலகமயமாக்கல் கொள்கையை ஏற்ற நாடுகள் தன்னிச்சையாக செயல்பட முடியாது.
- ✶ வளர்ந்து வரும் உலகில் இது உறுதியற்ற தன்மைக்கு வழிவகுக்கும் என்ற அச்சம்.
- ✶ தொழில்துறை உலகில் உலகளாவிய போட்டி அதிகரித்து அமைதியற்ற சூழல் நிலவுவது.
- ✶ ஊதியங்கள், தொழிலாளர் உரிமைகள், வேலை வாய்ப்புகள் அடிமட்டத்திற்கு செல்வது.
- ✶ உலகளாவிய சமத்துவமின்மை அதிகரித்து ஒரு இக்கட்டான சூழ்நிலை காணப்படுவது.
- ✶ குழந்தை தொழிலாளர் மற்றும் அடிமைத்தனம் போன்ற நடவடிக்கைகள் அதிகரிப்பது.
- ✶ துரித உணவு பொருட்கள் பெருகி உடல்நலக் குறைவு, நோய் பரவுதல் அதிகரிப்பது.

---

**வாழ்த்துகளுடன்**
**மாணவர்கள் நலனுக்காக**

www.Padasalai.Net

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com